A FRIEND IN NEED

ENGLISH-TAMIL COOKERY BOOK

COMPILED BY
THE LADIES' COMMITTEE
F.I.N.S. Women's Workshop

Sold by the Secretary
F.I.N.S. WOMEN'S WORKSHOP
Mount Road **Madras**

Second Edition

MADRAS
DIOCESAN PRESS, VEPERY
1938

91563

INTRODUCTION

I

Scene.—**The matey room at 8 a.m.**

Enter Madam, temper slightly frayed, obvious touch of liver.

Madam.—' Boy, that pudding last night was simply foul. Tell cook.'

Butler.—(*translating in Tamil*). ' The doraisani says that the pudding was too simple and had a taste like a chicken.'

Madam.—' Tell him that it ought to have been as light as a feather, but it was as heavy as lead.'

Butler.—(*translating in Tamil*). ' The doraisani says that the pudding instead of weighing half tola like a chicken's feathers, weighed two seers like a lead piece.'

Cook.—(*in Tamil*). ' It wasn't my fault if the pudding was wrong. You only gave me one egg instead of three, but I don't see why that should make it taste like a chicken.'

Butler.—(*translating in English*). ' Cook say he very sorry, but dinner very late and pudding all got spoilt.'

Madam.—' Well, he's fined one rupee.'

Butler.—(*translating in Tamil*). ' Doraisani says one rupee fine.'

Cook.—(*bursting into English*). ' Madam give salary. I go!'

(*curtain*)

II

It is to prevent such scenes as the foregoing that the *Friend-in-Need Cookery Book* is designed. We claim that it will place the mistress in direct communication with the cook and enable the cook to understand his instructions first hand.

We launch this our Second Edition full of the hope that it will be welcomed with all the cordiality which greeted its predecessor.

Although we are conscious of its imperfections we are sure that it fills a gap in the domestic economy of many households.

We have taken advantage of the demand for a second edition to correct a few errors which escaped our vigilance and to add numerous recipes since collected, which will help to make the book more comprehensive.

As we said in the introduction to our first edition, the recipes are for the most part old favourites of members of the Committee, but if any of them, taken from private collections, should have originated in published sources, the Committee hope that their lack of acknowledgment will be pardoned.

We wish to acknowledge the kindness and patience of Miss V. K. Black, Educational Secretary of the Christian Literature Society, who has supervised the difficult task of translating the recipes into the sort of Tamil our cooks will understand. Many words used in English cookery have no Tamil equivalent and therefore are merely transliterated. Our thanks are also due to Miss Warren, the artist who is responsible for our most successful cover and frontispiece.

The profits from the sale of this book will be entirely devoted to a most worthy object, The F. I. N. S. Women's Workshop in Madras. Readers may feel that they are helping a good cause and at the same time getting something for their money that should effect an enormous saving in time, money, nervous energy and indigestion. If Our Cookery Book does this, it will truly be a Friend in Need.

ELLA NUTTALL,
Chairman,
F. I. N. S. Women's Workshop,
Madras.

December, 1938.

CONTENTS

	Page
Hors d'oeuvres	2
Soups	22
Fish	44
Breakfast and Lunch Dishes	70
Meats	102
Stuffings	138
Sauces	148
Salads	170
Savouries	182
Pastry	206
Puddings—Hot	216
,, —Cold	238
Ices	254
Cakes—Large	266
,, —Small	280
Scones	292
Sweets	304
Household Hints	320
Weights and Measures	326

HORS D'ŒUVRES OR APPETISERS

1. CHEESE WAFERS

4 tablespoons flour.
1 oz. butter.
Pinch of salt.
Cold water.

Wafers.

Rub butter into flour, add salt, and make into dough with water. Roll out very thin, cut into rupee size rounds, and bake in quick oven till rising. Then leave in cool oven about 1 hour to dry.

Filling.

Gorgonzola cheese.
Butter.
Mayonnaise sauce.
Pepper and salt.

Cream cheese and butter together, add mayonnaise and seasoning, put a little of the mixture between two wafers.

2. SAVOURY BISCUITS

Cheese

3 ozs. flour.
1 oz. butter.
1 oz. grated cheese.
1 yolk of egg.
Pepper.
Salt.
Cayenne.
Water if necessary.

Add salt and pepper to flour. Rub butter in finely. Add grated cheese and enough yolk of egg and water to make a stiff dough. Roll pastry thin and cut into biscuits. Prick well to prevent rising. Bake in quick oven (10 mins.).

Celery

Flour, butter, egg, pepper and water as above.
2–3 teaspoons celery salt.

Add the pepper and celery salt to the flour. Rub in the butter finely. Mix with yolk of egg to a stiff dough and proceed as above.

ஆர்ட்யுர் அல்லது அப்பிட்டைஸர்ஸ்

1. சீஸ் வேஃபர்ஸ்

4 மேசைக்கரண்டி மாவு. | 1 சிட்டிக்கை உப்பு.
1 அவு. வெண்ணெய். | தண்ணீர்.

வேஃபர்ஸ்

வெண்ணெயைக் கலந்து, மாவைப் பிசைந்து, உப்பு சேர்த்துத் தண்ணீர் கொஞ்சம் ஊற்றிப் பிசைந்துகொண்டு, மெல்லியதாய் அப்பளம்போல் இட்டுக் கொண்டு, அதை ரூபாய் அளவு வட்டங்களாக நறுக்கி, தீவிரத் தீயுள்ள அடுப்பில் உப்பும்வரை பேக் பண்ணி, பிறகு நிதான தீயுள்ள அடுப்பில் நன்ருய்க் காயும்படி சுமார் ஒரு மணி நேரம் விட்டுவை.

பூரணம் வைத்தல்

கார்கன்சோலா சீஸ். | மெயொனெஸ் ஸாஸ்.
வெண்ணெய். | மிளகுதூள், உப்பு.

சீஸையும் வெண்ணெயையும் சேர்த்து க்றீம் ஆக்கி, உப்பு மிளகு மெயொனெஸ் சேர்த்து இரண்டு பிஸ்கெட்களுக்கு இடையே அக்கலவையில் கொஞ்சம் வைத்து நிரப்பு.

2. சேவரி பிஸ்கேட்ஸ்

சீஸ்

3 அவு. மாவு. | மிளகுதூள்.
1 அவு. வெண்ணெய். | உப்பு.
1 அவு. துருவிய சீஸ். | கயன்.
1 முட்டையின் மஞ்சள் கரு. | வேண்டுமாஞல் தண்ணீர்.

மாவில் உப்பும் மிளகுதூளும் சேர்த்து வெண்ணெயைச் சேர்த்துக் கெட்டி யாய்ப் பிசைந்துகொள். அதன் பின் துருவிய சீஸும், போதுமான மஞ்சள் கருவும் (தண்ணீரும்) சேர்த்து, அதிக கெட்டியான மாவாகப் பிசைந்துகொண்டு மெல்லியதாய் அப்பளம்போல் இட்டுக்கொண்டு, உப்பாதபடி குத்திவிட்டுக் கொண்டு தீவிரத் தீயுள்ள அடுப்பில் 10 நிமிஷம் பேக் பண்ணு.

சேலெரி

மாவு. | மிளகுதூள்.
வெண்ணெய். | தண்ணீர்.
முட்டை. | 2–3 தேக்கரண்டி செலெரி உப்பு.

மாவில் மிளகும் செலெரி உப்பும் சேர்த்து, வெண்ணெயைக் கலந்து நன்ருய்ப் பிசைந்துகொண்டு, முட்டை மஞ்சள்கரு சேர்த்து, அதிக கெட்டி மாவாகப் பிசைந்துகொண்டு சேவரி பிஸ்கெட்ஸுக்குச் செய்ததுபோல் செய்யவும்.

3. ANCHOVY BISCUITS

3 ozs. flour.
1½ ozs. butter.
Anchovy sauce.
Cayenne pepper.

Mix flour and pepper, rub the butter into the flour. Mix to a stiff dough with the anchovy sauce. Roll out thin and cut into biscuits. Prick well to prevent rising. Bake in quick oven (10 mins.)

N.B.—These biscuits when cut in rounds about the size of a rupee make an excellent foundation for cheese mixtures, etc., and for 'snacks'.

4. RAISIN AND CHEESE FILLING

4 ozs. seedless raisins.
4 ozs. cream cheese.
8 pickled onions.
½ teaspoon horse radish sauce.
1 oz. butter.
Few drops of tobasco sauce.

Cut the raisins with small scissors. Chop the onions, cream the butter and cheese and add the other ingredients. Use in sandwiches or on small biscuits or rounds of buttered toast.

5. SARDINE TOAST

1 tin sardines.
Red pepper and salt.
1 egg yolk.
Rounds or fingers of bread.

Remove the bones from the sardines, mash and add the egg yolk and seasoning. Spread on small pieces of bread and fry in deep fat, drain and serve at once very hot.

3. அன்சவி பிஸ்கெட்ஸ்

3 அவு. மாவு. 1½ அவு. வெண்ணெய்.
அன்சவி ஸாஸ். கயன் மிளகு.

மாவும், மிளகும் கலந்து அதில் வெண்ணெயைப் போட்டு, நன்ருய்ப் பிசைந்துகொண்டு அன்சவி ஸாஸ் ஊற்றிக் கெட்டிப் பேஸ்டாகப் பிசைந்துகொண்டு மெல்லியதாய் அப்பளம்போல் இட்டுக்கொண்டு பிஸ்கெட்களாக அறுத்து, உப்பாதபடி குத்திவிட்டு தீவிரத் தீயுள்ள அடுப்பில் 10 நிமிஷம் பேக் பண்ணு.

குறிப்பு:—இந்தப் பிஸ்கெட்களை சுமார் ரூபாய் அளவு வட்டங்களாக அறுத்துக்கொண்டால் இந்த பிஸ்கெட்கள் மற்ற சேவரிகளுக்குச் சிறந்த அஸ்திபாரங்களாகும்.

4. ரேஸின் அண்ட் சீஸ் ஃபில்லிங்

4 அவு. கொட்டையில்லாத ரேஸின்ஸ். 4 அவு. க்ரீம் சீஸ்.
8 பிக்கில்ட் அனியன்ஸ். ½ தேக்கரண்டி ஹார்ஸ் ராடிஷ் ஸாஸ்.
1 அவு. வெண்ணெய். சில துளி டொபாஸ்கோ ஸாஸ்.

ரேஸின்களை ஒரு சிறு கத்தரிக்கோலால் கத்தரித்துக்கொள். வெங்காயத்தை நறுக்கிக்கொள். வெண்ணெயையும் சீஸையும் சேர்த்துக் க்ரீமாக்கி அதில் மற்றச் சரக்குகளையும் சேர்த்துக்கொள். அதை ஸாண்ட்விச்களில் உபயோகி. அல்லது சிறு பிஸ்கெட்கள் மேலாவது வெண்ணெய் தடவி, தோஸ்ட்செய்த ரொட்டித்துண்டுகளின் மீதாவது வைத்துப் பரிமாறு.

5. ஸார்டின் தோஸ்ட்

ரொட்டி பில்லை பில்லையாய் அல்லது நீட்டுத்துண்டுகளா யறுத்தது.
1 டின் ஸார்டின்ஸ். 1 முட்டை மஞ்சள் கரு.
ரெட் பெப்பர், உப்பு.

ஸார்டின்களிலிருந்து எலும்புகளை எடுத்துவிட்டு, சதையை மசித்து, முட்டை மஞ்சள் கருவைச் சேர்த்து, உப்பும் மிளகுதூளும் சேர்த்து, சின்ன ரொட்டித் துண்டுகளில் தடவி, கொழுப்பு நிறைய உள்ள பாத்திரத்தில் போட்டுப் பொரித்து, அத்துண்டுகளிலுள்ள கொழுப்பை இறுத்துவிட்டு உடனே உஷ்ணமாகவே பரிமாறு.

6. CHEESE CRUMB CROQUETTES

1 cup cream cheese or any grated cheese.
1 cup sieved bread-crumbs.
1 beaten egg.
Worcester Sauce to taste.

Mix ingredients thoroughly. Shape into marbles. Fry in deep smoking hot fat till golden brown. Drain. Serve at once spiked with cocktail stick.

7. MOCK CRAB PASTE

¼ lb. cheddar cheese.
¼ lb. tomatoes.
1 egg.
Salt and pepper.

Skin and cut up tomatoes and place with cheese and seasoning in a double saucepan. When melted, add beaten egg. Stir till thick, cooking slowly so that it does not curdle. Put mixture in a jar and it will keep for some time in an ice box. Spread on rounds of bread or use in sandwiches when required.

8. CHEESE BOATS

6 bridge rolls or pastry boats.
6 ozs. cheese.
1 teaspoon mustard.
1 tablespoon vinegar.
Milk or cream.

Grate cheese, add mustard and vinegar and make into a smooth paste with milk or cream. Scoop out centre of bridge roll and fill with mixture, pastry boats may be made and used instead of rolls.

Garnish by making sails of wafer paper.

Alternative Filling

1 packet cream cheesé.
½ oz. butter.
1½ dessertspoons chopped walnuts.
1½ teaspoons chopped gherkins.

Mix all together into a paste, and fill boats.

6. சீஸ் க்றம் க்ரேக்கெட்ஸ்

1 கோப்பை க்றீம் சீஸ் அல்லது துருவிய சீஸ் எதாவது
1 கோப்பை சலித்த ரொட்டித்தூள்.
1 முட்டை அடித்தது.
ஊஸ்டர் ஸாஸ் (ருசிக்கு).

மேலே கண்ட சரக்குகளை நன்றாய்க் கலந்துகொண்டு, கோலிக்குண்டுகளைப் போல் உருட்டிக்கொள். பிறகு புகை வரும்படி நன்றாய்க் காய்ந்து அதிகமாயுள்ள கொழுப்பில் பொன்சிவப்பாகும்வரை பொரித்து எடுத்து, பொரியலிலுள்ள கொழுப்பை இறுத்துவிட்டு காக்டெயில் கொம்பில் குத்தி எடுத்து உடனே பரிமாறு.

7. மாக் க்றப் பேஸ்ட்

$\frac{1}{4}$ பவு. செடர் சீஸ்.
$\frac{1}{4}$ பவு. தொமாட்டோஸ்.
1 முட்டை.
உப்பும் மிளகுதூளும்.

தொமாட்டோ பழங்களைத் தோலுரித்து நறுக்கிக்கொண்டு சீஸ், உப்பு, மிளகுதூள் இவைகளோடு ஒரு இரட்டை ஸாஸ்பானில் போட்டு உருகும்போது அடித்த முட்டையைச் சேர்த்து, கட்டியும் தண்ணீருமாய்ப் போகவிடாமல் நிதானமாய் வேகவைத்துக்கொண்டே தடிப்பாகும்வரை கிளறு. அக்கலவையை ஒரு ஜாடியில் போட்டு ஐஸ் பெட்டியில் வைத்தால் சிலநாள்வரைக் கெட்டுப் போகாமல் இருக்கும். பில்லையாய் அறுத்த ரொட்டித்துண்டுகளில் வேண்டிய போது இக்கலவையைத் தடவிக்கொள்ளலாம்.

8. சீஸ் போட்ஸ்

6 பிரிட்ஜ் ரோல்ஸ் அல்லது பேஸ்ட்றி போட்ஸ்.
6 அவு. சீஸ்.
1 தேக்கரண்டி மஸ்டர்ட்.
1 மேசைக் கரண்டி வினிகர்.
பால் அல்லது க்றீம்.

சீஸைத் துருவிக்கொண்டு, மஸ்டர்டும் வினிகரும் சேர்த்து, அதன்பின் பால் அல்லது க்றீமைச் சேர்த்து, கட்டிகள் இல்லாத தளர்ந்த பேஸ்ட் ஆக்கிக் கொள். பிரிட்ஜ் ரோலின் மத்திய பாகத்தைக் குடைந்து எடுத்துவிட்டு, அந்தப் பேஸ்டால் நிரப்பு; அல்லது படவு வடிவமாய்ச் செய்த பேஸ்ட்றியை உபயோகி.

பாய்மரங்களைப்போல் வேஃபர் பேப்பர்களை வைத்து அலங்கரி.

அதற்குப் பதிலாக பூரணம்

1 பேக்கட் க்றீம் சீஸ்.
$\frac{1}{2}$ அவு. வெண்ணெய்.
$1\frac{1}{2}$ டெசற்ட் கரண்டி சிறு துண்டுகளாய் வெட்டிய வால்நட்ஸ்.
$1\frac{1}{2}$ தேக்கரண்டி நறுக்கிய கற்கின்ஸ்.

அவற்றையெல்லாம் பேஸ்டாகக் கலக்கிக்கொண்டு அப்படவுகளில் நிரப்பலாம்.

9. CHEESE ONIONS

Kraft or cheddar cheese. Cocktail sticks.
Pickled onions.

Cut cheese into ½ inch square cubes. Place a pickled onion on top, and spike both together with cocktail stick.

10. ANGELS ON HORSEBACK

12 oysters.
12 small thin slices bacon.
12 rounds of fried bread.
½ teaspoon minced shallot.
½ teaspoon minced parsley.
Lemon juice.
Pepper.

Beard oysters, trim bacon, cutting each piece large enough to roll round oyster, season with pepper and sprinkle with a little chopped shallot and parsley. Lay an oyster on each, add a few drops lemon juice, roll up tightly and hold together with a cocktail stick or piece of thread. Fry or bake in a hot oven just long enough to crisp bacon, and serve on bread.

11. SARDINE APPETIZER

½ cup sardines (drained and minced).
4 tablespoons chopped stuffed olives.
½ teaspoon onion juice.
½ tablespoon chopped parsley.
½ tablespoon lemon juice.
1½ tablespoons cream.

Mix above ingredients, spread on small rounds buttered bread or puff biscuits, and garnish with stuffed olives.

9. சீஸ் அனியன்ஸ்

க்ராஃப்ட் அல்லது செடர் சீஸ். காக்டெயில் ஸ்டிக்ஸ்.
பிக்கில்ட் அனியன்ஸ்.

சீஸை ½ கன அங்குல சதுர துண்டுகளாக நறுக்கிக்கொண்டு, அத்துண்டுகளில் ஒவ்வொன்றின்மீதும் ஒரு பிக்கில்ட் அனியனை வைத்து, அவ்விரண்டையும் சேர்த்து காக்டெயில் குச்சியில் குத்திவை.

10. என்ஜல்ஸ் ஆன் ஹார்ஸ்டாக்

12 ஆய்ஸ்டர்ஸ்.
12 கொழுப்பில்லாத சின்ன பேக்கன் பில்லைகள்.
12 பொரித்த ரொட்டி பில்லைகள்.
½ தேக்கரண்டி நறுக்கிய ஷெலாத்.
½ தேக்கரண்டி நறுக்கிய பார்ஸ்லி.
எலுமிச்சம்பழ ரசம்.
மிளகுதூள்.

ஆய்ஸ்டர்களின் தாடியை எடுத்துவிட்டு, பேக்கன் ஓரத்தைச் சீராய் அறுத்துக்கொண்டு, ஆய்ஸ்டரைச் சுற்றி மூடத்தக்க அளவு பெரிய துண்டுகளாக அறுத்துக்கொண்டு, அதில் மிளகுதூளும் நறுக்கிய ஷெலாத்தும், பார்ஸ்லியும் சேர்த்துக்கொள். பிறகு ஒவ்வொரு பேக்கன் துண்டிலும் ஒரு ஆய்ஸ்டர் வைத்து, ஒவ்வொன்றிலும் சில துளி எலுமிச்சம்பழ ரசம் விட்டுக் கெட்டியாய்ச் சுருட்டி காக்டெயில் குச்சியில் குத்தி அல்லது நூலில் கட்டிப் பொரித்து அல்லது தீவிர தீயுள்ள அடுப்பில் வைத்து பேக்கன் மொருமொரு வென்றாகும்வரை பேக் பண்ணி ரொட்டியின்மேல் பரிமாறு.

11. சார்டின் அப்பிட்டைஸர்

½ கோப்பை சார்டின்ஸ் நன்றாய் வடித்துக் கொத்தினது.
4 மேசைக்கரண்டி கொத்தின ஸ்டஃப்ட் ஆலிவ்ஸ்.
½ தேக்கரண்டி வெங்காயச்சாறு.
½ மேசைக்கரண்டி நறுக்கின பார்ஸ்லி.
½ மேசைக்கரண்டி எலுமிச்சம்பழரசம்.
1½ மேசைக்கரண்டி க்றீம்.

மேலே சொன்ன சரக்குகளைக் கலந்துகொண்டு, வெண்ணெய் தடவிய ரொட்டி பில்லைகளில் அல்லது பஃப் பிஸ்கெட்களில் பரப்பி, பில்லைகளாக நறுக்கிய ஸ்டஃப்ட் ஆலிவ்ஸைக்கொண்டு அலங்கரி.

12. CAVIARE CANAPÉS

2 ozs. butter.
Rounds of bread fried or plain.
2 heads watercress.
Salt.
Cayenne.
Caviare.
Lemon juice.

Wash watercress, pick off leaves and dry in a cloth. Then chop very small. Work butter on a plate with knife, add cress and season well. Add a few drops lemon juice and keep in a cold place. Spread the bread rounds with the green butter, then with a layer of caviare. Squeeze a little lemon juice over and serve.

13. SALTED ALMONDS

Almonds.
Salt.
A little clarified butter or salad oil.

Blanch almonds and dry them. Melt butter in a clean baking tin, add almonds and put in a moderate oven till brown, turning frequently. Turn almonds on to white kitchen paper and sprinkle with table salt. When cold, shake off any surplus salt, and serve.

Any nuts may be used in this manner and will keep if put in a tightly corked bottle.

14. STUFFED OLIVES

Olives.
Pepper.
Salt.
Cheese.
Butter.
Yolk of hardboiled egg.

Pound all ingredients together, and season. Stone olives and fill with mixture, and place each olive on a small round of buttered bread. If liked, a ring cut from beetroot or hardboiled white of egg may be placed on bread before putting olive on

12. கவ்யார் கனபே

2 அவு. வெண்ணெய்.	எலுமிச்சம்பழ ரசம்.
ரொட்டித்துண்டுகள் பொரித்தது அல்லது பொரிக்காதது.	உப்பு.
	கயன்.
2 வாட்டற்க்றஸ் நுனிகள்.	கவ்யார்.

வாட்டற்க்றஸைக் கழுவி இலேகளைப் பறித்தெடுத்து ஒரு துணியில் உலரவை. பிறகு அவ்விலைகளை சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள். ஒரு ப்ளேட்டில் கத்தியினுல் வெண்ணெயை நன்ருய்த் தடவி, இலைகளைச் சேர்த்து, நன்ருய் உப்பு காரம் சேர்த்து, எலுமிச்சம்பழ ரசம் சில துளிகள் அதில் விட்டுக் குளிர்ச்சியான இடத்தில் வைத்துக்கொள். ரொட்டித்துண்டுகளில் பச்சை வெண்ணெயைத் தடவு. அதன்மேல் ஒரு வரிசை கவ்யாரைத் தடவு. அதன்மேல் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசத்தைப் பிழிந்து பரிமாறு.

13. சால்ட்டேட் ஆமெண்ட்ஸ்

வாதுமைப் பருப்பு. உப்பு.
கொஞ்சம் நெய் அல்லது சலட் எண்ணெய்.

வாதுமைப்பருப்பை வெந்நீரில் ஊறவைத்துத் தோலுரித்து உலர வை. சுத்தமான பேக்கிங் டின்னில் வெண்ணெயை உருக்கி அதில் தோலுரித்து உலர்த்திய வாதுமைப்பருப்பைப் போட்டு, நடுத்தரத்தீயுள்ள அடுப்பில் அடிக்கடி திருப்பிக் கொண்டே சிவக்கும்வரை பொரித்து எடுத்து ஒரு வெள்ளைக் காகிதத்தில் போட்டு அதில் டேபில் ஸால்ட்டைத் தூவி வை. ஆறினபின் அதிகமாயுள்ள உப்பையெல்லாம் உதிர்த்துவிட்டுப் பரிமாறு.

எவ்விதக் கொட்டைப்பருப்புகளையும் இதேமாதிரி செய்யலாம். கெட்டி கார்க்குள்ள புட்டியில் எடுத்துவைத்துக்கொண்டால் சிலநாள் கெடாமலிருக்கும்.

14. ஸ்டஃப்ட் ஆலிவ்ஸ்

ஆலிவ்ஸ்.	சீஸ்.
மிளகுதூள்.	வெண்ணெய்.
உப்பு.	கெட்டியாய் வெந்த முட்டை மஞ்சள்கரு.

சீஸ், வெண்ணெய், கெட்டியாய் வெந்த மஞ்சள்கரு இவைகளைச் சேர்த்து நன்ருய் இடித்து, உப்பும் மிளகுதூளும் சேர்த்துக் கலந்துகொண்டு, ஆலிவ்கள் ஒவ்வொன்றிலும் கொட்டையை எடுத்துவிட்டு அக்கலவையை நிரப்பி, ரொட்டியைத் துண்டுகளாக அறுத்து வெண்ணெய் தடவி, ஒவ்வொரு துண்டின்மேலும் ஒரு ஆலிவ் வை. இஷ்டமானுல் பீட்ரூட் அல்லது கெட்டியாய் வெந்த முட்டையின் வெள்ளைக் கருவை வளையங்களாக அறுத்து ஒவ்வொரு ரொட்டித்துண்டின் மேலும் ஒரு வளையமும் அதன்மேல் ஒரு ஆலிவுமாக வைக்கலாம்.

15. CREAM CHEESE CANAPÉS

Equal quantities of butter and cheese.
Small rounds of bread or toast.
Pepper and salt.
Watercress or parsley.

Cream butter and cheese together. Season to taste, and spread on rounds of bread or savoury biscuits. Garnish with cress.

16. ASPARAGUS ROLLS

Asparagus tips.
Pepper and salt.
Bread and butter slices.
Mayonnaise sauce.

Cut small squares of thin bread and butter. Sprinkle with seasoning to taste, place on each an asparagus tip dipped in mayonnaise, roll up and wrap in pieces of greaseproof paper, to serve.

17. CELERY TIT-BITS

A head of celery.
Cream cheese.
Chopped nuts.
Pepper.
Mayonnaise sauce.
Salt.

Wash and clean celery. Cut into 2 inch lengths. Scoop a little groove lengthwise and fill with finely chopped nuts and cream cheese well mixed. Season, and place each on a piece of buttered bread or serve alone.

18. OLIVE AND NUT CANAPÉS

Olives.
Mayonnaise.
Nuts.
Sliced cucumber.
Pepper and salt.

Chop fine an equal number of olives and nuts, mix with a little mayonnaise. Butter some rounds of bread, on each place a slice of cucumber, sprinkle with pepper and salt and cover with olive and nut mixture.

15 க்றீம் சீஸ் கனபே

சரி பங்கு சீஸூம் வெண்ணெயும். ஸ்லைஸ்களாய் அறுத்த ரொட்டி
வாட்டர்க்றஸ் அல்லது பார்ஸ்லி. அல்லது தோஸ்ட்.
உப்பும் மிளகுதூளும்.

வெண்ணெயும் சீஸூம் சேர்த்து க்றீம் ஆக்கிக்கொள். அதில் உப்பும் மிளகும் சேர்த்து அதை ரொட்டித்துண்டுகள் அல்லது சேவரி பிஸ்கெட்களின்மீது தடவி, க்றஸைக் கொண்டு அலங்கரி.

16. அஸ்பரகஸ் ரோல்ஸ்

அஸ்பரகஸ் திப்ஸ். மிளகுதூளும் உப்பும்.
வெண்ணெய் தடவிய ரொட்டித்துண்டுகள். மெயொனெஸ் ஸாஸ்.

வெண்ணெய் தடவிய மெல்லிய ரொட்டித்துண்டுகளைச் சிறு சிறு சதுர துண்டுகளாக நறுக்கிக்கொண்டு அத்துண்டுகளில் உப்பும் மிளகுதூளும் தெளித்து, ஒவ்வொரு துண்டின்மேலும் மெயொனெஸில் தோய்த்த அஸ்பரகஸ் திப்ஸில் ஒவ்வொன்று வைத்துச் சுருட்டி, கொழுப்பு ஊறுத காகித துண்டுகளில் வைத்துச் சுருட்டிப் பரிமாறு.

17. செலேரி தித்—பித்ஸ்

1 செலெரி நுனி. க்றீம் சீஸ்.
தூளாக்கிய வாதுமை முதலிய பருப்பு. உப்பு.
மெயொனெஸ் ஸாஸ். மிளகுதூள்.

செலெரியைக் கழுவிச் சுத்தம் செய்து 2 அங்குலத் துண்டுகளாக அரிந்து கொண்டு, அத்துண்டுகளில், தூளாக்கிய பருப்புகளையும் க்றீம் சீஸையும் நன்றாய்க் கலந்து, நிரப்பி, உப்பும் மிளகுதூளும் சேர்த்து ஒவ்வொரு துண்டையும் வெண்ணெய் தடவிய ரொட்டித்துண்டின்மீது வைக்கவும். அல்லது தனியாகப் பரிமாறவும்.

18. ஆலிவ் அண்டு நட் கனபே

ஆலிவ்ஸ். மெயொனெஸ்.
நட்ஸ். பில்லைகளாயரிந்த குக்கம்பர்.
உப்பும், மிளகுதூளும்.

சரி எண்ணிக்கை ஆலிவ்ஸூம் வாதுமை முதலிய பருப்புகளும் எடுத்துக் கொண்டு சன்னமாய் நறுக்கி, கொஞ்சம் மெயொனெஸில் கலந்துகொள். சில ரொட்டித்துண்டுகளில் வெண்ணெய் தடவி, ஒவ்வொரு துண்டின்மேலும் ஒரு குக்கம்பர் பில்லையை வைத்து உப்பும் மிளகுதூளும் தூவி அதன்மேல் அக்கலவை யூற்றி மறை.

19. CHEESE PUFF BISCUITS

2 egg whites. ¼ lb. grated cheese.
1 egg yolk. Salt and paprika to taste.
12 butter puff biscuits.

Beat egg whites very stiff, add beaten egg yolk, seasoning and grated cheese. Spread quickly on butter puff biscuits and place under grill or in a hot oven a few minutes until mixture puffs and becomes slightly brown.

20. CHEESE STRAWS

1 cup flour. 4 tablespoons butter.
½ cup grated cheese. ½ teaspoon baking powder.
Yolk of 1 egg. Pinch of salt and cayenne.

Sift flour and baking powder, rub in butter; add cheese and cayenne, and moisten with egg yolk and a little cold water if necessary to form a dough. Turn out on floured board, roll thinly and cut into fingers. Place on baking sheet and bake in moderate oven for 10 minutes.

21. COCKTAIL SAUSAGES

Cocktail sausages. Cocktail sticks.
Beef dripping or margarine.

Fry the sausages in hot beef dripping or margarine. Spike each with a cocktail stick and serve hot.

22. PEANUT SNACKS

Mix some peanut butter and chopped fried bacon well together and serve on small biscuits or wafers.

19. சீஸ் பஃப் பிஸ்கெட்ஸ்

2 முட்டை வெள்ளைக்கரு.
1 முட்டை மஞ்சள்கரு.
¼ பவு. துருவிய சீஸ்.
ருசிக்கு உப்பும் பாப்ரிக்காவும்.
12 பட்டர் பஃப் பிஸ்கெட்ஸ்.

முட்டை வெள்ளைக்கருவுகளைக் கெட்டியாய் அடித்து, முட்டை மஞ்சள் கருவை அடித்து அதில் சேர்த்துக்கொண்டு அதில் உப்பும், பாப்ரிக்காவும், துருவிய சீஸூம் சேர்த்து அதை உடனே பட்டர் பஃப் பிஸ்கெட்களின்மீது பரப்பி, அக்கலவை பொங்கிக் கொஞ்சம் சிவக்கும்வரை க்றில்லின்கீழ் அல்லது தீவிரத்தீயில் சில நிமிஷம் வை.

20. சீஸ் ஸ்ற்றுஸ்

1 கோப்பை மாவு.
½ கோப்பை துருவிய சீஸ்.
1 முட்டை மஞ்சள் கரு.
4 மேசைக்கரண்டி வெண்ணெய்.
½ தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
1 சிட்டிக்கை உப்பும் கயனும்.

மாவையும் பேக்கிங் பவுடரையும் சலித்துக்கொண்டு, வெண்ணெயோடு விரல்களால் நன்ருய்ப் பிசைந்து, சீஸூம் கயனும் சேர்த்து மஞ்சள் கருவும் வேண்டுமாளுல் கொஞ்சம் தண்ணீரும் போட்டு ஈரமாக்கிக்கொண்டு, மாவு பிசையும் பலகையில் போட்டு மெல்லியதாகத் திரட்டி விரல் நீளத்துண்டுகளாகச் செய்து பேக்கிங் காகிதத்தில் வைத்து நடுத்தரத் தீயுள்ள அடுப்பில் 10 நிமிஷநேரம் பேக் பண்ணு.

21. காக்டேயில் ஸாஸேஜஸ்

காக்டெயில் ஸாஸேஜ்கள்.
காக்டெயில் குச்சிகள்.
பீஃப் ட்றிப்பிங் அல்லது மார்கரீன்.

சூடாயுள்ள பீஃப் ட்றிப்பிங் அல்லது மார்கரீனில் ஸாஸேஜ்களைப் பொரித்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் ஒரு காக்டெயில் குச்சியைச் சொருகி, சூடாகவே பரிமாறு.

22. பீநட் ஸ்றக்ஸ்

கொஞ்சம் பீநட்டும், வெண்ணெயும், கொத்திப் பொரித்த பேக்கனும் நன்ருய்க் கலந்து சின்ன பிஸ்கெட் அல்லது வேஃபர்மீது வைத்துப் பரிமாறு.

23. CHEESE AND CELERY BISCUITS

3 ozs. cream,
1 oz. grated cheese.
1 tablespoon chopped celery,
Seasoning.

Mix together and whip until stiff. Pile on to cheese biscuits, dust lightly with red pepper.

24. CHEESE STICKS

Roll some short pastry very thin and cut in half. Spread one half with a thin layer of cream cheese and place the other half over the top. Cut in fingers and bake 10 or 15 minutes. Serve as appetisers or with soup.

25. MELON COCKTAIL

Dice the melon, place in cocktail glasses, add a little sherry, lemon juice and sugar: garnish with mint.

26. PRAWN COCKTAIL

Cooked prawns,
2 tablespoons tomato ketchup.
1 tablespoon cream.
1 teaspoon Worcester Sauce.
A dash of tobasco.

Clean and cook the prawns and place sufficient for each person in a cocktail glass and cover with the sauce made from the above ingredients. This quantity of sauce should be enough for one large or two medium portions.

27. POTTED SNIPE PASTE

Steam, or cook in a covered casserole with a little water 3 or 4 snipe very slowly. When tender, remove all the meat from the bones, pound and put through a sieve, add butter, 1 oz. to each snipe, and seasoning, mix well. Press into a glass dish or bowl and run a little melted butter over the top.

23. சீஸ் அண்ட் செலேரி பிஸ்கெட்ஸ்

3 அவு. க்றீம். 1 மேசைக்கரண்டி நறுக்கிய செலெரி.
1 அவு. துருவிய சீஸ். உப்பும் மிளகுதூளும்.

எல்லாவற்றையும் ஒன்ருய்க் கலந்து கெட்டிப்படும்வரை நன்ருய் அடித்து சீஸ் பிஸ்கெட்களின்மீது குவியலாக வைத்து அதன்மீது ரெட் பெப்பரைக் கொஞ்சமாய்த் தூவு.

24. சீஸ் ஸ்டிக்ஸ்

கொஞ்சம் ஷார்ட் பேஸ்ட்றியை மெல்லியதாய் அப்பளம் போலிட்டு இரண்டாக வெட்டிக்கொள். ஒரு பகுதியின்மீது க்றீம் சீஸை மெல்லியதாய் ஒரு வரிசை பரப்பி அப்பளத்தின் மற்ரெருரு பகுதியை அதன்மேல் வைத்து விரல் போல் நீட்டுத் துண்டுகளாக அரிந்து 10 அல்லது 15 நிமிஷம் வரை பேக் பண்ணி ஆர்டெவ்ராகவோ அல்லது சூப்போடுகூடவோ பரிமாறு.

25. மெலேன் காக்டேய்ல்

மெலேனை சிறு துண்டுகளாக நறுக்கி காக்டெய்ல் க்ளாஸ்களில் வைத்துக் கொஞ்சம் ஷெறியும் எலுமிச்சப்பழ ரசமும் சர்க்கரையும் சேர்த்து மின்டால் அலங்கரித்துப் பரிமாறு.

26. ப்ரான் காக்டேய்ல்

சமைந்த ப்ரான்கள்

2 மேசைக்கரண்டி தொமாட்டோ கெச்சப். 1 தேக்கரண்டி ஊஸ்டர் ஸாஸ்.
1 மேசைக்கரண்டி க்றீம். கொஞ்சம் டொபாஸ்கோ.

ப்ரான்களைச் சுத்தம்பண்ணிச் சமைத்து ஒவ்வொருவருக்கும் போதுமான அளவு ஒரு காக்டெய்ல் க்ளாஸில் வைத்து மேல்கண்ட சரக்குகளால் செய்த ஸாஸால் மூடு. ஒரு பெரிய அல்லது 2 நடுத்தர பங்குகளுக்கு ஸாஸ் போதுமானதாயிருக்கவேண்டும்.

27. பாட்டேட் ஸ்னைப் பேஸ்ட்

3, 4 ஸ்னைப்புகளை கஸ்ரோலில் வைத்து மூடி நிதானமான தீயிலோ ஆவியிலோ சமைத்துக்கொள். மெத்தெனவாகும்போது எலும்புகளிலிருந்து இறைச்சியெல்லாம் எடுத்து, இடித்து, ஒரு சல்லடையில் தேய்த்து ஸ்னைப் ஒன்றுக்கு ஒரு அவுன்ஸ் வெண்ணெய் சேர்த்து நன்ருய்க் கலந்து ஒரு க்ளாஸ் டிஷ் அல்லது போலில் அழுத்தி அதன்மேல் உருக்கிய வெண்ணெய் கொஞ்சம் ஊற்றிப் பரிமாறு.

28. TOMATO APPETIZER

6 very small tomatoes.
½ cake cream cheese.
2 tablespoons cream.
1 tablespoon chilli sauce.
1 tablespoon mayonnaise.
½ teaspoon paprika.
Salt and pepper to taste.

Skin the tomatoes, remove the centres, stand in cold salt water, drain and chill. Mix the cheese and other ingredients to a smooth cream. Fill the tomatoes and chill in ice box. Serve on lettuce leaves.

29. CHICKEN LIVER PASTE

3 whole chicken livers.
1 teaspoon onion juice.
½ cup mushrooms.
Juice of 1 lime.

Boil the livers and drain. Boil the mushrooms slowly or use tinned. Mash the livers and mushrooms and press through a sieve. Add lime and onion juice and mix well, press into jar or bowl. Keep in ice box and serve on small biscuits or rounds of bread.

30. STUFFED EGGS

4 hardboiled eggs.
2 tablespoons grated cheese.
1 teaspoon vinegar.
¼ teaspoon mustard.
1 oz. melted butter.
Salt and cayenne to taste.

Cut the eggs in half, remove the yolks and mash with the cheese, melted butter and seasonings. Form into balls and refill the whites. Chill before serving.

Variations

The yolks may be mixed with finely chopped chicken, or chicken liver, or with a little anchovy sauce.

28. தோமாட்டோ அப்பிட்டைஸர்

6 சிறு தொமாட்டோ.
$\frac{1}{2}$ கேக் க்றீம் சீஸ்.
2 மேசைக்கரண்டி க்றீம்.
1 மேசைக்கரண்டி சில்லி ஸாஸ்.
1 மேசைக்கரண்டி மெயொனெஸ்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி பப்ரிக்கா.
உப்பும் மிளகுதூளும்.

தொமாட்டோவைத் தோலுரித்து, மத்திய பாகத்தைக் குடைந்துவிட்டு, குளிர்ந்த உப்புத்தண்ணீரில் போட்டுவைத்து, வடிகட்டி, ஐஸ் பெட்டியில் வை. அதன்பின் சீஸையும் மற்றச் சரக்குகளையும் மெதுவான க்றீமாகும்படி கலக்கிக் கொள். அப்படிக் கலக்கியதை தொமாட்டோவில் பூரணமாக வைத்து ஐஸ் பெட்டியில் வை. அதன்பின் லட்டிஸ் இலைகளில் வைத்துப் பரிமாறு.

29. சிக்கன் லிவர் பேஸ்ட்

3 சிக்கன் லிவர்.
1 தேக்கரண்டி வெங்காயச் சாறு.
$\frac{1}{2}$ கோப்பை மஷ்ரம்.
1 எலுமிச்சம்பழச் சாறு.

லிவர்களை வேகவைத்து, வடிகட்டிக்கொள். மஷ்ரம்களை நிதானமாய் வேகவை. அல்லது டின் மஷ்ரம்களை உபயோகி. லிவர்களையும் மஷ்ரம்களையும் மொத்தையாக்கிக்கொண்டு ஒரு சல்லடையில் தேய்த்துக்கொண்டு எலுமிச்சம் பழச்சாறும் வெங்காயச் சாறும் ஊற்றி, நன்றாய்க் கலந்து, ஐஸ் பெட்டியில் வைத்து, எடுத்து, சின்ன பிஸ்கெட்களின் மீதாவது ரொட்டித்துண்டுகளின் மீதாவது வைத்துப் பரிமாறு.

30. ஸ்டஃப்ட் எக்ஸ்

4 கெட்டியாய் வெந்த முட்டை.
2 மேசைச்கரண்டி துருவிய சீஸ்.
1 தேக்கரண்டி வினிகர்.
$\frac{1}{4}$ தேக்கரண்டி மஸ்டர்ட்.
உப்பும் கயனும்.
1 அவு. உருக்கிய வெண்ணெய்.

முட்டைகளை இரண்டாக வெட்டி மஞ்சள் கருவுகளை எடுத்து, சீஸூம் உருக்கிய வெண்ணெயும் உப்பும் கயனும் சேர்த்து, மொத்தையாக்கிக்கொள். அந்த மொத்தையிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து உருண்டைகளாக்கி வெள்ளைக் கருவுக்குள் பூரணமாக வைத்து ஐஸ் பெட்டியில் வைத்துப் பரிமாறு.

வேறு மாதிரி பூரணம்:—

மஞ்சள் கருவுகளைச் சிறு துணிக்கைகளாகக் கொத்திய சிக்கன் அல்லது சிக்கன் லிவர் அல்லது கொஞ்சம் அன்சவி ஸாஸோடு கலந்துகொள்.

NOTES

SOUPS

Stock forms the basis of all soups and is made by simmering meat bones and vegetables in water to extract their flavour. It is a process that cannot be hurried, as it takes several hours' good cooking to obtain the goodness and flavour from meat and bones. The smaller the meat is cut the better, and soaking in cold water for 30 minutes before cooking helps to draw out the juices.

Soup pots should always be kept closely covered.

To thicken soup, allow 1 tablespoon of flour with 1 tablespoon of butter (both level) to every cup of liquid. Melt the butter in a pan and slowly mix in the flour until smooth and bubbling. Add the soup slowly and bring to boiling point.

Flour mixed with water and added, does not make so smooth and creamy a soup.

Oatmeal, sago or other cereals, in the proportion of 1 oz. to a quart may be used to thicken soup. They must be added when the soup starts to simmer.

Salt and pepper should not be mixed with stock but added to the soup before serving.

Finely grated cheese may be served with vegetable soups.

1. GENERAL STOCK FOR SOUP

(*a*) Meat Stock

Meat and bones.	Onion.
Carrots.	Celery.

Add a quart of water to each pound of meat and bones, bring slowly to the boil, skim and add a tea cup of cold water. Skim and simmer for an hour, add the washed and cut up vegetables, and simmer gently for three or four hours. Strain, and when cold remove the fat.

சூப்ஸ்

எவ்வித சூப்புக்கும் ஸ்டாக்தான் ஆதாரம். அந்த ஸ்டாக் ஆனது இறைச்சி, எலும்புகள், காய்கள் இவற்றைத் தண்ணீரில் போட்டு, அவைகளின் மணத்தைத் தண்ணீர் இழுத்துக்கொள்ளும் பொருட்டு நிதானமான தீயில் வேகவைப்பதினுல் கிடைக்கிறது. இறைச்சியிலும், எலும்புகளிலுமுள்ள சத்தும் மணமும் கிடைக்க வேண்டுமானுல், அவைகளைச் சில மணிநேரம் கொதிக்கவைக்க வேண்டும். ஆகையால் அதைத் தயார் செய்வதில் அவசரப்பட்டு முடியாது. அவற்றை எவ்வளவு சிறு துண்டுகளாகச் செய்கிருேமோ அவ்வளவும் நல்லது. அவைகளை அவ்வளவு சிறு துண்டுகளாகச் செய்து, சமைக்கும் முன் 30 நிமிஷ நேரம் தண்ணீரில் ஊறப்போட்டு வைத்தால் அவைகளின் ரசம் தண்ணீரில் இறங்குவதற்கு அனுகூலமாயிருக்கும்.

சூப் பானைகளை எப்போதும் மூடியே வைக்கவேண்டும்.

சூப் தடிப்பாக வேண்டுமானுல், ஒரு கோப்பை சூப்புக்குத் தலைதட்டி ஒரு மேசைக்கரண்டி மாவும், தலைதட்டி ஒரு மேசைக்கரண்டி வெண்ணெயுமாக எடுத்துக்கொண்டு, வெண்ணெயை ஒரு பானில் போட்டு உருக்கி, அதில் மாவைக் கட்டியும் உருண்டையுமாய்ப் போகாதபடி மெதுவாயும் நன்ருயும் கலக்கி, கொதி வருகையில் அதில் சூப்பை மெதுவாய்ச் சேர்த்துக் கொதிவரும் வரை கொதிக்கவை. மாவைத் தண்ணீரில் கலந்து சேர்த்தால், சூப் அவ்வளவாய் க்றீமைப்போலவும் கட்டிகள் இல்லாமலும் இராது.

சூப் தடிப்பதற்காக, மாவுக்குப் பதிலாய், ஒரு குவாற்ட் சூப்புக்கு ஒரு அவுன்ஸ் வீதம் வோட்மீல் அல்லது சேகோ அல்லது வேறு தானியம் ஏதாவது உபயோகிக்கலாம். ஆனுல் அதை சூப்பில் கொதி சத்தம் ஆரம்பிக்கும்போது சேர்க்கவேண்டும். உப்பையும் மிளகையும் ஸ்டாக்கில் சேர்க்கக்கூடாது. பரிமாறும் முன் சூப்பில்தான் சேர்க்கவேண்டும். பொடிப்பொடியாய்த் துருவிய சீஸை வெஜட்டபில் சூப்போடு பரிமாறலாம்.

1. சூப்புக்குப் பொதுவான ஸ்டாக்

(a) இறைச்சி ஸ்டாக்

இறைச்சியும் எலும்புகளும்.	வெங்காயம்.
காரத்கள்.	செலெரி.

ஒரு பவுண்ட் இறைச்சிக்கும் எலும்புக்கும் ஒரு குவாற்ட் தண்ணீர் சேர்த்து நிதானமான தீயில் கொதிவர ஆரம்பிக்கையில், மேலே படிந்திருக்கும் நுரை அல்லது ஏட்டை எடுத்துவிட்டு அதில் ஒரு தேக்கோப்பைத் தண்ணீரும் கொஞ்சம் உப்பும் சேர்த்து, திரும்பவும் மேலே படியும் நுரையை எடுத்துவிட்டு 1 மணி நேரம் நிதானமான தீயில் சுண்டவை. நன்ருய்க் கழுவி அரிந்துள்ள காயை அதில் போட்டு 2 அல்லது 3 மணி நேரம் நிதானமாய் வேகவைத்து, சூப்பை இறுத்து ஆறவை. ஆறியபின் கொழுப்பை எடுத்துவிடு.

(*b*) Vegetable Stock

2 small onions. 3 carrots. ½ head celery.
3 potatoes. 2 leeks. Any sweet herbs.
2 ozs. butter. 2 quarts water.

Peel, slice and fry the vegetables in the butter or dripping and pour over them 2 quarts of boiling water. Stew slowly for 4 hours and strain.

2. CLEAR SOUP

1 quart stock.
1 carrot.
2 sticks celery.
1 onion.
4 ozs. lean beef.
Whites and shells of 2 eggs.
1 spray parsley.
2 cloves.
Pepper and salt.

Skim all fat off stock and put in a clean pan. Remove all fat off the beef and cut up finely, wash peel and slice vegetables. Slightly whisk the eggs and wash and crush the shells. Put all ingredients in the stock and whisk well until it almost boils. Then reduce heat and simmer gently for 30 minutes. Strain through a clean cloth. Boil up with a lump of sugar and season and garnish as desired.

3. CHICKEN STOCK OR BROTH

1 chicken.
1 quart of water per pound of chicken.
1 carrot.
2 stalks celery.
1 tablespoon rice or barley.
1 sliced onion.
1 bay leaf.
¼ teaspoon peppercorns.
Salt and pepper.

Joint a good sized fowl, put all but the breast in a saucepan with cold water, vegetables, and seasonings. Heat to boiling point, add breast and simmer slowly until tender, and meat readily leaves the bone. Cool. Remove fat and strain. A tablespoon of lean raw ham may be cooked with the other ingredients if desired. The breast of chicken may be used separately with a white sauce made from a little of the stock.

(b) வெஜிட்டபில் ஸ்டாக்

2 சிறு வெங்காயம். 2 லீக்ஸ். ½ கொத்து செலெரி.
3 உருளைக்கிழங்கு. 2 அவு. வெண்ணெய். மதுரமான ஹர்ப்ஸ் எதாவது.
3 காரத்கள். 2 குவாற்ட் தண்ணீர்.

கறிகாய்களைத் தோலுரித்து, பில்லைகளாக அரிந்துகொண்டு வெண்ணெய் அல்லது ட்றிப்பிங்கில் வதக்கி, அதன்மேல் 2 குவாற்ட் கொதிக்கிற வெந்நீரை ஊற்றி நிதானமான தீயில் 4 மணிநேரம் வேகவைத்து சூப்பை இறுத்துக்கொள்.

2. க்ளியர் சூப்

1 குவாற்ட் ஸ்டாக்.
1 காரத்.
2 தண்டு செலெரி.
1 வெங்காயம்.
4 அவு. கொழுப்பு நீக்கிய பீஃப்.
2 முட்டைகளின் வெள்ளைக்கருவும் ஓடும்.
1 கொத்து பார்ஸ்லி.
2 லவங்கம்.
உப்பும் மிளகுதூளும்.

ஸ்டாக்கில் மேலே படிந்துள்ள கொழுப்பெல்லாம் எடுத்து ஒரு சுத்தமான பானில் போட்டுக்கொள். பீஃபிலுள்ள கொழுப்பு எல்லாம் எடுத்துவிட்டு பீஃபை சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள். கறிகாய்களைக் கழுவித் தோலுரித்துப் பில்லைகளாக அரிந்துகொள். வெள்ளைக்கருவை லேசாயும் வேகமாயும் அடித்து, முட்டை ஓடுகளைக் கழுவி நசுக்கிக்கொள். எல்லாச் சரக்குகளையும் ஸ்டாக்கில் போட்டுக் கிட்டத்தட்டக் கொதிக்கும்வரை தீவிரமான தீயில் லேசாய் அடித்துக் கலக்கு. அதன்பின் தீயைக் குறைத்து நிதானமான தீயில் 30 நிமிஷ நேரம் சுண்டவைத்து, சுத்தமான துணியில் வடிகட்டி, கொஞ்சம் சர்க்கரை போட்டுக் கொதிக்கவைத்து உப்பும் மிளகும் சேர்த்து இஷ்டமானபடி அலங்கரித்துக்கொள்.

3. சிக்கன் ஸ்டாக் அல்லது ப்ருத்

1 கோழிக்குஞ்சு.
1 பவு. கோழிக்குஞ்சுக்கு 1 குவாற்ட் விகிதம் தண்ணீர்.
1 காரத்.
2 தண்டு செலெரி.
1 வெங்காயம் பில்லைகளாய் அரிந்தது.
1 பே லீஃப்.
¼ தேக்கரண்டி பெப்பர்கார்ன்.
உப்பும் மிளகுதூளும்.
1 மேசைக்கரண்டி அரிசி அல்லது பார்லி.

நல்ல உருவாயுள்ள கோழியை மார்பு தவிர மற்றெல்லாவற்றையும் கணுக் கணுவாய் அறுத்து தண்ணீருள்ள ஒரு ஸாஸ்பானில் போட்டுக் கறிகாய்களும், உப்பும் மிளகுதூளும் பெப்பர்கார்னும், பே லீஃபும் சேர்த்து, கொதிவரும்வரை கொதிக்கவைத்து, மார்பையும் சேர்த்து, சதை மெதுவுபட்டு எலும்பிலிருந்து விழ ஆரம்பிக்கும்வரை நிதானமான தீயில் வேகவை. ஆறினபின் கொழுப்பை எடுத்துவிட்டு வடிகட்டிக்கொள். வேண்டுமானால் மற்றச் சரக்குகளோடு கொழுப்பில்லாத பச்சை ஹாமில் கொஞ்சம் சேர்த்துச் சமைக்கலாம். கோழியின் மார்பை, ஸ்டாக்கில் கொஞ்சம் எடுத்துச் செய்த ஒய்ட் ஸாஸோடு, தனியாய் உபயோகிக்கலாம்.

4. CREAM OF CHICKEN SOUP

2 cups chicken stock (hot).
1 cup scalded milk.
2 tablespoons butter.
2 tablespoons flour.
1 egg yolk.
Salt and pepper.

Make a thick sauce of the butter, flour and milk, add it to the stock. Pour slowly over beaten egg yolk, strain and season. Heat but do not boil. Serve at once, or soup may have a curdled appearance.

5. CLEAR SOUP JELLY

1 shin of beef.
1 stick of celery.
1 large onion.
White of one egg.

Cut shin in small pieces and simmer for 6 hours in 3 pints of water. Strain and cool. Remove fat. Chop one onion very small, fry it in fat from shin. Then pour shin stock slowly on to onion. Cool. Add beaten white of egg, celery, salt and pepper. Cook again very slowly. Strain twice through muslin. Add one tablespoon sherry. Chill until it becomes a jelly.

6. TOMATO MILK SOUP

1 pint milk.
1 tablespoon flour.
3 lbs. tomatoes.
1 large onion.
2 tablespoons butter.
Salt and pepper.
1 small teaspoon soda.
1 dessertspoon sugar.

Melt the butter in a saucepan. Mix in the flour and add the milk and seasoning and sugar, making a white sauce. Cut up the tomatoes and onion and simmer with a little water until soft. Put through a sieve. There should be a pint of pulp liquid. When this is boiling, add the soda and when effervescence ceases, add the hot sauce, and serve with pieces of fried bread.

If fresh tomatoes are not procurable, a tin of tomato puree may be used instead.

4. க்றீம் அஃப் சிக்கன் சூப்

2 கோப்பை சிக்கன் ஸ்டாக் (சூடாயுள்ளது).
1 கோப்பை காய்ச்சிச் சூடாயுள்ள பால்.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.
2 மேசைக்கரண்டி மாவு.
1 முட்டை மஞ்சள்கரு.
உப்பும் மிளகுதூளும்.

வெண்ணெய், மாவு, பால் இவைகளைச் சேர்த்துத் தடிப்பான ஸாஸ் செய்து ஸ்டாக்கில் சேர்த்துக்கொள். அதை மெதுவாய் அடித்த முட்டை மஞ்சள் கருவின்மேல் ஊற்றி வடிகட்டி, உப்பும் மிளகுதூளும் சேர்த்துக் கொதிக்காத படி காயவைத்து உடனே பரிமாறு, இல்லாவிட்டால் சூப் கட்டியும் நீருமாய்ப் போம்.

5. க்ளியர் சூப் ஜெல்லி

1 ஷின் பீஃப்.
1 தண்டு செலெரி.
1 பெரிய வெங்காயம்.
1 முட்டை வெள்ளைக்கரு.

ஷின்னைச் சிறு துண்டுகளாகக் கொத்தி 3 பைன்ட் தண்ணீரில் 6 மணி நேரம் வேகவைத்து, வடிகட்டி ஆறவை. கொழுப்பை எடுத்துவிடு. ஒரு வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நன்றாய் அரிந்து, ஷின்னிலிருந்து எடுத்த கொழுப்பில் வறு. பிறகு ஷின் ஸ்டாக்கை மெதுவாய் வெங்காயத்தின்மேல் ஊற்றி ஆறவை. அதில் அடித்த முட்டை வெள்ளைக்கரு, செலெரி, உப்பு, மிளகு தூள் இவைகளைச் சேர்த்து, நிதானமான தீயில் மறுபடியும் வேகவைத்து இரண்டு தடவை மஸ்லின் துணியில் வடிகட்டி ஒரு மேசைக்கரண்டி ஷெறி சேர்த்து ஜெல்லியாகும்வரை ஐஸ் பெட்டியில் வை.

6. தொமாட்டோ மில்க் சூப்

1 பைன்ட் பால்.
1 மேசைக்கரண்டி மாவு.
3 பவு. தொமாட்டோ பழம்.
1 பெரிய வெங்காயம்.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.
உப்பும் மிளகுதூளும்.
1 சின்ன தேக்கரண்டி சோடா உப்பு.
1 டெஸர்ட் கரண்டி சர்க்கரை.

வெண்ணெயை ஒரு ஸாஸ்பானில் உருக்கி மாவைக் கலந்து அதில் பாலை ஊற்றி, உப்பும் மிளகுதூளும் போட்டு, சர்க்கரையும் சேர்த்து, ஒயிட் ஸாஸ் செய்துகொள். தொமாட்டோ பழங்களையும் வெங்காயத்தையும் அரிந்து கொஞ்சம் தண்ணீரில் போட்டு மெதுவுபடும்வரை நிதானமான தீயில் வேகவைத்து இறுத்துத் தண்ணீரை எடுத்துக்கொள். அது ஒரு பைன்டாவது இருக்க வேண்டும். அதைக் கொதிக்கவைத்து அது கொதிக்கும்போது சோடா உப்பைச் சேர்த்து, அது பொங்கி அமர்ந்ததும், சூடான ஸாஸை அதில் சேர்த்து, வறுத்த ரொட்டித் துண்டுகளோடு பரிமாறு.

அப்போது பறித்த தொமாட்டோ பழங்கள் கிடைக்காவிட்டால் அதற்குப் பதிலாக ஒரு டின் தொமாட்டோ ப்யூரியை உபயோகிக்கலாம்.

7. THICK KIDNEY SOUP

½ shin beef.
1 onion.
1 ox kidney or
4 sheep's kidneys.

Cut shin in small pieces and simmer 6 hours in 3 pints of water. Add kidney and cook until tender, then remove kidney and mince it. Cool shin stock, remove fat and strain. Chop large onion into pieces, and fry in meat fat. Add to shin stock and simmer very slowly. Add minced kidney to thicken, pepper and salt, and strain through a sieve before serving.

8. ALMOND SOUP

3 cups stock.
3 ozs. almonds.
1 cup milk.
2 tablespoons flour.
3 egg yolks.
2 ozs. butter.
Salt.

Make a sauce of the butter, flour and milk, add it to the stock with the blanched and grated almonds. Pour over the beaten yolks of 3 eggs, heat, but do not boil, season and serve. A teaspoon of cream may be added to each plate of soup.

9. TOMATO AND COCOANUT SOUP

6 large tomatoes.
3 onions.
1 carrot.
1 oz. flour.
1 teaspoon chopped parsley.
1 pint boiling water.
1 pint milk.
1 cocoanut grated.
1 oz. butter.
Salt and pepper.

Slice and peel tomatoes. Slice onions, wash, scrape and cut up carrot and place all together in a saucepan with grated cocoanut and salt. Pour the boiling water over it all and cook until vegetables are quite soft. Rub through a sieve and return puree to a saucepan and bring to the boil. Melt the butter and flour, add milk and boil 5 minutes. Stir this into the boiling soup, season and add chopped parsley.

7. திக் கிட்னி சூப்

½ ஷின் பீஃப். 1 மாட்டுக் கிட்னி அல்லது
1 பெரிய வெங்காயம். 4 ஆட்டுக் கிட்னி.

ஷின்னைச் சிறு துண்டுகளாகக் கொத்தி, 3 பைன்ட் தண்ணீரில் 6 மணி நேரம் வேகவைத்து, அதில் கிட்னியைச் சேர்த்து மெதுவுபடும்வரை வேக வைத்து, கிட்னியை எடுத்து சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள். ஷின் ஸ்டாக்கை ஆறவைத்து, கொழுப்பை எடுத்துவிட்டு வடிகட்டிக்கொள். பெரிய வெங்காயத்தைச் சிறு சிறு துண்டுகளாக அரிந்துகொண்டு, இறைச்சிக் கொழுப்பில் வறுத்து, ஷின் ஸ்டாக்கில் போட்டு அந்த கிட்னியை அதில் சேர்த்துத் தடிப்பாக்கிக் கொண்டு மிளகுதூளும் உப்பும் சேர்த்து, பரிமாறுமுன் சல்லடையில் வடிகட்டிக் கொள்.

8. ஆமண்ட் சூப்

3 கோப்பை ஸ்டாக். 2 மேசைக்கரண்டி மாவு.
3 அவு. வாதுமைப் பருப்பு. 3 முட்டை மஞ்சள்கரு.
1 கோப்பை பால். 2 அவு. வெண்ணெய்.
உப்பு.

வெண்ணெய், மாவு, பால் இவைகளைக்கொண்டு ஸாஸ் செய்து, வெந்நீரில் ஊறவைத்துத் தோலுரித்துத் துருவிய வாதுமைப் பருப்போடுகூடிய ஸ்டாக்கில் அதைச் சேர்த்துக்கொண்டு, அதை அடித்த மூன்று முட்டை மஞ்சள் கருவின் மீது சேர்த்துக் கொதிக்கவைக்காமல் காய்ச்சி உப்பு சேர்த்துப் பரிமாறு. ஒவ்வொரு சூப் ப்ளேட்டிலும் ஒவ்வொரு தேக்கரண்டி க்றீம் சேர்த்துக்கொள்ளலாம்.

9. தோமாட்டோ அண்ட் கோக்கனட் சூப்

6 பெரிய தொமாட்டோ பழங்கள். 1 பைன்ட் கொதிக்கிற வெந்நீர்.
3 வெங்காயம். 1 பைன்ட் பால்.
1 காரத். 1 தேங்காய் துருவியது.
1 அவு. மாவு. 1 அவு. வெண்ணெய்.
1 தேக்கரண்டி அரிந்த பார்ஸ்லி. உப்பும் மிளகுதூளும்.

தொமாட்டோ பழங்களைப் பில்லைகளாய் அரிந்து தோலுரித்துக்கொள். வெங்காயத்தைப் பில்லைகளாய் அரிந்துகொள். காரத்தைக் கழுவி, தோலைச் சுரண்டிவிட்டு நறுக்கிக்கொள். எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ஒரு ஸாஸ் பானில் போட்டு, அதில் துருவிய தேங்காயும் உப்பும் சேர்த்து, அதன்மேல் கொதிக்கிற வெந்நீர் ஊற்றி, காய்களெல்லாம் நன்றாய் மெதுவுபடும்வரை சமைத்து, ஒரு சல்லடையில் தேய்த்து, ஒரு ஸாஸ்பானில் இறுத்துக்கொண்டு அதைக் கொதிவரும்வரை கொதிக்கவை. வெண்ணெயை உருக்கி மாவை சேர்த்து, பால் சேர்த்து 5 நிமிஷம் கொதிக்கவைத்து, அதைக் கொதிக்கும் சூப்பில் விட்டுக் கிளறிக் கலந்து, உப்பும் மிளகுதூளும் அரிந்த பார்ஸ்லியும் சேர்த்துக்கொள்.

10. CARROT SOUP

1 large carrot cut in small pieces and put in a pan with 2 ozs. butter, a little sugar, salt and pepper. Cook 15 minutes. Add a bay leaf, sprig of parsley, piece of thyme, small onion and a quart of stock. Boil gently 1 hour. Add 2 tablespoonfuls rice and cook till tender. Pass all through a sieve. Add 1 cup milk and heat.

11. SALMON CHOWDER SOUP

1 medium tin salmon.	3 cups milk.
1 large slice ham or bacon.	1 large onion.
3 cups sliced potatoes.	1 tablespoon flour.

Salt and pepper.

Cut the ham or bacon in small pieces and fry. Add sliced potatoes, sliced onion and water to cover. Simmer for half an hour. Remove skin and bones from salmon, flake and add to the above mixture with the milk. Thicken with a little flour, season and serve with cream crackers.

12. VEGETABLE SOUP (WITHOUT STOCK)

Cut up vegetables of every kind and fry in butter, until brown. Put into a saucepan with water, add some rice or barley. Pepper and salt to taste and simmer 2 hours till vegetables are quite cooked.

13. CORN SOUP

1 tin corn.	2 tablespoons butter.
1 pint boiling water.	2 tablespoons flour.
1 pint milk.	1 teaspoon salt.
1 slice onion.	A few grains of pepper.

Add water to the corn and simmer 20 minutes, rub through a sieve. Melt the butter with the flour and add the milk which has been scalded with the onion. Mix with the corn puree, add seasoning and serve.

10. காரத் சூப்

ஒரு பெரிய காரத் எடுத்துச் சிறு துண்டுகளாக நறுக்கி, 2 அவுன்ஸ் வெண்ணெயுள்ள ஒரு பானில் போட்டுக் கொஞ்சம் சர்க்கரையும், உப்பும், மிளகுதூளும் சேர்த்து 15 நிமிஷம் கொதிக்கவைத்து அதில் 1 பே லீஃப், 1 கொத்து பார்ஸ்லி கொஞ்சம் தைம், 1 சிறு வெங்காயம், 1 குவாற்ட் ஸ்டாக் இவைகளைச் சேர்த்து, நிதானமான தீயில் 1 மணி நேரம் கொதிக்கவைத்து, அதில் 2 மேசைக்கரண்டி அரிசிசேர்த்துப் பதமாகும்வரை சமைத்து எல்லாவற்றையும் சல்லடையில் வடிகட்டி இறுத்துக்கொண்டதில் 1 கோப்பை பால் சேர்த்து சூடாக்கிக்கொள்.

11. சாமன் சௌடர் சூப்

1 நடுத்தர டின் சாமன்.
1 பெரிய துண்டு ஹாம் அல்லது பேக்கன்.
3 கோப்பை பில்லைகளாக அரிந்த உருளைக்கிழங்கு.
3 கோப்பை பால்.
1 பெரிய வெங்காயம்.
1 மேசைக்கரண்டி மாவு.
உப்பும் மிளகுதூளும்.

ஹாம் அல்லது பேக்கனைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பொரித்து, பில்லைகளாய் அரிந்த உருளைக்கிழங்கு, வெங்காயம் இவைகளை அதோடு சேர்த்து அதையெல்லாம் மூடும் அளவு தண்ணீர் ஊற்றி அரைமணிநேரம் நிதானமான தீயில் வேகவை. சாமனிலிருந்து தோலையும் எலும்புகளையும் எடுத்துவிட்டு, துண்டுகளாக்கிக்கொண்டு மேலே சொன்ன கலவையோடு பால் சேர்த்துக்கொண்டு அதில் சாமனைப் போடு; கொஞ்சம் மாவு கலந்து தடிப்பாக்கி உப்பும் மிளகும் சேர்த்து க்றீம் க்ராக்கர்களோடு பரிமாறு.

12. வெஜட்டபில் சூப் (ஸ்டாக் இல்லாதது)

பல மாதிரி கறிகாய்களை அரிந்து வெண்ணெயில் சிவக்கும்வரை வறுத்து, தண்ணீருள்ள ஸாஸ்பானில் போட்டு, கொஞ்சம் அரிசி அல்லது பார்லி சேர்த்து, ருசிக்கு உப்பும் மிளகும் போட்டு காய்கள் நன்றாய் வேகுமட்டும் 2 மணி நேரம் நிதானமான தீயில் வேகவை.

13. கார்ன் சூப்

1 டின் கார்ன்.
1 பைண்ட் கொதிக்கிற வெந்நீர்.
1 பைண்ட் பால்.
1 பில்லை வெங்காயம்.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.
2 மேசைக்கரண்டி மாவு.
1 தேக்கரண்டி உப்பு.
சில மிளகு.

கார்னை வெந்நீர் விட்டு நிதானமான தீயில் 20 நிமிஷம் வேகவைத்து ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்து வைத்துக்கொள். வெண்ணெயை மாவோடு உருக்கி, வெங்காயம் வெந்த பாலை அதில் சேர்த்து, கார்ன் ப்யூரியோடு கலந்து உப்பும் மிளகும் சேர்த்துப் பரிமாறு.

14. SPINACH SOUP

2 cups meat stock
1 cup cooked spinach.
1 cup milk.
2 tablespoons butter.
2 tablespoons flour.
Salt and pepper.

Add the spinach to the stock and cook for 5 minutes. Rub through a sieve. Make a sauce of the butter, flour, and milk and seasoning and add it to the spinach puree. Heat and serve.

Spinach water may replace the meat stock.

15. ASPARAGUS SOUP

1 tin asparagus.
3 cups chicken stock.
2 cups scalded milk.
1 slice onion.
1 oz. butter.
1 oz. flour.
Salt and pepper.

Cut off the tips of the asparagus and add the stalks to stock and asparagus water with the slice of onion. Boil 5 minutes and rub through a sieve without the onion. Make a thick sauce of the butter flour and milk, and add to the stock and puree with the seasoning. Add asparagus tips, heat and serve.

16. GREEN PEA SOUP

2 lbs. green peas.
1½ ozs. butter.
1 onion.
1 sprig of mint.
2 quarts water.
1 bunch spinach.
2 lettuces.
Pepper and salt.

Shell the peas, wash the pods and put them in a pan with the mint and water and boil for 1 hour. Rub the pods through a sieve, return the pulp and liquid to the pan, add the lettuce and spinach, well washed and finely shredded, peas and peeled and chopped onion. Simmer for ½ hour or until vegetables are soft. Melt the flour and butter and add it little by little, stirring it well in and leaving no lumps. Strain all through a sieve, season and serve.

14. ஸ்பினேஜ் சூப்

2 கோப்பை மீட் ஸ்டாக்.
1 கோப்பை சமைத்த ஸ்பினேஜ்.
1 கோப்பை பால்.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.
2 மேசைக்கரண்டி மாவு.
உப்பும் மிளகுதூளும்.

ஸ்பினேஜை ஸ்டாக்கில் சேர்த்து 5 நிமிஷம் வேகவைத்து ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்துக்கொள். வெண்ணெய், மாவு, பால் இவைகளைச் சேர்த்து ஸாஸ் செய்து அதில் உப்பும் மிளகுதூளும் சேர்த்து, அதையெல்லாம் ஸ்பினேஜ் ப்யூரியில் சேர்த்து, சூடாக்கிப் பரிமாறு.

மீட் ஸ்டாக்குக்குப் பதிலாக ஸ்பினேஜ் வெந்நீரை உபயோகிக்கலாம்.

15. அஸ்பரகஸ் சூப்

1 டின் அஸ்பரகஸ்.
3 கோப்பை சிக்கன் ஸ்டாக்.
2 கோப்பை காய்ச்சின பால்.
1 துண்டு வெங்காயம்.
1 அவு. வெண்ணெய்.
1 அவு. மாவு.
உப்பும் மிளகுதூளும்.

அஸ்பரகஸ் நுனிகளை வெட்டிவிட்டு, தண்டுகளை ஸ்டாக்கும், அஸ்பரகஸ் நீரும் வெங்காயமும் உள்ளதில் சேர்த்து 5 நிமிஷம் கொதிக்க வைத்து, வெங்காயத்தை எடுத்துவிட்டு ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்துக்கொள். வெண்ணெய், மாவு, பால் சேர்த்துத் தடிப்பான ஸாஸ் செய்து அதை ஸ்டாக்கும் ப்யூரியும் சேர்ந்துள்ளதில் ஊற்றி, உப்பும் மிளகுதூளும் சேர்த்து, அதில் அஸ்பரகஸ் நுனிகளைப்போட்டு சூடாக்கிப் பரிமாறு.

16. க்றீன் பீ சூப்

2 பவு. பச்சை பட்டாணிக்காய்.
$1\frac{1}{2}$ அவு. வெண்ணெய்.
1 வெங்காயம்.
1 கொத்து புதீனு.
2 குவாற்ட் தண்ணீர்.
1 கொத்து ஸ்பினேஜ்.
2 லட்டிஸ்.
உப்பும் மிளகுதூளும்.

பட்டாணிக்காயை உரித்துக்கொண்டு தோலைக் கழுவி, தண்ணீரும் புதீனுவும் உள்ள ஒரு பானில் போட்டு 1 மணி நேரம் கொதிக்கவைத்து, தோலை ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்துக்கொண்டு, இறுத்ததைத் திரும்பவும் பானில் போட்டு, நன்முய்க் கழுவி சிறிய சீவல்களாய் சீவிய லட்டிஸையும், ஸ்பினேஜையும் பட்டாணியையும், உரித்து அரிந்த வெங்காயத்தையும், அதில் சேர்த்துக்கொண்டு, $\frac{1}{2}$ மணி நேரம் அல்லது காய்கள் மெதுவுபடும்வரை நிதானமான தீயில் வேகவை. மாவையும் வெண்ணெயையும் உருக்கிக் கொஞ்சங் கொஞ்சமாய் அதில் ஊற்றி, கட்டியும் உண்டையுமாகாதபடி நன்முய்க் கிளறி, எல்லாவற்றையும் ஒரு சல்லடையில் இறுத்துக்கொண்டு, உப்பும் மிளகும் சேர்த்துப் பரிமாறு.

17. PEA SOUP

2 cups peas (cooked or tinned).
2 teaspoons sugar.
2 cups cold water.
2 cups milk.
1 slice onion.
2 tablespoons butter.
2 tablespoons flour.
Salt and pepper.

Drain the liquor from the peas. Add sugar and water to peas and simmer 20 minutes. Rub through a sieve and add a sauce made from the butter, flour and half the milk.

Scald the rest of the milk with the onion. Remove onion, and add milk to pea mixture. Season and serve.

18. CREAM OF CELERY SOUP

1 small bunch celery.
1 pint white stock.
1 pint cream and milk.
A small piece of butter.
2 teaspoons flour.
Salt and pepper to taste.

Cut the celery in 1 inch pieces and stew in stock until tender. Rub through a sieve and add the sauce made from the butter, flour and milk. Season and serve.

19. OYSTER SOUP

2 pints well flavoured stock.
1 doz. oysters or more.
1 oz. flour.
1 oz. butter.
½ pint milk.
2 egg yolks.
1 gill cream.
Salt and pepper.
Lemon juice.

Beard oysters and heat in their own liquid until they look plump. Strain the liquid into the stock. Make a sauce of the flour, butter seasoning and milk, add to stock and stir till it boils. Add beaten egg yolks and cream carefully, but do not boil. Add oysters whole or cut in pieces, and a few drops of lemon juice. Serve.

17. பட்டாணி சூப்

2 கோப்பை பட்டாணி (சமைத்தது அல்லது டின்ட்).
2 தேக்கரண்டி சர்க்கரை.
2 கோப்பை தண்ணீர்.
1 துண்டு வெங்காயம்.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.
2 மேசைக்கரண்டி மாவு.
உப்பும் மிளகுதூளும்.
2 கோப்பை பால்.

பட்டாணியிலிருந்து நீரை இறுத்துவிட்டு, பட்டாணியில் சர்க்கரையும், தண்ணீரும் சேர்த்து 20 நிமிஷம் நிதானமான தீயில் வேகவைத்து ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்துக்கொண்டு, வெண்ணெய், மாவு, பாதி பால் இவைகளைச் சேர்த்துச் செய்த ஸாஸை அதில் சேர்த்துக்கொள்.

மிகுதிப் பாலில் வெங்காயத்தைப் போட்டுக் காய்ச்சி வெங்காயத்தை எடுத்து விட்டு அந்தப் பாலை பட்டாணிக் கலவையில் சேர்த்து, உப்பும் மிளகுதூளும் போட்டுப் பரிமாறு.

18. க்றீம் அஃப் செலேரி சூப்

1 சிறு கொத்து செலெரி.
1 பைன்ட் ஒய்ட் ஸ்டாக்.
1 பைன்ட் க்றீமும் பாலும்.
கொஞ்சம் வெண்ணெய்.
2 தேக்கரண்டி மாவு.
உப்பும் மிளகுதூளும்.

செலெரியை ஒரு அங்குல துண்டுகளாக அரிந்து, மெதுவாகும் வரை ஸ்டாக்கில் வேகவைத்து, ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்துக்கொண்டு, அதில் வெண்ணெய், மாவு, பால் இவைகளைச் சேர்த்துச் செய்த ஸாஸைச் சேர்த்து, உப்பும் மிளகுதூளும் கலந்து பரிமாறு.

19. ஆய்ஸ்டர் சூப்

2 பைன்ட் நன்றாய் மணமாக்கப்பட்ட ஸ்டாக்.
1 டஜன் ஆய்ஸ்டர். (அதற்குமேலும் இருக்கலாம்).
1 அவு. மாவு.
1 அவு. வெண்ணெய்.
$\frac{1}{2}$ பைன்ட் பால்.
2 முட்டை மஞ்சள்கரு.
1 ஜில் க்றீம்.
உப்பும் மிளகுதூளும்.
எலுமிச்சம்பழச் சாறு.

ஆய்ஸ்டர்களின் தாடிகளை எடுத்துவிட்டு, அவைகளின் ரசத்திலேயே அவைகளை கொஞ்சம் உப்பும்வரை காய்ச்சி, ரசத்தை ஸ்டாக்கில் இறுத்துக்கொள். மாவும், வெண்ணெயும், உப்பும், மிளகுதூளும், பாலும் சேர்த்து சூப் செய்து, அதை ஸ்டாக்கில் சேர்த்துக் கொதிக்கும்வரை கிளறு. அடித்த முட்டை மஞ்சள் கருவுகளையும் க்றீமையும் மெதுவாய்க் கிளறிக்கொண்டே அதில் சேர்த்துக்கொள். அவைகளைக் கொதிக்கவிடக் கூடாது. அதன்பின் ஆய்ஸ்டர்களை முழுவதாகவோ துண்டுகளாக்கியோ அதில் சேர்த்து, சில துளி எலுமிச்சஞ்சாறு அதில் பிழிந்து பரிமாறு.

20. CHICKEN GUMBO SOUP

1 chicken (cut into joints).
1 large onion (chopped fine).
6 large ripe tomatoes.
1 tablespoon butter.
2 doz. lady's fingers.
A little flour.
½ cup rice.
Salt and pepper to taste.
1 quart of water to each pound of chicken.

Joint the chicken, roll in flour and fry until brown in butter. Place in soup pan with onion and water and bring to the boil over a slow fire. Simmer gently for 1 hour. In the meantime cover the lady's fingers with cold water and soak 20 minutes. Cut in slices, fry in butter and add to soup. Cook slowly for 1 hour, then add tomatoes and rice. Cook 30 minutes. Season with salt and pepper and serve hot.

21. THICK OX TAIL SOUP

1 ox tail.
2 ozs. dripping.
3 onions.
1 oz. flour.
3 quarts water.
1 carrot.
1 turnip.
Tops of stalks of celery.
A little thyme (dried or fresh).
Pepper and salt.

Cut tail into pieces. Slice onions and cut carrot and turnip into dice. Put dripping in frying pan. Stir in flour as dripping melts, then put in vegetables and stir for 5 minutes. Add meat and fry for 10 minutes. Turn all into a pan with the water and bring to the boil and simmer very slowly for 4 hours. About an hour before ready put in celery, thyme, pepper and salt. Strain. Cool. Remove the fat; boil, and thicken with flour if necessary. Serve small pieces of tail in the soup. Half a glass of sherry may be added if desired.

20. சிக்கன் கம்போ சூப்

1 கோழிக்குஞ்சு.
1 பெரிய வெங்காயம் (சிறு சிறு துண்டுகளாக அரிந்தது).
6 பெரிய தொமாட்டோ பழங்கள்.
1 மேசைக்கரண்டி வெண்ணெய்.
2 டஜன் வெண்டைக்காய்.
கொஞ்சம் மாவு.
½ கோப்பை அரிசி.
உப்பும் மிளகுதூளும்.
1 பவு. சிக்கனுக்கு 1 குவாற்ட் வீதம் தண்ணீர்.

கோழிக்குஞ்சைக் கணுக்கணுவாய் அறுத்துக்கொண்டு, ஒவ்வொரு துண்டையும் மாவில் புரட்டி, வெண்ணெயில் சிவக்கும்வரை வறுத்து, வெங்காயமும் தண்ணீருமுள்ள ஒரு சூப்பானில் போட்டு, நிதானமான தீயில் கொதிவரும் மட்டும் கொதிக்கவைத்து, அதே தீயில் 1 மணி நேரம் வேகவை. அதற்குள் வெண்டைக்காயை 20 நிமிஷம் தண்ணீரில் போட்டுவைத்து, பிறகு எடுத்துப் பில்லைகளாக அரிந்து வெண்ணெயில் வதக்கி, சூப்பில் சேர்த்து, நிதானமான தீயில் 1 மணி நேரம் வேகவைத்து, அதற்குப்பின் தொமாட்டோ பழங்களும் அரிசியும் சேர்த்து 30 நிமிஷம் சமை. பிறகு உப்பும் மிளகுதூளும் சேர்த்துச் சூடாகவே பரிமாறு.

21. திக் ஆக்ஸ் டெயில் சூப்

1 மாட்டு வால்.
2 அவு. ட்றிப்பிங்.
3 வெங்காயம்.
1 அவு. மாவு.
3 குவாற்ட்ஸ் தண்ணீர்.
1 காரத்.
1 டர்னிப்.
செலெரி முனைகள்.
கொஞ்சம் தைம் (உலர்ந்தது அல்லது பச்சை).
மிளகுதூளும் உப்பும்.

வாலைத் துண்டுகளாக நறுக்கிக்கொள். வெங்காயம், காரத், டர்னிப் இவைகளைப் பில்லைகளாக அரிந்துகொள். ஃப்ரையிங் பானில் ட்றிப்பிங் போட்டுக்கொள். ட்றிப்பிங் உருகுகையில் மாவைப் போட்டுக் கிளறிக்கொள். அதன்பிறகு காய்களைப் போட்டு 5 நிமிஷம் கிளறு. அதில் மீட் சேர்த்து 10 நிமிஷம் வறு. அவை எல்லாவற்றையும் தண்ணீருள்ள ஒரு பானில் போட்டுக் கொதிவரும்வரை கொதிக்கவைத்து, 4 மணிநேரம் நிதானமான தீயில் வேகவை. தயாராவதற்கு 1 மணிநேரம் இருக்கையில் செலெரி, தைம், மிளகுதூள், உப்பு இவைகளைப் போடு. தயாரானதும் வடிகட்டி ஆறவைத்துக் கொழுப்பை எடுத்துவிட்டு, கொதிக்கவைத்து, தடிப்பாக்க வேண்டுமானால் மாவுசேர்த்து, அதில் வாலின் சிறு துண்டுகளையும் போட்டுக்கொள். இஷ்டமானால் ½ க்ளாஸ் ஷெறியும் சேர்த்துக் கொள்ளலாம்.

22. CELERY AND BEETROOT SOUP

1 large or 2 small heads celery.
1 large cooked beetroot.
½ pint milk.
1 heaped teaspoonful cornflour.
1 small onion.
1 quart boiling water or stock.
1 oz. butter.
Salt and pepper.

Clean and scrape celery and cut into pieces. Peel and slice the onion, and beetroot. Melt the butter and mix in the vegetables. Add boiling water and a little salt and cook until tender. Rub through a sieve. Blend the cornflour and milk and add to the soup. Boil up again for 10 minutes to cook the cornflour, add pepper and salt if necessary, and serve very hot.

23. MILK VEGETABLE SOUP

1 small carrot, turnip, and onion.
1 stick celery.
½ pint milk.
1 oz. butter.
½ leek.
1½ pints boiling water.
1 oz. flour.
Seasoning.
½ cup rice or barley.

Cut the vegetables into pieces (about the size of a match stick). Put them in a saucepan with the butter which must be melted but not hot. Cook over the fire, but do not let them brown. This can be done with the lid on, shaking the saucepan from time to time. Add the water and rice and barley and boil until the vegetables are tender (30 minutes). Mix the flour to a cream with a little milk, add to the soup. Boil 10 minutes stirring carefully. Season and serve.

24. CHEESE SOUP

1 quart milk.
Yolks of 2 eggs.
1½ ozs. flour.
4 ozs. Parmesan cheese.
1½ ozs. butter.
Salt and pepper.

Melt the butter in a pan, add the flour, mix well and cook for 5 minutes without browning. Add the milk boiling hot slowly, and simmer gently for 15 minutes, stirring well. Beat the yolks with a little of the cold milk, take the pan from the fire and stir in the eggs and cheese. Heat but do not boil and serve with diced fried bread.

22. செலேரி அண்ட் பீட்ரூட் சூப்

1 பெரிய கொத்து செலெரி அல்லது 2 சிறிய கொத்துகள் செலெரி.
1 பெரிய பீட்ரூட் (சமைத்தது).
½ பைண்ட் பால்.
1 தேக்கரண்டி கார்ன் ஃப்ளவர் (கூச்சாயளந்தது).
1 சின்ன வெங்காயம்.
1 குவாற்ட் கொதிக்கிற வெந்நீர் அல்லது ஸ்டாக்.
1 அவு. வெண்ணெய்.
உப்பு.
மிளகுதூள்.

செலெரியைக் கழுவித் தேய்த்துத் துண்டுகளாக அரிந்துகொள். வெங்காயத்தையும், பீட்ரூட்டையும், தோலுரித்துப் பில்லைகளாக அரிந்துகொள். வெண்ணெயை உருக்கிக் காய்களில் சேர்த்து அதில் கொதிக்கிற வெந்நீரை ஊற்றி, உப்பு சேர்த்து மெதுவுபடும்வரை சமை. பிறகு ஒரு சல்லடையில் தேய்த்து இறுத்துக்கொண்டு அந்த சூப்பில் கார்ன் ஃப்ளவரையும் பாலையும் சேர்த்து, கார்ன் ஃப்ளவர் வேகும்பொருட்டுப் பின்னும் 10 நிமிஷம் வேகவைத்து மிளகு தூள் சேர்த்து வேண்டுமானால் கொஞ்சம் உப்பும் சேர்த்து அதிக சூடாகவே பரிமாறு.

23. மில்க் வெஜிட்டபில் சூப்

1 சின்ன காரத், சின்ன டர்னிப்.
சின்ன வெங்காயம்.
1 தண்டு செலெரி.
½ பைண்ட் பால்.
1 அவு. வெண்ணெய்.
½ கோப்பை அரிசி அல்லது பார்லி.
½ லீக்.
1½ பைண்ட் கொதிக்கிற வெந்நீர்.
1 அவு. மாவு.
உப்பும் மிளகுதூளும்.

கறிகாய்களைச் சிறு துண்டுகளாக அரிந்து, வெண்ணெய் உருகி ஆறியுள்ள ஸாஸ்பானில் போட்டு, அடுப்பில் வைத்து, சிவக்காதபடி சமைத்துக்கொள். ஸாஸ்பானை மூடியுடன் அடிக்கடி எடுத்துக் குலுக்கினால் அதிலுள்ளது சிவக்காதிருக்கும். அதன்பின் அதில் வெந்நீரையும், அரிசி அல்லது பார்லியையும் சேர்த்துக் காய்கள் மெதுவுபடும் வரை, (30 நிமிஷம்) கொதிக்கவை. பிறகு மாவைக் கொஞ்சம் பால் சேர்த்து க்ரீமாக்கி, சூப்பில் சேர்த்து ஜாக்கிரதையாய்க் கிளறிக் கொண்டே 10 நிமிஷம் கொதிக்கவைத்து உப்பும் மிளகும் சேர்த்துப் பரிமாறு.

24. சீஸ் ஸூப்

1 குவார்ட் பால்.
2 முட்டை மஞ்சள்கரு.
1½ அவு. மாவு.
4 அவு. பர்மேஸன் சீஸ்.
1½ அவு. வெண்ணெய்.
உப்பும் மிளகும்.

ஒரு பானில் வெண்ணெயை உருக்கி மாவு சேர்த்து நன்றாய்க் கலக்கிச் சிவக்காதபடி, 5 நிமிஷம் வேகவைத்துக் கொதிக்கிற பாலை நிதானமாய்ச் சேர்த்து நன்றாய்க் கிளறிக்கொண்டே 15 நிமிஷம் நிதானமான தீயில் வேகவை. கொஞ்சம் பச்சைப்பால் சேர்த்து முட்டைகளின் மஞ்சள்கருவை அடித்து பானைத் தீயிலிருந்து எடுத்து அதில் அடித்த மஞ்சள் கருவையும் சீஸையும் கிளறிக்கொண்டே சேர்த்துக் கொதிக்கவைக்காமல் சூடாக்கி வறுத்த ரொட்டித்துண்டோடு பரிமாறு.

25. ONION SOUP

2 lbs. Spanish onions.
2 quarts white stock.
½ pint milk.
2 ozs. bread-crumbs.
Salt and pepper.

Peel and slice the onions, put in a pan of boiling water and boil for ten minutes. Strain off the water, add the stock and simmer for an hour. Rub the onion through a sieve and return the puree to the pan, bring to the boil, sprinkle in the bread-crumbs and milk, stir until boiling and serve. Some stewed spinach or asparagus heads improves this soup.

26. LETTUCE SOUP

3 lettuce.
1 onion.
1 quart stock.
1 oz. butter.
2 ozs. ham.
1 handful of spinach.
1 bunch of herbs.
Salt and pepper.

Wash the lettuce and soak in cold water for half an hour. Wash the spinach and remove the stalks. Peel and slice the onion. Cut the vegetables into thin shreds and then similarly cut the ham. Melt the butter in a pan, add the vegetables and ham and simmer slowly for 15 minutes, but do not let them brown. Add the stock and stir until boiling, then simmer gently for 30 minutes, season and serve.

25. அனியன் ஸூப்

2 பவுண்டு ஸ்பானிஷ் அனியன்ஸ்.	½ பைண்ட் பால்.
	2 அவு. ரொட்டித்தூள்.
2 குவார்ட் வொய்ட் ஸ்டாக்.	உப்பும் மிளகும்.

வெங்காயத்தை உரித்து, பில்லேகளாக அரிந்துகொண்டு கொதிக்கிற வெந்நீருள்ள பானில் போட்டு 10 நிமிஷம் கொதிக்கவைத்துத் தண்ணீரை இறுத்துவிட்டு ஸ்டாக் சேர்த்து ஒரு மணிநேரம் நிதானமான தீயில் வேகவை. வெங்காயத்தை ஒரு சல்லடையில் தேய்த்து ப்யூரியை பானில் போட்டுக் கொதிக்கும்வரை வைத்து ரொட்டித்தூளேயும் பாலேயும் அதில் தெளித்துக் கொதிக்கும்வரை கிளறி எடுத்துப் பரிமாறு. துவட்டிய ஸ்பினேஜ் அல்லது அஸ்பரகஸ் நுனிகளே அதில் கொஞ்சம் சேர்த்தால் சூப் இன்னும் நன்ருயிருக்கும்.

26. லட்டிஸ் ஸூப்

3 லட்டிஸ்.	2 அவு. ஹாம்.
1 வெங்காயம்.	1 கை ஸ்பினேஜ்.
1 குவார்ட் ஸ்டாக்.	1 கொத்து ஹர்ப்ஸ்.
1 அவு. வெண்ணெய்	உப்பும் மிளகும்.

லட்டிஸைக் கழுவி தண்ணீரில் ஒரு மணிநேரம் ஊறவை. ஸ்பினேஜைக் கழுவிக் காம்புகளே எடுத்துவிடு. வெங்காயத்தைத் தோலுரித்து பில்லேயாக அரிந்துகொள். காய்கறிகளேச் சிறு துண்டுகளாக அரிந்துகொள். ஹாமையும் அப்படியே செய்துகொள். வெண்ணெயை ஒரு பானில் உருக்கி அதில் காய்கறிகளேயும் ஹாமையும் போட்டு நிதானமான தீயில் 15 நிமிஷநேரம் சிவக்கவிடாமல் மெதுவாய் வேகவை. அதன்பின் ஸ்டாக் சேர்த்து, கொதிக்கும்வரை கிளறிக்கொண்டிருந்து அதன்பின் 30 நிமிஷநேரம் நிதானமான தீயில் வேகவைத்து உப்பு மிளகு சேர்த்துப் பரிமாறு.

FISH

Fish has a better flavour if it is boiled in a vegetable stock to which has been added a little vinegar or lemon or lime juice, herbs and peppercorns—except in the case of salmon which should be placed in boiling water to which some salt and a little olive oil has been added.

Never let fish boil fast. It must simmer gently, and about 10 minutes to the pound is the time it requires to cook. It should be removed from the water immediately it is cooked.

When boiling fish for invalids, half milk and half stock or water may be used.

Fish should be wrapped in a muslin for boiling or steaming, so it may be lifted in and out without breaking, and placed in boiling stock or water.

Fresh-water fish should be soaked in strong salt and water before it is cooked.

Salt fish should be soaked for several hours in fresh cold water before using.

Frozen fish should be thoroughly thawed before cooking.

When frying fish, the fish should be quite dry and may be coated with flour, egg and crumbs, or egg and oatmeal. The fat for frying must be very hot or the fish will be sodden and indigestible.

After frying onions or fish, put a little vinegar in the pan and heat. This will remove all odour.

1. BOILED SALMON

Salmon.
Olive oil.
Lemon juice.
Boiling salted water.

If the salmon is cold storage, thaw it slowly and thoroughly and wash it well. Wrap a piece of muslin around it and place in boiling salted water to which a little lime juice and olive oil (about 1 tablespoon of each to a quart) has been added. Boil very gently until cooked. Two lbs. of fish will take about 30 minutes. Lift fish out and remove muslin and serve hot or cold with sliced lime and cucumber, and with hollandaise or mayonnaise sauce.

மீன்

கொஞ்சம் வினிகர் அல்லது எலுமிச்சம்பழ ரசம், அல்லது லெமன் ஜூஸும் ஹர்ப்ஸும், பெப்பர்காரனும் கலந்த, வெஜட்டபில் ஸ்டாக்கில் வேக வைக்கும் மீன் நல்ல மணமுள்ளதாயிருக்கும். ஆனால் சாமன் மீனைக் கொஞ்சம் உப்பும் கொஞ்சம் ஆலிவ் ஆயிலும் சேர்த்துக் கொதிக்கும் வெந்நீரில்தான் வேக வைக்கவேண்டும்.

மீனை ஒருபோதும் வேகமாய்க் கொதிக்கவைக்கக்கூடாது. அது நிதானமான தீயில் மெதுவாய் வேகவேண்டும். பவுண்டுக்குச் சுமார் 10 நிமிஷம் வீதம் அதை வேகவைக்கவேண்டும். வெந்ததும் அதை அந்தத் தண்ணீரிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

நோயாளிகளுக்கு மீனைப் பாதிபால், பாதி ஸ்டாக் அல்லது தண்ணீரில் வேக வைக்கவேண்டும்.

மீனை ஒரு மஸ்லின் துணியில் சுற்றித் தண்ணீரிலோ ஆவியிலோ வேகவைத்தால், அதை எடுத்து, கொதிக்கிற ஸ்டாக் அல்லது தண்ணீரில் போடும்போதும் எடுக்கும்போதும் அது உடையாமலிருக்கும். நல்ல தண்ணீரில் கிடைக்கும் மீனை வேகவைக்கும் முன், உப்பு அதிகமாய்க் கரைத்த தண்ணீரில் ஊறவைக்கவேண்டும்.

ஸால்த் ஃபிஷை வேகவைக்கும் முன் சில மணிநேரம் நல்ல தண்ணீரில் ஊறவைக்கவேண்டும்.

உறைந்த மீனை வேகவைக்கும் முன் அது சாதாரண மீனின் உஷ்ணத்தை அடையும்வரை அதை விட்டுவைக்கவேண்டும்.

வறுப்பதற்கு மீன் நன்ருய் உலர்ந்ததாயிருக்கவேண்டும். அதை அப்படியே மாவிலாவது அல்லது முட்டைதடவிய ரொட்டித்தூளிலாவது அல்லது ஓட்மீலிலாவது தோய்த்துப் பொரிக்கலாம். பொரிப்பதற்கான கொழுப்பு அதிக சூடாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் மீன் நன்ருய் வேகாமல் அஜீரணத்தை உண்டாக்கும்.

வெங்காயத்தையாவது, மீனையாவது வறுத்தபின் பானில் கொஞ்சம் வினிகர் ஊற்றிச் சூடாக்கினுல் அதின் வாசனையெல்லாம் நீங்கும்.

1. பாயில்ட் சாமன்

சாமன்.	எலுமிச்சம்பழ ரசம்.
ஆலிவ் ஆயில்.	உப்பு சேர்த்துக் கொதிக்கிற வெந்நீர்.

ஐஸில் வைக்கப்பட்ட சாமன் மீனுயிருந்தால் அதைத் தானுகச் சற்று உருகும்படி விட்டுவைத்து அதன்பின் கழுவி அதை ஒரு மஸ்லின் துணியால் சுற்றிக்கட்டு. உப்பு சேர்த்துக் கொதிக்கிற தண்ணீரில் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசமும் ஆலிவ் ஆயிலும் சேர்த்து அதில் அந்த சாமனைப் போடு. (ஒரு குவார்ட் தண்ணீருக்குச் சுமார் ஒரு மேசைக்கரண்டி எலுமிச்சம்பழ ரசமும் ஒரு மேசைக் கரண்டி ஆலிவ் ஆயிலும் சேர்க்கவேண்டும்.) அதில் அந்த மீன் வேகும்மட்டும் நிதானமான தீயில் கொதிக்கவை. இரண்டு பவுண்டு மீன் வேகுவதற்குச் சுமார் 30 நிமிஷம் பிடிக்கும். அதன்பின் மீனை எடுத்து மஸ்லின் துணியை எடுத்து விட்டு பில்லையாகத் துண்டரித்த எலுமிச்சம்பழம், குக்கம்பர், ஹாலண்டேஸ் அல்லது மெயொனஸ் ஸாஸோடு சூடாகவோ, ஆறியதாகவோ பரிமாறு.

2. GRILLED SALMON

Wash and dry salmon slices (1 inch thick). Sprinkle with salt and pepper and a little lime juice. Wrap in oiled paper and grill about 15 to 20 minutes, turning frequently. Remove paper, garnish with lemon or cucumber. Serve with tartare sauce.

3. POMFRET CAPRICE

Wash, skin and fillet pomfret, season and sprinkle with lime juice, egg, crumb and fry in hot fat. Cut plantains in half lengthwise, and fry in hot fat. Drain and place a slice of plantain on each fillet. Serve with hollandaise sauce.

4. SOLE, SEER OR POMFRET AU GRATIN

1 large sole, seer or pomfret.
Juice of ½ lime.
Pepper and salt.

Place the fish in a fireproof dish, squeeze the lemon over it and season with pepper and salt. Cover with greaseproof paper and when baked remove the fish from the oven and drain the liquor off. Pour the sauce over the fish, covering it thoroughly. Sprinkle with the remainder of cheese and brown.

Sauce

1 oz. margarine.
1 oz. flour.
1 egg yolk.
3 ozs. grated cheese.
1 pint milk.
Cayenne pepper and salt.

Make the sauce by melting the margarine in a saucepan, add the flour to this and cook slightly; stir in the milk gradually until the sauce is smooth and glossy. Remove from the fire and add the yolk of egg together with half the cheese, and season to taste.

2. க்ரில்ட் சாமன்

ஒரு அங்குல கனமுள்ள சாமன் துண்டுகளைக் கழுவித் துடைத்து அதில் உப்பும் மிளகுதூளும் தூவி எலுமிச்சம்பழ ரசமும் தெளித்து, வெண்ணெய் தடவிய காகிதத்தில் சுற்றி 15 அல்லது 20 நிமிஷம் வரை அடிக்கடி திருப்பிக் கொண்டே க்ரில் பண்ணி எடுத்துக் காகிதத்தை எடுத்துவிட்டு எலுமிச்சம்பழம் அல்லது குக்கம்பரால் அலங்கரித்து ட்டாற்டர் ஸாஸோடு பரிமாறு.

3. பம்ஃப்ரேட் காப்ரிஸ்

பம்ஃப்ரெட்டை கழுவித் தோலுரித்து ஃபில்லத் செய்து அதில் உப்பும் மிளகுதூளும் தூவி எலுமிச்சம்பழ ரசம் தெளித்து முட்டை தடவி ரொட்டித் தூளில் புரட்டிச் சூடாயுள்ள கொழுப்பில் வறுத்துக்கொள். ப்ளான்டன்களை நீள வாட்டில் பாதியாக அரிந்து சூடாயுள்ள கொழுப்பில் வறுத்து எடுத்துக் கொழுப்பை இறுத்துவிட்டு ஃபில்லத் ஒன்றுக்கு ஒரு துண்டு ப்ளான்டனை வைத்து ஹாலண்டேஸ் ஸாஸோடு பரிமாறு.

4. ஸோல், சீர் அல்லது பம்ஃப்ரேட் ஓக்றட்டன்

1 பெரிய ஸோல் அல்லது சீர் அல்லது பம்ஃப்ரெட்.
$\frac{1}{2}$ எலுமிச்சம்பழ ரசம்.
மிளகும் உப்புதூளும்.

நெருப்பில் வெடிக்காத டிஷில் மீனைவைத்து அதன்மேல் எலுமிச்சம்பழ ரசத்தைப் பிழிந்து மிளகுதூளும் உப்பும் சேர்த்து வெண்ணெய் ஊறுத காகிதத்தால் மூடி பேக் பண்ணு.

ஸாஸ்:—

1 அவு. மார்கரின்.	3 அவு. துருவிய சீஸ்.
1 அவு. மாவு.	1 பைண்ட் பால்.
1 முட்டை மஞ்சள்கருவு.	கயன் பெப்பரும் உப்பும்.

ஒரு ஸாஸ்பானில் மார்கரினை உருக்கி அதில் மாவைச் சேர்த்துக் கொஞ்சமாய் வேகவைத்து ஸாஸானது மெதுவாயும் பளபளப்பாயும் ஆகும்வரை பாலைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிளறிக்கொண்டே ஊற்று. அதன்பின் அதை அடுப்பிலிருந்து எடுத்து அதில் முட்டை மஞ்சள் கருவையும் சீஸில் பாதியையும், ருசிக்கு வேண்டிய உப்பும் மிளகுதூளும் சேர்த்துக்கொள். மீனை அடுப்பிலிருந்து எடுத்து நீரை இறுத்துவிட்டு மீனின்மீது ஸாஸை நன்றாய் மூடிக்கொள்ளும்படி ஊற்றி மீதியாயுள்ள சீஸையும் மீன்மீது தூவி அடுப்பில் வைத்துப் பொன்னிற மாக்கிக் கொள்.

5. SOLE MENNIERE

Sole or pomfret.
2½ ozs. butter.
Seasoning.
1 orange.
2 teaspoons sherry
1 teaspoon vinegar.

Skin, wash and dry the fish. Season and dip in flour, fry in butter, drain and place in entree dish. Skin and slice the orange, and lay orange slices down centre of fish. Brown the butter slightly and add the mixed sherry and vinegar. Bring to the boil and pour round the fish.

6. SEER OR POMFRET A LA PORTUGAISE

(Serves about 6)

2 lbs. fish.
1 small onion.
2 fresh tomatoes.
2 ozs. margarine.
Juice of a lemon.
Pepper and salt.

Slice the onion and the tomatoes and put a layer into a fireproof dish or casserole. Wash the fish and place it on the vegetables. Cover with another layer of vegetables. Season. Squeeze the lemon juice over all and on that place the margarine in small pieces. Cover the whole with greaseproof paper and bake at once.

7. SOLE VERJUS

Sole.
¼ lb. green grapes.
New potatoes.
Sherry.
Chopped parsley.
Lemon juice.
Seasoning.
¼ pint hollandaise sauce.

Skin and fillet sole, wash and dry. Sprinkle with seasoning and lemon juice. Roll up fillets and steam or bake. Stone and skin grapes, place in a basin with 1 tablespoon sherry, cover and steam for 15 minutes. Cook the potatoes, Serve fish arranged in a circle with the grapes in centre and the potatoes around, seasoned and sprinkled with parsley. Serve with hollandaise sauce.

5. ஸோல் மேனியேர்

ஸோல் அல்லது பம்ஃப்ரெட். 1 ஆரஞ்சு.
$2\frac{1}{2}$ அவு. வெண்ணெய். 2 தேக்கரண்டி ஷெறி.
உப்பும் மிளகுதூளும். 1 தேக்கரண்டி வினிகர்.

மீனைத் தோலுரித்துக் கழுவித் துடைத்து உப்பும் மிளகுதூளும் தூவி மாவில் புரட்டி வெண்ணெயில் பொரித்து இறுத்து அன்ட்றி டிஷில் வைத்துக்கொள். ஆரஞ்சுப்பழத்தைத் தோலுரித்துப் பில்லையாக அரிந்துகொள். ஸோலின்மீது மத்தியில் ஆரஞ்சு பில்லைத்துண்டுகளை வரிசையாக வைத்து வெண்ணெயை உருக்கி அதில் ஷெறியையும் வினிகரையும் கலந்து சேர்த்துக் கொதிவரும்வரை வைத்து அதை எடுத்து மீனைச் சுற்றி ஊற்றிக்கொள்.

6. சீற் அல்லது பம்ஃப்ரெட் அ-ல-போர்த்துகேஸ்

2 பவு. மீன். 2 அவு. மார்கரின்.
1 சிறு வெங்காயம். 1 எலுமிச்சம்பழ ரசம்.
2 தொமாட்டோ பழம். உப்பும் மிளகுதூளும்.

வெங்காயத்தையும் தொமாட்டோ பழங்களையும் பில்லை பில்லையாக அரிந்து நெருப்பில் வெடிக்காத தட்டில் அல்லது கசரோலில் ஒரு வரிசை அடுக்கு. மீனைக் கழுவி, அதன்மீது வைத்து, அதன்மீது இன்னொரு வரிசை பில்லைகளை வைத்து உப்பும் மிளகுதூளும் சேர்த்து எல்லாவற்றின்மீதும் எலுமிச்சம்பழ ரசத்தைப் பிழிந்து அதன்மீது மார்கரின் சிறு துண்டுகளை வைத்து வெண்ணெய் ஊறுத காகிதத்தால் மூடி உடனே பேக் பண்ணு.

7. ஸோல் வெற்ஷுஸ்

ஸோல். நறுக்கிய பார்ஸ்லி.
$\frac{1}{4}$ பவு. க்ரீன் க்ரேப்ஸ். எலுமிச்சம்பழ ரசம்.
இளம் உருளைக்கிழங்குகள். உப்பும் மிளகுதூளும்.
ஷெறி. $\frac{1}{4}$ பைன்ட் ஹாலண்டேஸ் ஸாஸ்.

மீனைத் தோலுரித்து, ஃபில்லத் செய்து, கழுவி, துடைத்து, மிளகுதூளும் உப்பும் தூவி, எலுமிச்சம்பழ ரசத்தைத் தெளித்து மீன் துண்டுகளைச் சுருட்டி ஆவியில் வேகவை அல்லது பேக் பண்ணு. க்ரேப்ஸை தோலுரித்து கொட்டையை எடுத்துவிட்டு ஒரு மேசைக்கரண்டி ஷெறியுள்ள ஒரு பேஸினில் போட்டு மூடி 15 நிமிஷம் ஆவியில் வேகவை. உருளைக்கிழங்குகளை வேகவைத்துக்கொள். மீனை வட்டமாக வைத்து நடுவில் க்ரேப்ஸை வைத்து உருளைக்கிழங்குகளில் உப்பும் மிளகும் சேர்த்து சுற்றிலும் பார்ஸ்லியைத் தூவு. ஹாலண்டேஸ் ஸாஸோடு பரிமாறு.

8. FISH MOULD (STEAMED)

(Serves about 6)

1 large cup bread-crumbs.
1½ lbs. cooked fish.
¼ pint milk.
1 teaspoon chopped parsley.
3 eggs.
Pinch of mace.
Pepper and salt.
A little grated lime rind.

Mix cooked and flaked fish, bread-crumbs, parsley, mace, seasoning and lime rind. Add the well beaten eggs and enough milk to moisten. Place in a greased basin, cover and steam for 1 hour. Turn out and coat with parsley sauce.

9. BAKED HEINZ FISH

6 pieces fish.
1 small tin Heinz tomato soup.
4 large white onions.
Pepper and salt.

Place 3 slices of fish in baking dish, season with salt and pepper. Cut 2 onions in thick slices and lay on the fish. Pour half the tin of soup over this, place remaining fish and sliced onion on top. Cover with the remaining soup and bake about 40 minutes.

10. COLD SALMON MOULD

(Serves about 6)

1 tin salmon (1 lb.)
1 tablespoon sugar.
½ tablespoon flour.
1 teaspoon mustard.
½ teaspoon salt.
1 teaspoon melted butter.
Yolks of 2 eggs.
Juice of 2 lemons.
½ cup milk.
3 leaves gelatine.
1 oz. cream.

Mix sugar, salt, flour, mustard, butter, eggs and milk and cook until thick. Add lemon juice slowly, then gelatine which has been soaked in ½ cup cold water, cream, and flaked salmon, with slices of hard-boiled egg. Arrange in mould and set in ice box to chill. Serve with salad.

8. ஃபிஷ் மோல்ட் (ஸ்டீம்ட்)

ஒரு பெரிய கோப்பை ரொட்டித்தூள்.
$1\frac{1}{2}$ பவு. சமைத்த மீன்.
$\frac{1}{4}$ பைண்ட் பால்.
1 தேக்கரண்டி நறுக்கிய பார்ஸ்லி.
3 முட்டை.
1 சிட்டிக்கை ஜாதிபத்திரித் தூள்.
மிளகுதூளும் உப்பும்.
துருவிய எலுமிச்சம்பழத் தோல் கொஞ்சம்.

சமைத்துச் சீவல் சீவலாய் எடுத்த மீனையும், ரொட்டித்தூளையும், பார்ஸ்லியையும், ஜாதிபத்திரி மிளகு உப்பு இவற்றையும், துருவிய எலுமிச்சம்பழத் தோலையும் கலந்துகொண்டு நன்றாய் அடித்த முட்டைகளையும், அதைப் பசையாக்கிக்கொள்ளத் தக்க பாலையும் அதில் சேர்த்து வெண்ணெய் தடவிய ஒரு பேஸினில் வைத்து மூடி ஒருமணி நேரம் ஆவியில் வேகவைத்து எடுத்துத் திருப்பிப்போட்டு பார்ஸ்லி ஸாஸை அதன்மேலே ஊற்றிப் பூசு.

9. பேக்ட் ஹைன்ட்ஸ் ஃபிஷ்

6 மீன் துண்டு.
1 சின்ன டின் ஹைன்ட்ஸ் தொமாட்டோ சூப்.
4 பெரிய வெள்ளை வெங்காயம்.
உப்பும் மிளகுதூளும்.

3 மீன் துண்டுகளை ஒரு பேக்கிங் டிஷில் வைத்து அதில் உப்பும் மிளகுதூளும் சேர்த்து 2 வெள்ளை வெங்காயங்களைக் கனமான துண்டுகளாக அரிந்து மீன்மீது வைத்து $\frac{1}{2}$ டின் சூப் அதன்மேல் ஊற்றி மீதியுள்ள மீன் துண்டுகளையும் துண்டரித்த வெங்காயத்தையும் அதன்மேல் வைத்து அதன்மேல் பாக்கியுள்ள சூப்பை ஊற்றிச் சுமார் 40 நிமிஷம் வரை பேக் பண்ணு.

10. கோல்ட் சாமன் மோல்ட்

1 பவு. டின் சாமன்.
1 மேசைக்கரண்டி சர்க்கரை.
$\frac{1}{2}$ மேசைக்கரண்டி மாவு.
1 தேக்கரண்டி மஸ்டர்ட்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு.
1 தேக்கரண்டி உருக்கிய வெண்ணெய்.
2 முட்டை மஞ்சள்கருவு.
2 எலுமிச்சம்பழ ரசம்.
$\frac{1}{2}$ கோப்பை பால்.
3 பில்லை ஜல்லட்டீன்.
1 அவு. க்றீம்.

சர்க்கரை, உப்பு, மாவு, மஸ்டர்ட், வெண்ணெய், முட்டை, பால் இவைகளையெல்லாம் சேர்த்துக் கலந்து தடிப்பாகும்வரை சமைத்து எலுமிச்சம்பழ ரசத்தை நிதானமாய்ச் சேர்த்துக் கலந்து அரைக்கோப்பை தண்ணீரில் ஊறவைத்த ஜல்லட்டீனை அதில் சேர்த்து க்றீமையும் சீவலாக்கிய சாமனையும் கெட்டியாய் வேகவைத்த முட்டைத்துண்டுகளோடு அதில் கலந்து ஒரு மோல்டில் போட்டு ஐஸ் பெட்டியில் வைத்து எடுத்து சல்லடோடு பரிமாறு.

11. DRIED HADDOCK

I. Place the haddock in a basin and pour boiling water over it. Let it soak in this for 10 minutes. Dry it in a clean cloth and skin it, place it on a greased pan and bake in the oven for 10 or 15 minutes, covered with buttered paper. Serve on a hot dish with a piece of butter on top.

Or

II. Cook slowly in a pan on the fire with a little butter and milk, for 5 or 10 minutes. When it is cooked serve in the liquor from the pan with a piece of cold butter placed on top of it.

12. HADDOCK AND TOMATO

Cook as above, flake into small pieces. Fry a little onion a golden brown, add sliced tomatoes and the fish. Serve with a border of boiled rice.

13. HADDOCK GRUYERE

Cook as above, coat with white sauce, sprinkle with grated cheese and place in hot oven to brown.

14. SOLE PILLAU

Brown in butter one onion chopped, and $\frac{3}{4}$ cup of rice. Shake the pan over the fire until the rice has been well buttered all over. Wet the rice with two cups of good stock, well seasoned. Cover the pan and cook in a hot oven for eighteen minutes. As soon as cooked add two tablespoons butter.

Soak the fillets of fish for two hours in very cold water. Then soak them in milk for half an hour to whiten them. Cut into pieces about one and a half inches long, roll the pieces in flour and fry in butter until well browned.

Arrange in a serving dish a layer of rice, a layer of fish, etc., finishing with a layer of fish. Serve separately a curry sauce.

11. ட்ரைட் ஹடக்

I. ஹடக்கை ஒரு பேஸினில் வைத்து அதன்மேல் கொதிக்கிற தண்ணீரை ஊற்றி 10 நிமிஷம் ஊறவைத்து எடுத்து சுத்தமான துணியில் துடைத்துத் தோலுரித்து, வெண்ணெய் தடவிய பானில் வைத்து, வெண்ணெய் தடவிய காகிதத்தால் மூடி 10 அல்லது 15 நிமிஷம்வரை அடுப்பில் வைத்து பேக் பண்ணி ஒரு சூடான டிஷில் வைத்து அதன்மேல் வெண்ணெய் துண்டு ஒன்று வைத்துப் பரிமாறு.

அல்லது

II. கொஞ்சம் வெண்ணெயோடும் பாலோடும் உள்ள ஒரு பானில் மீனை வைத்து நிதானமான தீயில் 5 அல்லது 10 நிமிஷம்வரை சமைத்துக்கொள். நன்றாய் வெந்தபின் அதை எடுத்து அதன்மீது ஒரு துண்டு பச்சை வெண்ணெயை வைத்து பானில் உள்ள ரசத்தோடு பரிமாறு.

12. ஹடக் அண்ட் தோமாட்டோ

மேலே சொன்னபடி சமைத்துச் சிறு சீவல்களாகச் செய்துகொள். ஒரு சிறு வெங்காயத்தைப் பொன்னிறமாக வறுத்துக்கொண்டு அதோடு பில்லை பில்லையாக அரிந்த தொமாட்டோவையும் மீன் சீவலையும் சேர்த்து வறுத்து எடுத்துக்கொள். அதைச்சுற்றி ஓரத்தில் சோற்றை வைத்துப் பரிமாறு.

13. ஹடக் க்ரூயேர்

ஹடக்கை மேலே சொன்னபடி சமைத்து வொய்ட் ஸாஸை அதன்மேலே பூசிக்கொள்ளும்படி ஊற்றித் துருவிய சீஸைத் தூவித் தீவிரத் தீயில் சிவக்கும்படி வை.

14. ஸோல் புலாவ்

அரிந்த ஒரு வெங்காயத்தையும் $\frac{3}{4}$ கோப்பை சோற்றையும் வெண்ணெயில் சிவக்க வறுத்துக்கொள். வெண்ணெயெல்லாம் சோற்றில் பிசிறிக்கொள்ளும்படி அடுப்பிலுள்ள பானை நன்றாய்க் குலுக்கு. அதில் நன்றாய் உறைப்பேற்றிய நல்ல ஸ்டாக் 2 கோப்பை ஊற்றி, பானை மூடி, தீவிரத் தீயில் 18 நிமிஷநேரம் வேகவை. பதமாய் வெந்ததும் 2 மேசைக்கரண்டி வெண்ணெய் சேர்த்துக்கொள். மீன் சீவலை அதிகமாய்க் குளிர்ந்துள்ள தண்ணீரில் 2 மணிநேரம் ஊறவைத்து அதன்பின் அச்சீவல்கள் வெளுப்பாகும்படி $\frac{1}{2}$ மணிநேரம் பாலில் ஊறவைத்து அச்சீவல்களை $1\frac{1}{2}$ அங்குல நீளத் துண்டுகளாக நறுக்கி, அத்துண்டுகளை மாவில் புரட்டி, சிவக்கும்வரை வெண்ணெயில் பொரித்துக்கொள்.

ஒரு வட்டமான டிஷில் ஒரு வரிசை சோறும் அதன்மேல் ஒரு வரிசை மீனும் ஆக பல வரிசைகள் அடுக்கி கடைசி வரிசை மீனாக இருக்கும்படி பார்த்துக் கொள். அதோடு தனியாய் ஒரு கறி ஸாஸ் பரிமாறு.

15. SALMON SOUFFLE

(Serves about 6)

1 tin salmon.
½ cup milk.
½ cup soft bread-crumbs.
3 eggs.
Seasoning.

Remove skin and bones from salmon; separate into flakes and season with 1 teaspoon salt, a pinch of red pepper and 2 teaspoonfuls lemon juice. Cook bread-crumbs with milk for 5 minutes. Add salmon and yolks of 3 eggs, beat until thick. Fold in the stiffly beaten whites. Turn into a buttered baking dish, set in a pan of hot water and bake.

16. SALMON LOAF

(Serves about 6)

1 tin salmon.
1 egg.
1 cup milk.
2 cups rolled cream crackers.
1 oz. butter.
Salt, pepper and vinegar.

Remove skin and bone from the salmon, and separate into flakes. Add the well beaten egg and milk and stir in the cracker crumbs and butter. Add pepper, salt and a little vinegar and bake in a greased loaf tin for 30 minutes. Turn out and serve with egg sauce, or sliced cold with salad.

17. SCALLOPED PRAWNS

(Serves about 6)

2 cups cooked rice.
1½ cups milk.
1 cup tomato puree.
½ teaspoon cinnamon.
1½ cups cooked prawns.
1 teaspoon butter.
½ teaspoon mixed spice.
1 tablespoon butter.
1 tablespoon flour.

Make a sauce of the butter, flour and milk. Add all the other ingredients. Place in a pie dish, cover with bread-crumbs and bake for 15 minutes.

15. சாமன் சுஃப்ளே

1 டின் சாமன்.	½ கோப்பை மெதுவான ரொட்டித்தூள்.
½ கோப்பை பால்.	எலுமிச்சம்பழ ரசம்.
1 சிட்டிக்கை ரெட் பெப்பர்.	3 முட்டை.
1 தேக்கரண்டி உப்பு.	

சாமன் மீனைத் தோலுரித்து முட்களை எடுத்துவிட்டு, சிறு சிறு துண்டுகள் ஆக்கிக்கொண்டு அதில் ஒரு தேக்கரண்டி உப்பும், 1 சிட்டிக்கை ரெட் பெப்பர் என்னும் மிளகுதூளும், 2 தேக்கரண்டி எலுமிச்சம்பழ ரசமும் சேர்த்துக் கொள். ரொட்டித்தூளைப் பாலில் 5 நிமிஷம் சமைத்து, அதில் சாமன் மீனையும், 3 முட்டைகளின் மஞ்சள் கருவுகளையும் சேர்த்துத் தடிப்பாகும்வரை அடித்து, கெட்டியாய் அடித்த வெள்ளைக்கருவால் மடித்து மடித்து, வெண்ணெய் தடவிய பேக்கிங் டிஷில் போட்டு வெந்நீருள்ள ஒரு பானில் வைத்து பேக் பண்ணு.

16. சாமன் லோஃப்

1 டின் சாமன்.	2 கோப்பை க்றீம் க்ராக்கர் தூள்.
1 முட்டை.	1 அவு. வெண்ணெய்.
1 கோப்பை பால்.	உப்பும் மிளகுதூளும் வினிகரும்.

சாமன் மீனைத் தோலுரித்து முட்களை எடுத்துவிட்டுச் சிறு சிறு துண்டுகளாக்கிக்கொள். அதில் நன்றாய் அடித்த முட்டையும் பாலும் சேர்த்துக் கிளறிக் கொண்டே க்ராக்கர் தூள்களும் வெண்ணெயும் சேர்த்துக்கொள். அதன்பின் மிளகு, உப்பு, கொஞ்சம் வினிகர் இவைகளைச் சேர்த்து, வெண்ணெய் தடவிய லோஃப் டின்னில் 30 நிமிஷம் பேக் பண்ணித் திருப்பிப்போட்டு முட்டை ஸாஸோடு அல்லது ஆறவைத்து ஸ்லைஸ்களாக்கி, சலடுடன் பரிமாறு.

17. ஸ்காலப்ட் ப்ரான்ஸ்

2 கோப்பை சோறு.	1½ கோப்பை வேகவைத்த ப்ரான்ஸ்.
1½ கோப்பை பால்	1 தேக்கரண்டி வெண்ணெய்.
1 கோப்பை தொமாட்டோ பூரி.	½ தேக்கரண்டி ஸ்பைஸஸ் கலவை.
½ தேக்கரண்டி லவங்கப் பட்டை.	1 மேசைக்கரண்டி வெண்ணெய்.
	1 மேசைக்கரண்டி மாவு.

வெண்ணெயும், மாவும், பாலும் சேர்த்து ஸாஸ் செய்துகொண்டு, மற்றச் சரக்குகளையும் சேர்த்து ஒரு பய்-டிஷில் போட்டு ரொட்டித்தூள்களால் மூடி 15 நிமிஷம் பேக் பண்ணு.

18. FILLETS OF POMFRET WITH MUSHROOMS

1 pomfret.	1 small tin mushrooms.
1 oz. butter.	½ oz. flour.
1 egg hard-boiled.	1 cup milk.
Sprig of parsley.	Lemon juice and salt.

1 oz. grated cheese.

Fillet the pomfret, sprinkle with salt and lime juice and roll each piece, place on a flat buttered tin, cover with thickly buttered paper and cook in oven slowly for 10 minutes.

Melt the butter, add slowly the flour, then milk, and stir till it boils. Add mushroom liquor, pepper and salt and re-boil. Heat the mushrooms in a pan with a little butter. Arrange the fillets in a circle. Place mushrooms in centre and pour the sauce around. Sprinkle finely chopped egg over the whole. Serve the grated cheese separately.

19. FISH SOUFFLE

(Serves 3 or 4)

2 ozs. butter.	1 oz. flour.
½ pint milk.	½ lb. boiled fish.
4 eggs.	Pepper and salt.

A little lime juice.

Make a sauce of the butter, flour and milk, add seasoning, mashed fish and the beaten yolks of eggs and lime juice, mix well. Lastly fold in the stiffly beaten whites. Steam or bake about 30 minutes.

20. ASPARAGUS FISH CREAM

(Serves about 6)

2 cups cooked fish.	1 oz. gelatine.
1 cup milk.	1 tin asparagus tips.
2 ozs. cream.	Salt and pepper.

(A tin of Ideal Milk may be used instead of milk and cream.)

Mash the fish to a very fine soft consistency. Add the cream and seasoning. Dissolve gelatine in hot milk and ½ a cup of asparagus liquor. Mix with the fish. Arrange asparagus tips around a mould, heads pointing downwards, and fill the centre with the fish mixture. Chill in an ice box and turn out and serve with salad and mayonnaise sauce.

18. ஃபில்லத்ஸ் அஃப் பம்ஃப்ரேட் வித் மஷ்ரம்ஸ்

1 பம்ஃப்ரெட்.
1 அவு. வெண்ணெய்.
1 முட்டை (கெட்டியாய் வெந்தது).
1 கொத்து பார்ஸ்லி.
1 சின்ன டின் மஷ்ரம்ஸ்.
½ அவு. மாவு.
1 கோப்பை பால்.
எலுமிச்சம்பழ ரசமும் உப்பும்.
1 அவு. துருவிய சீஸ்.

பம்ஃப்ரெட்டை சதையைச் சுத்தமாய் எடுத்து எலும்பைத் தள்ளிவிட்டு, உப்புதூவி, எலுமிச்சம்பழ ரசம் தெளித்து, ஒவ்வொரு சதைத் துண்டையும் சுருட்டி, ஒரு தட்டையான டின்னில் வெண்ணெய் தடவி அதில் அச்சுருள்களை வைத்து, தடிப்பாய் வெண்ணெய் தடவிய காகிதத்தால் மூடி நிதானமான தீயுள்ள அடுப்பில் 10 நிமிஷம் வேகவை.

வெண்ணெயை உருக்கி அதில் மெதுவாய் மாவைக் கலக்கிக்கொண்டு அதன் பின் பாலைச் சேர்த்துக் கொதிக்கும்வரை கிளறு. அதன்பின் மஷ்ரம் வைத்துள்ள நீரையும், மிளகுதூளையும், உப்பையும் சேர்த்துத் திரும்பவும் கொதிக்கவை. ஒரு ஸாஸ்பானில் கொஞ்சம் வெண்ணெயோடு மஷ்ரம்களைச் சூடாக்கிக்கொள். அச்சுருள்களை வட்டமாக வைத்து மத்தியில் மஷ்ரம்களை வைத்து, சுற்றிலும் ஸாஸை ஊற்றி, முழுவதின்மேலும் வெந்த முட்டையைச் சிறு சிறு துணிக்கைகளாக்கித் தூவு. துருவிய சீஸைத் தனியாகப் பரிமாறு.

19. ஃபிஷ் சுஃப்ளே

2 அவு. வெண்ணெய்.
4 முட்டை.
½ பவு. வேகவைத்த மீன்.
½ பைன்ட் பால்.
1 அவு. மாவு.
உப்பும், மிளகுதூளும்.
கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசம்.

வெண்ணெயும் மாவும் சேர்த்து உருகவைத்து, பாலும், உப்பும், மிளகுதூளும் மொத்தையாகக் கடைந்த மீனும், அடித்த முட்டை மஞ்சள்கருவுகளும், எலுமிச்சம்பழ ரசமும் சேர்த்து நன்றாய்க் கலந்து, கெட்டியாய் அடித்த வெள்ளைக் கருவுகளில் திருப்பித் திருப்பி மடித்து சுமார் 30 நிமிஷம் ஆவியில் வேகவை அல்லது பேக் பண்ணு.

20. அஸ்பரகஸ் ஃபிஷ் க்றீம்

2 கோப்பை சமைத்த மீன்.
1 கோப்பை பால்.
2 அவு. க்றீம்.
1 அவு. ஜெலட்டின்.
1 டின் அஸ்பரகஸ் நுனிகள்.
உப்பும், மிளகுதூளும்.

(பாலுக்கும் க்றீமுக்கும் பதிலாக 1 டின் ஐடியல் மில்க் உபயோகிக்கலாம்)

மீனை மொத்தையாகக் கடைந்துகொள். அதில் க்றீமும், உப்பும், மிளகுதூளும் சேர்த்துக்கொள். ஜெலட்டினை சூடான பாலிலும் ½ கோப்பை அஸ்பரகஸ் உள்ள நீரிலும் கரைத்து மீனோடு கலந்து, அஸ்பரகஸ் நுனிகளைத் தலைக்கீழாய் ஒரு மோல்டில் அஸ்திரிபோல் போட்டு மத்தியில் மீன் கலவையை நிரப்பி, ஐஸ் பெட்டியில் வைத்து எடுத்துத் திருப்பிப் போட்டு, சலடோடும், மெயொனெஸ் ஸாஸோடும் பரிமாறு.

21. STEWED OYSTERS

2 doz. oysters.
¼ pint thick cream.
Lemon juice.
1 oz. butter.
1 oz. flour.
Salt and cayenne.

Beard the oysters and scald in their own liquor. Melt the butter, add the flour, mix well, and stir in the strained liquor and cream. Boil well. Put in the oysters, seasoning and lemon juice. Serve garnished with croutons of fried bread.

22. OYSTER PATTIES

With 6 ozs. puff pastry make patty cases, bake. Fill with stewed oysters, thickening the sauce a little more.

23. BAKED FISH AND TOMATOES

(*Serves about 4*)

1½ cups cold boiled fish.
2 eggs.
½ cup bread-crumbs.
½ cup stewed tomatoes.
Pepper, salt and cayenne.

Mix all together in a baking dish, sprinkle with bread-crumbs and small pieces of butter and bake for half an hour.

24. FISH CAKES

Cold fish.
1½ ozs. butter.
Pepper and salt.
3 boiled potatoes.
Chopped mint.
1 teaspoon anchovy sauce.

Mash the potatoes and bone and mash the fish. Add butter, sauce, etc., mix well and form into cakes. Egg and crumb them and fry a light brown.

21. ஸ்ட்யூட் ஆய்ஸ்டர்ஸ்

2 டஜன் ஆய்ஸ்டர்ஸ்.
1 அவு. வெண்ணெய்.
¼ பைன்ட் திக் க்றீம்.
1 அவு. மாவு.
எலுமிச்சம்பழ ரசம்.
உப்பும் கயனும்.

ஆய்ஸ்டர்களின் தாடிகளைப் பிடுங்கிவிட்டு அவைகளை அவைகளின் நீரிலேயே காய்ச்சு. வெண்ணெயை உருக்கி அதில் மாவை நன்றாய்க் கலந்து, அதில் அந் நீரை இறுத்துக்கொண்டு அதில் க்றீமைக் கலந்து, கொதிக்கவைத்து அதில் ஆய்ஸ்டர்களைப்போட்டு உப்பும் மிளகும் எலுமிச்சம்பழ ரசமும் சேர்த்து வறுத்த ரொட்டித்துண்டுகளைக்கொண்டு அலங்கரி.

22. ஆய்ஸ்டர் பட்டிஸ்

வேண்டிய ஸ்ட்யூட் ஆய்ஸ்டர்ஸ். அவைகள் இருந்த ஸாஸ்.

6 அவு. பேஸ்ட்றியைக்கொண்டு பட்டி உரைகள் செய்து பேக் பண்ணி, ஸாஸை இன்னுங் கொஞ்சம் தடிப்பாக்கிக்கொண்டு வெந்த ஆய்ஸ்டர்களை அவ்வுரைகளில் பூரணமாக வை.

23. பேக்ட் ஃபிஷ் அண்ட் தோமாட்டோஸ்

1½ கோப்பை வெந்து ஆறின மீன்.
½ கோப்பை ரொட்டித்தூள்.
2 முட்டை.
½ கோப்பை ஸ்ட்யூட் தொமாட்டோ பழம்.
மிளகுதூளும், உப்பும், கயனும்.

எல்லாவற்றையும் ஒரு பேக்கிங் டிஷில் கலந்து, ரொட்டித்தூளையும் வெண்ணெயின் சிறு துணிக்கைகளையும் தூவி ½ மணிநேரம் பேக் பண்ணு.

24. ஃபிஷ் கேக்ஸ்

வேக வைத்து ஆறின மீன்.
3 வெந்த உருளைக்கிழங்கு.
1½ அவு. வெண்ணெய்.
அரிந்த புதீனு.
மிளகுதூளும் உப்பும்.
1 தேக்கரண்டி அன்சவி ஸாஸ்.

உருளைக்கிழங்குகளை மசித்துக்கொண்டு, மீனை எலும்பெடுத்து மசித்துக் கொண்டு, அவ்விரண்டையும் சேர்த்து, அதில் வெண்ணெய், ஸாஸ் முதலியவற்றைச் சேர்த்து எல்லாவற்றையும் நன்றாய்க் கலந்து சிறு வடைகள்போல் ஆக்கிக் கொண்டு அவைகளில் முட்டை தடவி அவைகளை ரொட்டித்தூளில் புரட்டிப் பொன்நிறமாய் வறுத்துக்கொள்.

25. PARIS OMELETTE

4 eggs.	1 oz. grated cheese.
4 ozs. cooked fish.	Seasoning.
1 dessert spoonful milk.	1½ ozs. cocogem.

Break eggs into basin, add milk and cheese, beat well and season with pepper and salt. Free the fish from skin and bone and flake it up. Melt some cocogem in an omelette pan, heat it, pour in the egg mixture, cook over a quick fire until the eggs are cooked. Heat the fish, place it on the omelette, roll into shape, allow to acquire a golden brown colour. Turn on to a hot dish and serve immediately.

26. SCALLOPED CRAB

2 medium crabs.	½ oz. flour.
1½ ozs. butter.	1 tablespoon vinegar.
1 teaspoon made mustard.	2 tablespoons fresh bread-crumbs.
Grated nutmeg.	Salt and cayenne.

Place the live crabs in boiling water and cook for 15 minutes, cool and remove crab meat and mince finely. Melt 1 oz. of butter in saucepan, add flour and cook with a little milk stirring over the fire for 5 minutes. Add mustard, salt, vinegar, cayenne and grated nutmeg to taste. Stir in the crab meat and make very hot. Pile in the crab shells, sprinkle with crumbs and melted butter.

27. SHRIMP AND GREEN PEA PATTIES

1 small jar shrimps.	½ cup tinned peas.
½ pint milk.	2 tablespoons flour.

2 tablespoons butter.

Melt the butter, stir in the flour and when frothy stir in the milk. Bring to the boil, stirring constantly. Add peas and shrimps. When piping hot serve in hot pastry cases, garnished with parsley.

25. பாரிஸ் ஆமலெத்

4 முட்டை.
4 அவு. வெந்த மீன்.
1 தேக்கரண்டி பால்.
1 அவு. துருவிய சீஸ்.
உப்பும் மிளகுதூளும்.
$1\frac{1}{2}$ அவு. கொக்கஜம்.

ஒரு பேஸினுக்குள் முட்டைகளை உடைத்துப் போட்டுக்கொண்டு, பாலும் சீஸூம் சேர்த்து நன்ருய் அடித்து அதில் உப்பும் மிளகுதூளும் சேர்த்துக்கொள். மீனைத் தோலுரித்து எலும்புகளை எடுத்துவிட்டுச் சிறு துண்டுகளாக அரிந்து கொள். ஒரு ஆமலெத் பானில் கொக்கஜத்தை உருக்கி, காய்ச்சி, அதில் முட்டைக் கலவையை ஊற்றித் தீவிரத் தீயுள்ள அடுப்பில் வைத்து முட்டைகள் வேகுமட்டும் வறுத்து, சூடாக்கின மீனை ஆமலெத்தின்மேல் வைத்து மடித்துப் பொன்நிறமாகும் வரை வேகவைத்து ஒரு சூடான டிஷில் மாற்றி உடனே பரிமாறு.

26. ஸ்காலப்ட் க்றப்

2 நடுத்தர க்றப் (நண்டு).
$1\frac{1}{2}$ அவு. வெண்ணெய்.
1 தேக்கரண்டி தயாரித்த மஸ்டர்ட்.
துருவிய ஜாதிக்காய்.
$\frac{1}{2}$ அவு. மாவு.
1 மேசைக்கரண்டி வினிகர்.
2 மேசைக்கரண்டி புது ரொட்டித்தூள்.
கயன்.

உயிரோடுள்ள நண்டுகளைக் கொதிக்கிற தண்ணீரில் போட்டு 15 நிமிஷம் வேகவைத்து, பிறகு ஆறவைத்து, நண்டுகளின் இறைச்சியை எடுத்து, சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள். ஒரு ஸாஸ்பானில் வெண்ணெயை உருக்கி அதில் மாவைச் சேர்த்து அடுப்பில் வைத்து 5 நிமிஷநேரம் கிளறிக்கொண்டே வேக வைத்து, அதில் மஸ்டர்டும், கயனும், துருவிய ஜாதிக்காயும், வினிகரும் சேர்த்து, அதில் நண்டு இறைச்சியும் சேர்த்து, அதிக சூடாக்கி நண்டின் ஓட்டுக்குள் போட்டு ரொட்டித்தூளைத் தூவி, உருக்கிய வெண்ணெயையும் தெளி.

27. ஷ்ரிம்ப் அண்ட் க்றீன் பீ பட்டீஸ்

1 சின்ன ஜாடி ஷ்ரிம்ப்ஸ்.
$\frac{1}{2}$ பைண்ட் பால்.
$\frac{1}{2}$ கோப்பை சமைத்த பீஸ்.
2 மேசைக்கரண்டி மாவு.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.

வெண்ணெயை உருக்கி மாவைக் கிளறிக்கொண்டே போட்டு, கொதிவருகையில் கிளறிக்கொண்டே பாலை ஊற்றிக் கொதிக்கும்வரை, விடாமல் கிளறிக் கொண்டேயிருந்து கொதிவருகையில் பீஸூம் ஷ்ரிம்ப்ஸூம் சேர்த்து, கொதிக்க ஆரம்பிக்கும் சத்தம் 'ஜோ' என்று கேட்கும்போது, சூடாயுள்ள பேஸ்ட்றி உரைகளில் போட்டு, பார்ஸ்லியைக்கொண்டு அலங்கரி.

28. SALMON OR TUNNY FISH WITH RICE

3 cups cooked rice. 2 cups salmon or tunny fish.
2 tablespoons butter.

Line a well greased baking dish with cooked rice, covering bottom and sides. In the centre put the flaked fish, and cover with rice and small pieces of butter. Heat thoroughly in oven and until rice is slightly browned. Serve with egg sauce.

29. SALMON PIE

(Serves about 6)

1 cup flaked salmon.
1 cup salmon liquor.
1 cup diced celery.
1 cup cooked peas.
1 teaspoon lime juice.
2 tablespoons flour.
4 tablespoons butter.
1 cup milk.
½ tablespoon onion juice.
1 teaspoon salt.

Melt the butter and flour and when bubbling, add the milk and salmon liquor, stir until thick and smooth. Add salt and lime juice, celery, peas and salmon. Pour into a warm casserole and bake for 10 minutes. Place pieces of cooked pastry cut in fancy shapes on top.

30. CASSEROLE OF FISH

(Serves about 6)

2 lbs. fish.
2 ozs. butter.
Sliced potatoes.
2 small onions.
4 small carrots.
4 tomatoes.
Salt and pepper.

Put butter in casserole and add onions, carrots, and tomatoes thinly sliced, pack in fish, filleted and cut into convenient pieces. Sprinkle with pepper and salt and cover with sliced potatoes. Place small pieces of butter on top. Put on the lid and cook for about 1 hour (standing the casserole in a pan of water). Remove the lid 10 minutes before serving to brown the potatoes.

28. சாமன் அல்லது தன்னி ஃபிஷ் வித் ரைஸ்

3 கோப்பை சோறு.
2 மேசைக்கரண்டி வெண்ணெய்.
2 கோப்பை சாமன் அல்லது தன்னி மீன்.

வெண்ணெய் தடவிய பேக்கிங் டிஷில் சோற்றை அடியிலும் பக்கங்களிலும் அஸ்திரிபோல் வைத்து, மத்தியில் 4 துண்டுகளாக அரிந்த மீனை வைத்து அதன்மேல் சோற்றைப்போட்டு மறைத்து, அதன்மேல் சிறு வெண்ணெய் துண்டுகளை வைத்து, சோறு சற்று சிவக்கும்வரை அடுப்பில் நன்ருய்க் காய்ச்சி எக் ஸாஸோடு பரிமாறு.

29. சாமன் பய்

4 மேசைக்கரண்டி வெண்ணெய்.
$\frac{1}{2}$ மேசைக்கரண்டி வெங்காயச்சாறு.
1 கோப்பை துண்டுகளாக அரிந்த செலெரி.
1 கோப்பை சமைத்த பீஸ்.
1 தேக்கரண்டி எலுமிச்சம்பழச் சாறு.
2 மேசைக்கரண்டி மாவு.
1 கோப்பை சாமன் இருந்த
1 கோப்பை பால்.
1 கோப்பை துண்டுகளாக்கிய சாமன்.
1 தேக்கரண்டி உப்பு.

வெண்ணெயும் மாவும் உருக்கிக் கொதி வருகையில், பாலும் சாமன் இருந்த நீரும் சேர்த்து மாவெல்லாம் கரைந்து தடிப்பாகும்வரை கிளறி, உப்பும் எலுமிச்சம்பழச் சாறும், செலெரியும், பட்டாணியும், சாமனும் சேர்த்து, கொஞ்சம் சூடாயுள்ள கஸரொலில் ஊற்றி 10 நிமிஷம் பேக் பண்ணி, வெந்த பேஸ்ட்ரி துண்டுகளை அழகாக்கி மேலே வைத்து அலங்காரம் செய்.

30. கஸரோல் அஃப் ஃபிஷ்

2 பவு. ஃபிஷ் ஃபில்லட்ஸ்.
2 அவு. வெண்ணெய்.
பில்லைகளாய் துண்டரித்த உருளைக்கிழங்கு.
2 சிறு வெங்காயம்.
4 சிறு காரெத்கள்.
4 தொமாட்டோ பழம்.
உப்பும் மிளகுதூளும்.

கஸரொலில் வெண்ணெய் வைத்து அதில் வெங்காயம், காரெத்கள், தொமாட்டோ பழங்கள் இவைகளை மெல்லிய பில்லைகளாக அரிந்து சேர்த்துக் கலக்கிக்கொண்டு, ஃபில்லெத் செய்து சௌகரியமான துண்டுகளாக அரிந்த மீனில் அக்கலவையை அடைத்து, உப்பும் மிளகுதூளும் தூவி, உருளைக்கிழங்கு பில்லைகளால் மறைத்து மூடி மேலே சிறு வெண்ணெய் துண்டுகளை வைத்து மூடியால் மூடி கஸரொலைத் தண்ணீருள்ள ஒரு பானில் நிறுத்தி ஒருமணி நேரம் சமைக்கவும். உருளைக்கிழங்கு சிவக்கும்படி பரிமாறுவதற்கு 10 நிமிஷம் முன் மூடியை எடுத்து விடு.

31. CREAMED HADDOCK

1 finnan haddock.
½ oz. butter.
½ pint milk.
½ tablespoon flour.

Cut fish into 4 fillets, cover with boiling water and allow to stand for 10 minutes, then skin and bone. Melt butter and stir in the flour. When bubbling add the milk slowly. Keep stirring until the sauce is smooth and boiling, and add the fish. Season with pepper and salt and simmer for a few minutes. Serve with boiled rice or mashed potatoes.

32. FISH BAKED IN FRUIT JUICE

Fillets of fish cut in neat slices.
Juice of an orange or lemon or lime.
Salt and pepper.

Place the fish in a casserole or baking dish, sprinkle with salt and pepper. Add the fruit juice and sufficient water to cover and cook 20 or 30 minutes.

33. PRAWN RAMEQUINS (*cold*)

½ pint of cooked prawns or
½ pint of shelled shrimps.
Cochineal.
6 olives.
½ pint cream.
Juice of ½ lemon.
Cayenne.

Chop the cooked prawns, sprinkle with cayenne and lemon juice and put on ice till required. Beat the cream until thick and stir in a few drops of cochineal. Mix the cream with the prawn and put in ramequin cases. Place an olive at each end and the head of a prawn in the centre.

31. க்றீம்ட் ஹடக்

1 ஃபினன் ஹடக். ½ அவு. வெண்ணெய்.
½ பைன்ட் பால். ½ மேசைக்கரண்டி மாவு.

மீனை 4 துண்டுகளாக நறுக்கி, அத்துண்டுகள் அமிழும் அளவு கொதிக்கிற வெந்நீர் ஊற்றி 10 நிமிஷநேரம் அப்படியே விட்டுவை. அதன்பின் தோலுரித்து எலும்புகளை எடுத்துவிடு. வெண்ணெயை உருக்கிக் கிளறிக்கொண்டே மாவைச் சேர்த்துக் கொதிவரும்போது பாலை மெதுவாய்ச் சேர்த்து, மாவெல்லாம் கரைந்து ஸாஸ் கொதிக்கும்வரை கிளறிக்கொண்டிருந்து, பிறகு மீனைச் சேர்த்து, அதில் மிளகுதூளும் உப்பும் போட்டு சில நிமிஷநேரம் நிதானமான தீயில் வைத்து, சோறு அல்லது மசித்த உருளைக்கிழங்கோடு பரிமாறு.

32. ஃபிஷ் பேக்ட் இன் ஃப்ரூத் ஜ்யூஸ்

சீரான பில்லைகளாக அரிந்த மீன் ஃபில்லெத்ஸ். உப்பும் மிளகுதூளும்.
ஆரஞ்ச் அல்லது எலுமிச்சம் பழ ரசம்.

மீனை கஃரோல் அல்லது பேக்கிங் டிஷில் வைத்து, உப்பும், மிளகுதூளும் தூவி, பழரசத்தை ஊற்றி எல்லாம் அமிழும்படி போதுமான தண்ணீர் ஊற்றி 20 முதல் 30 நிமிஷம்வரை வேகவை.

33. ப்ரான் ரம்கின்ஸ் (கோல்ட்)

½ பைன்ட் சமைத்த ப்ரான்ஸ் அல்லது ½ பைன்ட் ஓடெடுத்த ஷ்ரிம்ஸ். கொச்னீல்.
6 ஆலிவ் பழங்கள். ½ பைன்ட் க்றீம். ½ எலுமிச்சம்பழ ரசம்.
கயன்.

சமைத்த ப்ரான்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொண்டு அதன்மேல் கயன் தூவி, எலுமிச்சம்பழ ரசமும் தெளித்து, மறுபடியும் வேண்டும்வரை அதை ஐசில் வைத்துக்கொள். க்றீமைத் தடிப்பாகும்வரை அடித்து, அதில் சில துளி கொச்னீலை விட்டுக் கிளறு. க்றீமை ப்ரானோடு கலந்து, ரம்கின் உரைகளில் போடு; உரைகளின் இரு மூனையிலும் ஒவ்வொரு ஆலிவ் பழத்தை வை; மத்தியில் ப்ரான் தலையை வை.

34. STUFFED AND BAKED HERRINGS

4 herrings.	Bread-crumb stuffing.
1 oz. flour.	Dripping.

Salt and pepper.

Clean the herrings, remove fins, backbone and as many small bones as possible. Score the skin in 2 or 3 places. Lay skin side down and spread with stuffing, roll up, rub with seasoned flour and fasten with fine string. Put on greased baking tin, with small pieces of dripping on the top and bake in a moderate oven for 20 minutes. Baste frequently. Before serving, remove the string, arrange rolls on hot dish and garnish with parsley. Serve with mashed potatoes.

34. ஸ்டஃப்ட் அண்ட் பேக்ட் ஹெறிங்ஸ்

4 ஹெறிங்ஸ். ரொட்டித்தூள் பூரணம்.
1 அவு. மாவு. ட்றிப்பிங்.
உப்பும் மிளகுதூளும்.

ஹெறிங்ஸைச் சுத்தம் செய்து, செட்டைகளையும், முதுகெலும்பையும் ஆன மட்டும் சிறு எலும்புகளையும் எடுத்துவிட்டு, தோலை இரண்டு அல்லது மூன்று இடங்களில் கிழித்துவிட்டு, தோல் பக்கம் கீழே இருக்கும்படி வைத்து, பூரணம் தடவிச் சுருட்டி, உப்பும் மிளகுதூளும் சேர்த்த மாவில் நன்றாய்ப் புரட்டி மெல்லிய நூலால் கட்டி, வெண்ணெய் தடவிய பேக்கிங் டின்னில் வைத்து, அதன்மேல் சிறு ட்றிப்பிங் துண்டுகளை வைத்து, நடுத்தரத் தீயுள்ள அடுப்பில் 20 நிமிஷம் வரை உருகிவரும் ட்றிப்பிங்கை அடிக்கடி எடுத்து அதன்மேல் போட்டுக் கொண்டே பேக் பண்ணு. பரிமாறும் முன்னே நூல்கட்டை அவிழ்த்துவிட்டுச் சுருள்களைச் சூடான டிஷில் சீராய் வைத்து, பார்ஸ்லியினால் அலங்கரித்து, மசித்த உருளைக்கிழங்கோடு பரிமாறு.

NOTES

BREAKFAST AND LUNCH DISHES

OMELETS

A special pan should be kept for omelets. It should not be too large and should be thick and heavy to ensure slow cooking.

It is not advisable to make an omelet of more than six eggs at a time unless very expert.

A tablespoon of water or cream added to two or three eggs will make the omelet lighter.

The eggs should not be beaten too much—only sufficiently to mix the whites and yolks well. Use as little butter as possible to avoid the omelet becoming greasy.

1. PLAIN OMELET

3 eggs.	1 tablespoon water.
½ oz. butter.	Salt and pepper.

1 teaspoon chopped parsley.

Break the eggs into a bowl, beat them a little and add parsley, water, salt and pepper. Melt the butter in an omelet pan and when hot pour in the eggs, hold over a low heat to cook. Stir a little in the centre. As the omelet begins to set round the edge, loosen with a knife and allow the uncooked part to run underneath. As soon as the omelet is set at the bottom, though still soft on top, slip a flexible knife underneath and double one half over on to the other. Let it cook a minute to set any egg that has run out, then turn on to a paper on a hot dish with the side next the pan on top, and serve at once.

A second method which makes a more puffy omelet is to separate the whites from the yolks. Beat the yolks add the parsley, water and seasoning, whip the whites to a stiff froth and stir them lightly into the yolks mixture. Cook as above.

2. BACON OMELET

Cut the bacon in small pieces. Melt the butter in a pan, put in the bacon and fry until cooked. Add the omelet mixture and finish cooking as in plain omelet.

If desired, herbs may be added.

ப்ரக்ஃபாஸ்ட் அண்ட் லஞ்ச் டிஷஸ்

ஆமலேத்

ஆமலெத்களுக்கென்று ஒரு தனி பான் இருக்கவேண்டும். அது ரொம்பப் பெரிதாக இருக்கக்கூடாது. நிதானமாய் வேகுவதற்கான தப்பனும், கனமும் உள்ளதாயிருக்கவேண்டும்.

அதிகக் கெட்டிக்காரனாயிருந்தாலொழிய தடவைக்கு 6 முட்டைகளுக் கதிகமாயுள்ள ஆமலெத் செய்வது நல்லதல்ல. 2 அல்லது 3 முட்டைகளோடு ஒரு மேசைக்கரண்டி தண்ணீர் அல்லது க்றீம் சேர்த்தால் ஆமலெத் லேசாயிருக்கும்.

முட்டைகளை அதிகமாய் அடிக்காமல் வெள்ளைக்கருவும் மஞ்சள்கருவும் ஒன்றாய்க் கலந்துகொள்ளும்மட்டும் மாத்திரம் அடிக்கவேண்டும். வெண்ணெய் ஆனமட்டும் கொஞ்சமாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் ஆமலெத் அதிக எண்ணெய்க் கசிவுள்ளதாகிவிடும்.

1. ப்ளேய்ன் ஆமலேத்

3 முட்டை. 1 மேசைக்கரண்டி தண்ணீர்.
½ அவு. வெண்ணெய். உப்பும் மிளகுதூளும்.
1 தேக்கரண்டி நறுக்கிய பார்ஸ்லி.

முட்டைகளை உடைத்து ஒரு போலில் போட்டுக்கொண்டு கொஞ்சம் அடித்து அதில் பார்ஸ்லியும் தண்ணீரும் உப்பும் மிளகுதூளும் சேர்த்துக்கொள். ஒரு ஆமலெத் பானில் வெண்ணெயை உருக்கிச் சூடாயிருக்கும்போதே போலில் உள்ளதை பானில் போட்டு நிதானமான தீயில் வைத்துச் சமை. அப்போது நடுவில் கொஞ்சமாய்க் கிளறு. ஆமலெத்தானது ஓரத்தில் கெட்டிப்பட ஆரம்பிக் கும்போது அது பானோடு ஒட்டிக்கொள்ளாதபடி ஒரு கத்தியால் நீக்கி வேகாத பாகத்தை அடியில் செல்லும்படி விடு. ஆமலெத்தானது அடியிலும் கெட்டிப் பட்டவுடனே மேலே இன்னம் மெத்தென இருந்தபோதிலும் வளையும் கத்தி ஒன்றை அடியில்விட்டு ஒரு பகுதி மற்றொரு பகுதியின்மீது இருக்கும்படி மடித்துக்கொள். மடிக்கையில் முட்டை கொஞ்சம் ஒழுகியிருந்தால் அது கெட்டிப் படுவதற்காக ஒரு நிமிஷம் வேகவிடு. அதன்பின் சூடாயுள்ள ஒரு டிஷில் ஒரு காகிதத்தை வைத்து அந்த டிஷை பானுக்கு அடுத்தாப்போல் வைத்துக்கொண்டு அதில் அந்த ஆமலெத்தைத் திருப்பிப்போட்டு உடனே பரிமாறு.

ஆமலெத் அதிகமாய் உப்பவேண்டுமானால் முட்டையின் மஞ்சள்கருவி லிருந்து வெள்ளைக்கருவைப் பிரித்துவிட்டு மஞ்சள்கருவை அடித்து அதில் பார்ஸ்லியும் தண்ணீரும் உப்பும் மிளகுதூளும் சேர்த்துக்கொள். வெள்ளைக் கருவை கெட்டிப்பட்டு நுரைகொள்ளும்படி அடித்து மஞ்சள்கருவுக் கலவையில் மெதுவாய்க் கிளறிக்கொண்டே ஊற்றி மேலே சொன்னபடி சமைத்துக்கொள்.

2. பேக்கன் ஆமலேத்

பேக்கனைச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள். ஒரு பானில் வெண்ணெயை உருக்கிக்கொண்டு அதில் பேக்கன் துண்டுகளைப் போட்டு நன்றாய் வேகுமட்டும் பொரித்துக்கொள். அதன்பின் ஆமலெத் கலவையைச் சேர்த்து வெறும் ஆமலெத்துக்குச் செய்வதுபோல் சமைத்து எடுத்துக்கொள்.

இஷ்டமானால் ஹார்ப்ஸும் சேர்த்துக்கொள்ளலாம்.

3. SWEETBREAD OMELET

1 or 2 ozs. cooked sweetbread.	1 tablespoon good white sauce.
3 eggs.	Seasoning.

Break the sweetbreads into small pieces, season and mix with the sauce. Make the omelet according to the directions for plain omelet and just before folding it over, put the sweetbread mixture in the centre, fold and finish as for plain omelet.

Cooked brains or chickens livers may be used in the same way.

4. CHEESE OMELET

Add 1 oz. of grated cheese to the omelet mixture and sprinkle a little grated cheese over the omelet before serving.

5. FISH OMELET

3 ozs. of cooked fish to 3 eggs.

Remove skin and bone from the fish and flake finely and add to the omelet mixture.

6. HAM OMELET

3 ozs. of cooked ham to 3 eggs

Chop or mince the ham finely and add to the omelet mixture.

7. HAM AND EGGS WITH RICE

Boil a teacupful of rice till tender, dry it before the fire until each grain is separate. Turn the rice into a pan with a tablespoon of hot bacon fat, make hot and season with salt and pepper.

Place the rice on a hot dish and arrange on it slices of fried ham with a poached egg on each and serve.

8. SAUSAGE EGGS

½ lb. sausage meat.	1 oz. butter.
4 eggs.	1 teaspoon chopped parsley.

Butter 4 small moulds and line with sausage meat. Put in the oven for 15 to 20 minutes. Remove. Break eggs carefully, one into each mould and top each with a little butter. Cover with greaseproof paper, and return to oven until the egg is set. Sprinkle with fresh chopped parsley.

3. ஸ்வீட் ப்ரேட் ஆமலேத்

1 அல்லது 2 குக்ட் ஸ்வீட் ப்ரெட். 3 முட்டை.
1 மேசைக்கரண்டி நல்ல ஒய்ட் ஸாஸ். உப்பும் மிளகுதூளும்.

ஸ்வீட் ப்ரெட்டுகளைச் சிறு துண்டுகளாக்கிக்கொண்டு உப்பு மிளகு சேர்த்து ஸாஸோடு கலந்துகொள். வெறும் ஆமலெத் தயாரிப்பதுபோல் இந்த ஆமலெத்தையும் தயாரித்துக்கொண்டு அதை மடிக்குமுன் ஸ்வீட் ப்ரெட் கலவையை மத்தியில் வைத்து மடித்து வெறும் ஆமலெத்துக்குச் செய்வதுபோல் செய்து மூடி. சமைத்த மூளை அல்லது சிக்கன் லிவரையும் அதேமாதிரி உபயோகிக்கலாம்.

4. சீஸ் ஆமலேத்

1 அவு. துருவிய சீஸை ஆமலெத் கலவையோடு சேர்த்துக்கொள். ஆமலெத்தின்மீது துருவிய சீஸில் கொஞ்சம் தூவிப் பரிமாறு.

5. ஃபிஷ் ஆமலேத்

3 முட்டைகளுக்கு 3 அவு. குக்ட் ஃபிஷ்.

மீனைத் தோலுரித்து முட்களை எடுத்துவிட்டு, சிறு சிறு சில்லுகளாக்கிக் கொண்டு ஆமலெத் கலவையில் சேர்த்துக்கொள்.

6. ஹாம் ஆமலேத்

3 முட்டைகளுக்கு 3 அவு. குக்ட் ஹாம்.

ஹாமைப் பொடித்துண்டுகளாகக் கொத்தி ஆமலெத் கலவையில் சேர்த்துக் கொள்,

7. ஹாம் அண்ட் எக்ஸ் வித் ரைஸ்

ஒரு தேக்கோப்பை அரிசியை கைக்கு மெதுவுபடும்வரை கொதிக்கவைத்து, சோறு ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளாதபடி அடுப்பில் உலைப்பாற வைத்துப் பிறகு அந்தச் சோற்றை மேசைக்கரண்டி அளவு சூடான பேக்கன் கொழுப்பு உள்ள பானில் போட்டுக்கொண்டு சூடாக்கி உப்பும் மிளகுதூளும் சேர்த்துக் கொள்.

Pour over the pears as soon as jelly is cool, and when set, whip up $\frac{1}{4}$ pint cream and arrange in little piles. Custard may be used instead of cream.

Any tinned or fresh fruit may be used.

40. SUMMER PUDDING

Sponge cake.
One tin of blackcurrants or any soft fruit.
One packet jelly or 1 oz. gelatine.
Whipped cream to serve.

Line a mould with the sponge cake, take part of the syrup of fruit and saturate the sponge. Mix the remaining syrup with dissolved jelly or gelatine, add fruit to this and pour into mould. Stand a weighted plate on top and leave to set. Turn out into glass dish and decorate with whipped cream.

38. காஃபி ஸ்பஞ்ச்

2 கோப்பை ஸ்ற்ரூங் காஃபி.
4 ஜெலட்டின் துண்டுகள்.
2 அவு. வெண்ணெய்.
$1\frac{1}{2}$ கோப்பை சர்க்கரை.
2 முட்டை.
நறுக்கின வால்நட் அல்லது வாதுமை.
வெனிலா எஸன்ஸ்.
உப்புக் கரண்டி உப்பு.

வெண்ணெய் தடவிய மோல்டில் ஸ்பஞ்ச் கேக்கைப் பில்லைகளாகவோ நீட்டுத் துண்டுகளாகவோ அரிந்து அஸ்திரிபோல் பரப்பிக்கொள். $\frac{3}{4}$ கோப்பை சர்க்கரையும் வெண்ணெயும் ஒன்ருய்ச் சேர்த்து அடித்து அதோடு அடித்த மஞ்சள் கருவும் உப்பும் வெனிலாவும் சேர்த்துக் கலவையாக்கி வைத்துக்கொண்டு அதில் கொஞ்சம் ஸ்பஞ்ச் துண்டுகளின்மீது தடிப்பாய்த் தடவி, அதன்மேல் நறுக்கிய பருப்புகளைத் தெளித்து, அதன்மேல் இன்னம் சில ஸ்பஞ்ச் கேக் துண்டுகளை வைத்து ஒவ்வொன்றின்மேலும் அக்கலவையில் கொஞ்சம் எடுத்து முன்போலவே தடிப்பாகத் தடவி பருப்புத் துணிக்கைகளைத் தெளித்து அப்படியே மோல்டின் மூன்றில் இரண்டு பாகம்வரை நிறையச் செய். ஜெலட்டினைக் கொதிக்கிற காஃபியில் கரைத்துக்கொண்டு மீதி சர்க்கரையும் சேர்த்து மோல்டில் ஊற்றி ஐஸ் பெட்டியில் கெட்டிபட வைத்து, அதன்பின் எடுத்து அடித்த க்றீமோடு பரிமாறு.

39. ஜல்லீட் பேர்ஸ்

பேறி பழங்களை இரண்டாக அறுத்துத் தோலும் கொட்டையும் எடுத்துவிட்டு, கொஞ்சம் சர்க்கரையும் இலவங்கப்பட்டையும் சேர்த்து மெதுவுபடும்வரை வேகவைத்து நீரை ஒரு டிஷில் இறுத்துக்கொண்டு பேறியை எடுத்து வேருெரு டிஷில் பரப்பிவைத்துக்கொள். தண்ணீருக்குப் பதிலாய் பேறி வெந்த நீரைச் சேர்த்து, போதாவிட்டால் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து ஒரு பைண்ட் ராஸ்பெறி ஜெல்லி செய்துகொள்.

அந்த ஜெல்லி ஆறினதும் அதை பேறியின்மீது ஊற்றிவை. அது கொஞ்சம் கெட்டிப்பட்டதும் $\frac{1}{4}$ பைண்ட் க்றீமை அடித்து அதன்மேல் சிறு சிறு மேடுகளாக அலங்கரி. க்றீமுக்குப் பதிலாய்க் கஸ்டர்ட் உபயோகிக்கலாம்.

எந்த டின்ட் பழமாவது அல்லது பறித்த பழமாவது உபயோகிக்கலாம்.

40. சம்மர் புடிங்

ஸ்பஞ்ச் கேக்.
1 டின் ப்ளாக் கரன்ட்ஸ் அல்லது வேறெதாவது மிருதுவான பழம்.
1 பாக்கெட் ஜெல்லி அல்லது 1 அவு. ஜெலட்டின்.
அடித்த க்றீம் (பரிமாறுவதற்கு).

ஒரு மோல்டில் ஸ்பஞ்ச் கேக்கை அஸ்திரியாக வைத்து, பழஸிரப்பில் கொஞ்சம் எடுத்து அதை அந்த அஸ்திரியின்மேல் போட்டு நனை. மீதியுள்ள ஸிரப்பை, கரைத்த ஜெல்லி அல்லது ஜெலட்டினேடு கலந்து அதில் பழத்தைச் சேர்த்து மோல்டில் ஊற்று. அதன்மேல் கனமுள்ள ஒரு ப்ளேட்டை வைத்துக் கெட்டிப்பட வை. கெட்டியானதும் அதை ஒரு க்ளாஸ் டிஷில் திருப்பிப்போட்டு அடித்த க்றீமால் அலங்கரித்து வை.

41. COLD CHOCOLATE SOUFFLE

¼ lb. chocolate or chocolate powder.
Whites of 2 eggs.
1 teacup of cream.
½ teacup water.
Vanilla essence to flavour.
1 teacup milk.
1 oz. castor sugar.
½ oz. gelatine.
Nuts for decoration.

Grate the chocolate and put into a small saucepan with milk and sugar. Stir over low heat until chocolate is dissolved and has become quite smooth. Melt the gelatine in ½ teacup of water and strain it into the chocolate, add the vanilla essence and let this become cool. Whisk the cream and whites of eggs separately. Stir them lightly into the chocolate mixture and pour all into a china souffle dish and leave until set. When set sprinkle chopped nuts over the top of the souffle.

N.B.—Chocolate Cream is made in the same manner, but the yolks of the eggs are made into a custard with the milk and chocolate prepared as above.

42. MANGO CREAM

½ lb. flesh of green mangoes.
1 coffee cup Nestle's cream.
¾ oz. gelatine.
1 large cup milk.
½ lb. sugar.
Green colouring.

Slice the mango, cover with water and boil until quite soft. Strain through a fine sieve and mix with sugar, melt the gelatine in the milk, add the mango and a little green colouring and stir over fire until it thickens, add the cream, remove from fire and stir until cool, pour into a wetted mould and chill.

Serve with a thick yellow custard round it.

41. கோல்ட் சாக்கோலத் சுஃப்ளே

$\frac{1}{4}$ பவு. சாக்கொலத் அல்லது சாக்கொலத் பவுடர்.
2 முட்டை வெள்ளைக்கருவு.
1 தேக்கோப்பை க்றீம்.
$\frac{1}{2}$ தேக்கோப்பை தண்ணீர்.
வாதுமை முதலிய பருப்புகள் (அலங்கரிக்க).
வெனிலா எஸன்ஸ் (மணத்துக்கு).
1 தேக்கோப்பை பால்.
1 அவு. கஸ்டர் சர்க்கரை.
$\frac{1}{2}$ அவு. ஜெலட்டின்.

சாக்கொலத்தைத் தூளாக்கிக்கொண்டு ஒரு சின்ன ஸாஸ்பானில் பாலோடும் சர்க்கரையோடும் போட்டுக்கொள். அதை நிதானமான தீயில் சாக்கொலத்தெல்லாம் கரைந்து ஒன்ருகும்வரை கிளறு. ஜெலட்டினை $\frac{1}{2}$ தேக்கோப்பை தண்ணீரில் உருக்கி அத்தண்ணீரை அக்கலவையில் இறுத்துக்கொண்டு அதில் வெனிலா எஸன்ஸைச் சேர்த்து அதை யெல்லாம் ஆறவை. க்றீமையும் முட்டைகளின் வெள்ளைக் கருவையும் தனித்தனியே அடித்து, சாக்கொலத் கலவையில் போட்டுக் கலந்து எல்லாவற்றையும் ஒரு சைஞ சுஃப்ளே டிஷில் போட்டுக் கெட்டிப் படும் வரைக்கும் விட்டுவை. கெட்டிப்பட்டதும் துணுக்குகளாக்கிய பருப்புகளை சுஃப்ளேயின்மேல் தூவு.

குறிப்பு:—சாக்கொலத் க்றீமும் அதேமாதிரிதான் செய்யப்படுகிறது. ஆனல் மேலே சொன்னபடி பாலையும் சாக்கொலத்தையும் தயாரித்துக்கொண்டு அதோடு முட்டைகளின் மஞ்சள் கருவைக் கஸ்டர்ட் ஆக்கவேண்டும்.

42. மாங்கோ க்றீம்

$\frac{1}{2}$ பவு. மாங்காய்ச் சதை.
1 காஃபி கோப்பை நெஸ்ஷில்ஸ் க்றீம்.
$\frac{3}{4}$ அவு. ஜெலட்டின்.
1 பெரிய கோப்பை பால்.
பச்சை கலரிங்.
$\frac{1}{2}$ பவு. சர்க்கரை.

மாங்காயைப் பில்லைகளாக அரிந்து பில்லைகள் அமிழும்வரை தண்ணீர் ஊற்றி நன்ருய் மெதுவுபடும்வரை கொதிக்கவைத்து, சிறு கண்களுள்ள சல்லடையில் வடிகட்டிச், சர்க்கரை சேர்த்துக்கொள். ஜெலட்டினைப் பாலில் உருக்கி அதில் மாங்காயைச் சேர்த்துக் கொஞ்சம் பச்சை கலரிங் சேர்த்து அடுப்பில் வைத்துத் தடிக்கும்வரை கிளறி அதில் க்றீம் சேர்த்து அடுப்பிலிருந்து எடுத்து ஆறும்மட்டும் பின்னும் கிளறி, நனைத்து ஈரமாக்கின அச்சில் ஊற்றிச் சில்லிடவை.

அதைச் சுற்றித் தடித்த மஞ்சள் நிற கஸ்டர்ட் வைத்துப் பரிமாறு.

43. PEACH RUPERT

1 oz. rice.
½ pint milk.
1 oz. sugar.
3 tablespoons cream.
Tinned peaches.
Flavouring.

Wash the rice, place in double boiler, with milk and cook until tender. Add sugar and flavouring and when quite cold mix in slightly whipped cream. Half fill champagne glasses and place a piece of peach on top. Pour a little jam glaze over each and decorate with whipped cream.

44. STRAWBERRY SHORT-CAKE

1 egg.
4 ozs. flour.
¾ gill milk.
2 ozs. butter.
Vanilla essence.
1 teaspoonful baking powder.
1 gill cream.
½ lb. strawberries.
4 ozs. sugar.

Beat the butter and sugar to a cream. Beat the egg together with the milk. Add the flour and egg and milk alternately, beating well. Put into two greased sandwich tins. When the cake is done turn out of the tins to cool. Whip the cream, sweeten to taste, mash half the strawberries, spread one half of the cake thickly with the sweetened cream and mashed strawberries and place the other cake on top. Spread rest of cream on top of the cake and garnish with remaining strawberries.

45. CHOCOLATE PARFAIT

(Serves 6 or 8)

¾ cup sugar.
⅓ cup water.
3 egg yolks.
2 cups thick cream.
1 teaspoon vanilla.
½ cup grated chocolate.
Pinch of salt.

Cook the sugar, water and chocolate to a thin syrup, add salt and vanilla and pour very slowly over slightly beaten egg yolks, beating well. Cool and fold in the whipped cream and freeze.

43. பீச் ரூபர்ட்

1 அவு. அரிசி.	3 மேசைக்கரண்டி க்றீம்.
½ பைன்ட் பால்.	டின்ட் பீச்சஸ்.
1 அவு. சர்க்கரை.	மணத்துக்கானவைகள்.

அரிசியைக் கழுவி பாலோடு சேர்த்து இரட்டை பாயிலரில் வைத்து மெதுவு படும்வரை வேகவைத்து சர்க்கரையும் மணத்துக்கானவைகளையும் அதில் சேர்த்து நன்ருய் ஆறியபின் கொஞ்சமாய் அடித்த க்றீமை அதில் கலந்து ஷாம்பேன் க்ளாசுகளில் பாதிமட்டும் அதைப் போட்டு அதன்மேல் ஒரு துண்டு பீச் வைத்து ஒவ்வொரு க்ளாஸில் உள்ளதின்மேலும் கொஞ்சம் ஜாம் க்ளேஸ் ஊற்றி அடித்த க்றீம் வைத்து அலங்கரி.

44. ஸ்ட்ருபெறி ஷாற்ட் கேக்

1 முட்டை.	4 அவு. சர்க்கரை.
4 அவு. மாவு.	வெனிலா எஸன்ஸ்.
¾ ஜில் பால்.	1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
2 அவு. வெண்ணெய்.	1 ஜில் க்றீம்.

½ பவு. ஸ்ட்ருபெறீஸ்.

வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்றீமாக அடித்துக்கொள். முட்டையும் பாலும் சேர்த்து அடித்து வைத்துக்கொள். அந்த க்றீமில் கொஞ்சம் மாவு மெது வாய்ச் சேர்த்துக் கலந்து அதன்பின் முட்டைப்பால் கலவையில் கொஞ்சம் அதில் சேர்த்துக் கலந்து நன்ருய் அடித்து அப்படியே மாவும் முட்டைப்பாலும் மாறி மாறிப் போட்டுக் கலந்து நன்ருயடித்து வெண்ணெய் தடவிய 2 ஸாண்ட்விச் டின்களில் வைத்து பேக் பண்ணு. கேக் வெந்ததும் அதைத் திருப்பிப் போட்டு டின்களிலிருந்து எடுத்து ஆறவை. க்றீமை அடித்து இனிப்பாக்கிக்கொண்டு ஸ்ட்ருபெறியில் பாதியை மொதசையாக்கி கேக்கில் ஒரு பகுதியில் இனிப்பாக்கிய க்றீமையும் ஸ்ட்ருபெறி மொத்தையையும் தடிப்பாய்த் தடவி மற்ருெரு கேக்கை அதன்மேல் வைத்து மீதியுள்ள க்றீமை அதன் மேல்பாகத்தில் தடவி மீதியாயுள்ள ஸ்ட்ருபெறியைக்கொண்டு அலங்கரி.

45. சாக்கோலத் பர்ஃபே

¾ கோப்பை சர்க்கரை.	2 கோப்பை தடிப்பான க்றீம்.
⅓ கோப்பை தண்ணீர்.	1 தேக்கரண்டி வெனிலா.
3 முட்டை மஞ்சள்கரு.	½ கோப்பை துருவிய சாக்கொலத்.

1 சிட்டிக்கை உப்பு.

சர்க்கரையையும் தண்ணீரையும் சாக்கொலத்தையும் நீர்ப்பாயுள்ள சிரப்பு போல் காய்ச்சிக்கொண்டு, அதில் உப்பும் வெனிலாவும் சேர்த்து, அதை மெதுவாய் அடித்த முட்டை மஞ்சள் கருவுகளின்மீது மெதுவாய் ஊற்றிக்கொண்டே நன்ருய் அடித்துக்கொள். அதன்பின் அதை ஆறவைத்து மடித்து ஐஸ் பெட்டியில் வைத்து உறையப் பண்ணு.

Filling

¼ pint custard.
¼ pint cream.
¼ oz. chocolate.
1 oz. sugar.
3 tablespoons water.
¼ oz. gelatine.

Mix custard, cream and sugar. Dissolve chocolate and gelatine in hot water and add to cream. When nearly set, pour into mould.

46. MADIERA SNOW

6 egg yolks.
8 ozs. sugar.
2 sherry glasses Madiera.
2 tablespoons brandy.
Whipped cream.

Beat the yolks of the eggs and sugar together until light and creamy, pour on it 2 sherry glasses of boiling Madiera, whisk over the fire for a few minutes without boiling, remove and whisk until cold. Add the brandy, chill and serve in glasses with whipped cream and a cherry on each.

47. PUDDING FRANCAISE

1½ pints clear jelly.
¼ lb. grapes.
1 banana.
1 orange.
Few cherries.

Put liquid jelly about 3 inches deep in bottom of plain mould or cake tin. Decorate with stoned grapes, sliced banana and orange pulp. Allow to set and place in centre a 1 lb. jam jar with a weight in it. Fill up sides with jelly and fruit. When set remove jar by filling with hot water. Fill space with cream filling. When set dip the bottom of the mould in warm water, turn out and decorate with whipped cream.

பூரணம்

$\frac{1}{4}$ பைண்ட் கஸ்டர்ட்.	1 அவு. சர்க்கரை.
$\frac{1}{4}$ பைண்ட் க்றீம்.	3 மேசைக்கரண்டி தண்ணீர்.
$\frac{1}{4}$ அவு. சாக்கொலத்.	$\frac{1}{4}$ அவு. ஜெல்லட்டின்.

கஸ்டர்டும் சர்க்கரையும் க்றீமும் கலந்துகொள். சாக்கொலத்தையும் ஜலட்டினையும் வெந்நீரில் கரைத்துக்கொண்டு அதை மேலே சொன்ன கலவையில் சேர்த்துக்கொள். அது கிட்டத்தட்ட கெட்டிப்படுகையில் அதை அச்சில் ஊற்றிக்கொள்.

46. மெடீரா ஸ்னோ

6 முட்டை மஞ்சள் கருவு.	2 ஷெறி க்ளாஸ் மெடீரா.
8 அவு. சர்க்கரை.	2 மேசைக்கரண்டி ப்ருண்டி.

அடித்த க்றீம்.

முட்டை மஞ்சள் கருவுகளில் சர்க்கரை சேர்த்து லேசாகவும் க்றீமைப்போலவும் ஆகும்மட்டும் அடித்து, அதில் கொதிக்கிற மெடீராவில் 2 ஷெறி க்ளாஸ் ஊற்றிக் கொதிக்கவிடாமல் சில நிமிஷநேரம் தீயில் வைத்துக் கிளறிக்கொண்டேயிருந்து பிறகு தீயிலிருந்து எடுத்து ஆறும்மட்டும் லேசாய் அடித்து, அதில் பிருண்டியைச் சேர்த்து ஐஸ் பெட்டியில் வைத்து எடுத்து க்ளாஸ்களில் ஊற்றி ஒவ்வொரு க்ளாஸிலும் க்றீமும் செறியும் வைத்துப் பரிமாறு.

47. புடிங் ஃப்ராங் ஸேஸ்

$1\frac{1}{2}$ பைண்ட் க்ளியர் ஜெல்லி.	1 பழுறு.
$\frac{1}{4}$ பவு. க்ரேப்ஸ்.	1 ஆரஞ்சு.

கொஞ்சம் செறீஸ்.

ஒரு சாதாரண அச்சு அல்லது கேக் டின்னில் சுமார் 3 அங்குல ஆழத்திற்கு நீரர்யுள்ள ஜெல்லியை ஊற்றி, கொட்டையெடுத்த கிரேப்களாலும் பில்லை பில்லையா யரிந்த வாழைப்பழத்தாலும் ஆரஞ்சு சொளையாலும் அலங்கரித்து, கெட்டிப்பட வைத்து மத்தியில் ஒரு பவுண்டு ஜாம் ஜாரைக் கனத்தோடு அதில் வைத்து, பக்கங்களை ஜெல்லியாலும் பழத்தாலும் நிரப்பிக் கெட்டிப்பட்டபின் ஜாடியை வெந்நீரால் நிரப்பி ஜாடியை எடுத்துக் காலியாயுள்ள இடத்தில் க்றீம் பூரணத்தை வைத்து நிரப்பு. கெட்டிப்பட்டபின் அச்சின் அடிபாகத்தை வெந்நீரில் தோய்த்து எடுத்துத் திருப்பிப் போட்டு அச்சை எடுத்துவிட்டு அந்த புடிங்கை அடித்த க்றீமைக்கொண்டு அலங்கரி.

ICES

1. A PLAIN ICE CREAM MIXTURE

2½ cups milk.	½ cup sugar.
4 egg yolks.	1 cup cream.
Vanilla.	A pinch of salt.

Make a custard of the milk, eggs and sugar. Cool. Add cream and vanilla, and freeze.

2. COFFEE ICE CREAM

Add a cup of strong black coffee to plain ice cream mixture.

3. CHOCOLATE ICE CREAM

Melt 4 ozs. of chocolate in a little hot milk and add to plain ice cream mixture.

4. CARAMEL ICE CREAM

Put 1 cup of sugar in a pan and stir over a hot fire until melted to a light brown syrup, add ½ cup hot water and let simmer 10 minutes. Add to plain ice cream mixture.

5. STRAWBERRY OR RASPBERRY ICE CREAM

Heat a teacup of jam, add juice of one lime, strain and add to ice cream mixture.

Hot sauces to serve with plain ice cream

6. CHOCOLATE SAUCE

2 ozs. unsweetened chocolate.	1 tablespoon butter.
1 cup sugar.	½ teaspoon vanila.
⅓ cup boiling water.	A pinch of salt.

Melt chocolate, add butter, pour water on gradually. Bring to boiling point, add sugar and boil 5 minutes, add vanilla and salt and serve.

ஐஸெஸ்

1. ஒரு சாதாரண ஐஸ் க்றீம் கலவை

$2\frac{1}{2}$ கோப்பை பால்.	$\frac{1}{2}$ கோப்பை சர்க்கரை.
4 முட்டை மஞ்சள் கரு.	1 கோப்பை க்றீம்.
வெனிலா எஸன்ஸ்.	1 சிட்டிக்கை உப்பு.

பால், முட்டைகள், சர்க்கரை இவைகளைக்கொண்டு கஸ்டர்ட் செய்து கொள். (அதை அதிக சத்துள்ளதாகச் செய்யப் புட்டிப்பாலையும் அப்பாலோடு சேர்த்துக்கொள்ளலாம்.) ஆறவைத்து, க்றீமும் வெனிலாவும் சேர்த்துக்கொண்ட பின் உறையப்பண்ணு.

2. காஃபி ஐஸ் க்றீம்

சாதாரண ஐஸ் க்றீம் கலவையில் கறுப்பாயுள்ள ஸ்ற்றுங் காஃபி ஒரு கோப்பை சேர்த்து உறையப்பண்ணு.

3. சாக்கோலத் ஐஸ் க்றீம்

சூடான பால் கொஞ்சம் எடுத்துக்கொண்டு அதில் 4 அவுன்ஸ் சாக்கொலத்தைக் கரைத்து, சாதாரண ஐஸ் க்றீம் கலவையில் சேர்த்துக்கொண்டு உறையப் பண்ணு.

4. கரமல் ஐஸ் க்றீம்

ஒரு பானில் 1 கோப்பை சர்க்கரை போட்டுத் தீவிரமான தீயில் வைத்து, உருகிச் சிவந்த சிரப்பைப்போல் ஆகும்வரை, கிளறிக்கொண்டிரு. அந்தச் சிவந்த ஸிரப்பில் $\frac{1}{2}$ கோப்பை வெந்நீர் சேர்த்து 10 நிமிஷம் கொதிக்கவைத்து, அதைச் சாதாரண ஐஸ் க்றீமில் சேர்க்கவும்.

5. ஸ்ற்றுபறி அல்லது ராஸ்பறி ஐஸ் க்றீம்

ஒரு தேக்கோப்பை ஜாமை எடுத்துச் சூடாக்கிக்கொண்டு அதில் ஒரு எலுமிச்சம்பழ ரசத்தைச் சேர்த்து வடிகட்டி ஐஸ் க்றீம் கலவையோடு சேர்த்துக் கொள்.

ப்ளேய்ன் ஐஸ் க்றீமோடு பரிமாறுவதற்குச் சூடான ஸாஸ்கள்

6. சாக்கோலத் ஸாஸ்

2 அவு. சாக்கொலத் (சர்க்கரை சேர்க்காதது).	1 மேசைக்கரண்டி வெண்ணெய்.
	$\frac{1}{2}$ தேக்கரண்டி வெனிலா.
1 கோப்பை சர்க்கரை.	1 சிட்டிக்கை உப்பு.

$\frac{1}{3}$ கோப்பை கொதிக்கிற வெந்நீர்.

சாக்கொலத்தை உருக்கி வெண்ணெய் சேர்த்து கொஞ்சங் கொஞ்சமாய் தண்ணீர் சேர்த்துக் கொதிவரும் சமயத்தில் சர்க்கரை சேர்த்து 5 நிமிஷம் கொதிக்க வைத்து வெனிலாவும் உப்பும் சேர்த்துப் பரிமாறு.

7. CARAMEL SAUCE

1 cup golden syrup.
$1\frac{1}{4}$ cup brown sugar.
$\frac{1}{4}$ cup butter.
1 cup cream.

Put syrup, sugar and butter in a pan and bring to boiling point and boil for 5 minutes, then add cream and bring to boiling point again and remove from fire. This makes about 3 cups of sauce and may be used hot or cold on ice creams.

8. COFFEE SAUCE

$1\frac{1}{2}$ cups milk.
$\frac{1}{2}$ cup ground coffee.
$\frac{1}{3}$ cup sugar.
$\frac{3}{4}$ tablespoon cornflour.

Scald the milk with coffee, and let stand twenty minutes : strain. Mix sugar, salt and cornflour with a little cold milk, and add to the coffee. Boil 5 minutes and serve hot.

9. APRICOT ICE CREAM

(*Serves about 8*)

$\frac{1}{2}$ pint apricot puree.
$\frac{1}{2}$ pint custard.
$\frac{1}{2}$ pint cream.
6 ozs. sugar
lemon juice.
Cochineal.

Make a puree of stewed dried apricots. Add sugar, lemon, custard, cream and a little colouring. Freeze.

10. FRUIT SHERBET

(*Serves 6 or 8*)

1 orange.
1 plantain.
$1\frac{1}{2}$ limes.
2 eggs.
1 cup sugar.
1 cup water.
10 cherries.
Green or pink colouring.

Mash the plantain. Add fruit juices, cut up cherries, half the sugar and a little colouring. Beat the egg yolks and stir into the fruit mixture. Place in freezing compartment of ice box and freeze to a mush. Remove to chilled bowl and beat, add beaten egg whites mixed with the rest of the sugar. Put back in freezing tray and finish freezing.

7. கரமல் ஸாஸ்

2 மேசைக்கரண்டி ப்ரௌன் சுகர் 1 அவு. வெண்ணெய்.
2 அவு. க்றீம்.

ஒரு சாஸ்பானில் வெண்ணெயையும் சர்க்கரையையும் சேர்த்து உருக்கிக்கொண்டு அதில் க்றீமைச் சேர்த்து 2 நிமிஷம் கொதிக்கவைத்து நறுக்கிய வால்நட் துண்டுகளைச் சேர்த்துப் பரிமாறு.

8. காஃபி ஸாஸ்

$1\frac{1}{2}$ கோப்பை பால் $\frac{1}{3}$ கோப்பை சர்க்கரை.
$\frac{1}{2}$ கோப்பை காஃபிப் பொடி. $\frac{3}{4}$ மேசைக்கரண்டி காரன் ஃப்ளவர்.
1 சிட்டிக்கை உப்பு.

கொதிக்கிற பாலில் காஃபிப் பொடியைப் போட்டு 20 நிமிஷம் அப்படியே வைத்திருந்து பிறகு வடிகட்டிக்கொள். அதன்பின் சர்க்கரையையும், உப்பையும், கார்ன் ஃப்ளவரையும் ஆறின பால் கொஞ்சம்விட்டுக் கலந்து, வடிகட்டிக்கொண்ட காஃபியோடு சேர்த்து ஐந்து நிமிஷம் கொதிக்கவைத்து சூடாகவே பரிமாறு.

9. அப்ரிகாட் ஐஸ் க்றீம்

$\frac{1}{2}$ பைண்ட் அப்ரிகாட் ப்யூரி 6 அவு. சர்க்கரை.
$\frac{1}{2}$ பைண்ட் கஸ்டர்ட். எலுமிச்சம்பழ ரசம்.
$\frac{1}{2}$ பைண்ட் க்றீம். கொச்நீல்.

வெந்து காய்ந்த அப்ரிகாட்களைக்கொண்டு ஒரு ப்யூரி செய்து அதில் சர்க்கரையும் எலுமிச்சம்பழமும் கஸ்டர்டும் க்றீமும் கொஞ்சம் நிறந்தரும் சரக்கும் சேர்த்து ஐஸ் பெட்டியில் வைத்து உறையப்பண்ணு.

10. ப்ரூட் ஷர்பத்

1 ஆரஞ்சு. 1 கோப்பை சர்க்கரை.
1 வாழைப்பழம். 1 கோப்பை தண்ணீர்.
$1\frac{1}{2}$ எலுமிச்சம்பழம். 10 செறி பழங்கள்.
2 முட்டை. பச்சை அல்லது சிவப்பு நிறந்தரும் வஸ்து.

வாழைப்பழத்தை மொத்தையாக்கிக்கொண்டு அதில் பழரசங்களும் நறுக்கிய செறி பழங்களும் பாதி சர்க்கரையும் நிறந்தரும் வஸ்து கொஞ்சமும் சேர்த்துக் கொள். முட்டை மஞ்சள் கருவுகளை அடித்துக்கொண்டு பழக்கலவையில் கிளறிக் கொண்டே சேர்த்துக்கொள். பிறகு அதை ஐஸ் பெட்டியில் உறையும் பாகத்தில் வைத்து கூழைப்போல் உறையப்பண்ணிக்கொள். அதன்பின் அதைக் குளிர்ச்சியாயுள்ள போலில் எடுத்துப்போட்டு அடித்து, மீதியுள்ள சர்க்கரையைச் சேர்த்து அடித்த மஞ்சள் கருவுகளை அதில் சேர்த்துத் திரும்பவும் உறைத்தட்டில் வைத்துப் பூர்த்தியாய் உறையும்படி செய்துகொள்.

11. PINEAPPLE SHERBET

(Serves 6 or 8)

2 cups water.
1 cup sugar.
1 cup tinned pineapple juice.
2 egg whites.
2 tablespoons lime juice.

Boil sugar and water for 10 minutes, cool and add pineapple and lime juice, place in freezing tray and freeze. Remove to chilled bowl and beat. Fold in beaten whites and finish freezing.

12. DATE MOUSSE

(Serves 6 or 8)

1 cup chopped dates.
1 cup orange juice.
4 egg yolks.
½ teaspoon salt.
1 cup cream.

Cut up the dates very fine and add orange juice, then add egg yolks, beaten until very light, and the salt. Cook slowly over boiling water until the mixture thickens. Cool and fold in the cream which has been whipped until like thin custard, freeze, and serve.

13. BANANA MOUSSE

(Serves 4 or 6)

2 cups thick cream.
¼ cup icing sugar.
2 tablespoons lime juice.
2 egg whites, beaten.
1½ teaspoons vanilla.
¼ teaspoon salt.
2 mashed and sieved large plantains.

Whip the cream, add sugar, vanilla, lime juice and salt. Fold in plantains and stiffly beaten egg whites. Freeze and serve.

14. MACAROON ICE

Soak a macaroon in rum or brandy in a stemmed glass, add one tablespoon of fruit salad, and fill the glass with vanilla ice cream. Sprinkle with nuts.

11. பைனப்பில் ஷர்பத்

2 கோப்பை தண்ணீர். 1 கோப்பை டிண்ட் பைனப்பில் ஜூஸ்.
1 கோப்பை சர்க்கரை. 2 முட்டை வெள்ளைக்கரு.
2 மேசைக்கரண்டி எலுமிச்சம்பழ ரசம்.

சர்க்கரையையும் தண்ணீரையும் சேர்த்து 10 நிமிஷ நேரம் கொதிக்க வைத்துப் பிறகு ஆறவைத்து அதில் பைனப்பில் ஜூஸும் எலுமிச்சம்பழ ரசமும் சேர்த்து உறையச்செய்யும் ட்றேயில் வைத்து உறையப்பண்ணி குளிர்ச்சியாயுள்ள போலில் எடுத்துப்போட்டு அடித்து, அடித்த வெள்ளைக் கருவுகளில் மடித்துப் பூர்த்தியாய் உறையப்பண்ணிக்கொள்.

12. டேட் மூஸ்

1 கோப்பை நருக்கிய டேட்ஸ். 4 முட்டை மஞ்சள் கரு.
1 கோப்பை ஆரஞ்சு பழரசம். $\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு.
1 கோப்பை க்றீம்.

டேட் பழங்களைச் சிறு சிறு துண்டுகளாக நருக்கிக்கொண்டு அதில் ஆரஞ்சு பழ ரசத்தைச் சேர்த்து அதில் மஞ்சள் கருவுகளை இலேசாகும்வரை அடித்து அதில் சேர்த்துக்கொண்டு உப்பும் அதில் சேர்த்துக்கொள். கொதிக்கிற தண்ணீரின்மீது அக்கலவை தடிப்பாகும்வரை மெதுவாய் வேகவைத்துக்கொள். பிறகு ஆறவைத்து, மெல்லிய கஸ்டார்ட்போல் ஆகும்வரை அடித்த க்றீமில் மடித்து ஐஸ் பெட்டியில் வைத்து உறையப்பண்ணிக்கொள்.

13. பனானா மூஸ்

2 கோப்பை தடிப்பாயுள்ள க்றீம். $1\frac{1}{2}$ தேக்கரண்டி வெனிலா.
$\frac{1}{4}$ கோப்பை ஐஸிங் சுகர். $\frac{1}{4}$ தேக்கரண்டி உப்பு.
2 மேசைக்கரண்டி எலுமிச்சம்பழ ரசம். 2 பெரிய வாழைப்பழம் மொத்தையாக்கியது.
2 முட்டை வெள்ளைக்கரு அடித்தது.

க்றீமை அடித்துக்கொண்டு அதில் சர்க்கரையும் வெனிலாவும் எலுமிச்சம்பழ ரசமும் உப்பும் சேர்த்துக்கொள். வாழைப்பழ மொத்தையையும் கெட்டியாய் அடித்த வெள்ளைக் கருவையும் அதில் சேர்த்து மடித்து உறையப்பண்ணிப் பரிமாறு.

14 மெக்கரூன் ஐஸ்

பாதமுள்ள ஒரு க்ளாஸில் ஒரு மெக்கரூனை ரம் அல்லது ப்றூண்டியில் நனைத்து அதோடு ஒரு மேசைக்கரண்டி பழ சலடைச்சேர்த்து, வெனிலாவும் ஐஸ் க்றீமும் அந்த க்ளாஸ் நிறையப்போட்டு அதன்மேல் வாதுமை முதலிய பருப்புத் துணிக்கைகளைத் தூவு.

15. CHOCOLATE WALNUT ICE

Grate some chocolate with an equal quantity of chopped walnuts. Put a dessertspoon of strawberries or other fruit at the bottom of a glass, and fill the glass with layers of vanilla ice cream and chocolate and chopped walnuts. Serve at once.

16. MERINGUE ICE

Place a spoonful of any flavoured ice cream between two meringue cases, sprinkle with chopped nuts and serve.

17. RUM ICE

To a rich ice cream mixture, add two tablespoons of rum and one tablespoon of brandy.

18. MARRON ICE

Break marrons glacé in pieces, flavour with rum, cover and let stand for one hour. Put a dessertspoonful in each glass, cover with vanilla ice cream, garnish with whipped cream, sweetened, and flavoured with vanilla and chopped nuts.

19. GINGER ICE

Cut crystallized ginger in pieces, flavour with rum, cover and let stand for one hour. Put a dessertspoonful in each glass, with a little ginger syrup, cover with vanilla ice cream, garnish with whipped cream sweetened and flavoured with vanilla and chopped nuts.

20. GRAPE FRUIT SUNDAE

Remove the pulp from a grape fruit, allowing half a fruit to each person: sprinkle with sugar, and stand in a cold place until required. Put the ice cream in a glass first, surround with grape fruit, cover with whipped cream, sprinkle with nuts and serve immediately.

Any other fruit may be substituted for grape fruit.

15. சாக்கோலத் வால்நட் ஐஸ்

கொஞ்சம் சாக்கொலத்தையும் அதன் அளவு நறுக்கிய வால்நட்டையும் எடுத்துத் தூளாக்கிக்கொள். ஸ்ற்ருபெறி அல்லது வேறு ஏதாவது பழத்தில் ஒரு டெஸர்ட் கரண்டி அளவு எடுத்து ஒரு க்ளாஸில்போட்டு வெனிலா ஐஸ் க்றீமை ஒரு வரிசையாகவும் சாக்கொலத் வால்நட் தூளை ஒரு வரிசையாகவும் பல வரிசைகள் வைத்து க்ளாஸை நிரப்பி, உடனே எடுத்துப் பரிமாறு.

16. மெருங் ஐஸ்

இரண்டு மெருங் கேஸ்களுக்கிடையே எந்த மணமுள்ள ஐஸ் க்றீமிலாவது ஒரு கரண்டி எடுத்துப்போட்டு வாதுமை முதலிய பருப்பு வகைகளின் தூளைத் தூவிப் பரிமாறு.

17. ரம் ஐஸ்

சத்துள்ள ஐஸ் க்றீம் கலவையில் இரண்டு மேசைக்கரண்டி ரம்மும் ஒரு மேசைக்கரண்டி பிருண்டியும் சேர்த்துக்கொள்ளவும்.

18. மரேன் ஐஸ்

மரேன் கிளாசெயைத் துண்டுகளாக நறுக்கி அதில் மணத்துக்காகக் கொஞ்சம் ரம் ஊற்றி மூடி 1 மணி நேரம் விட்டுவை. பிறகு கிளாஸ் ஒன்றுக்கு அதில் 1 டெஸர்ட்கரண்டி வீதம் எடுத்துப்போட்டு, அதை வெனிலா ஐஸ் க்றீம் போட்டு மறைத்து, இனிப்புக்காகச் சர்க்கரை சேர்த்து அடித்த க்றீமில் மணத்துக்காக வெனிலாவும் வாதுமை முதலிய பருப்புத் தூள்களும் சேர்த்து அந்த க்றீமால் அலங்கரி.

19. ஜிஞ்சர் ஐஸ்

க்ரிஸ்டலைஸ்ட் ஜிஞ்சரை துண்டுகளாக அரிந்து அதில் ரம் சேர்த்து மூடி அப்படியே 1 மணி நேரம் விட்டுவைக்கவும். பிறகு க்ளாஸ் ஒன்றுக்கு 1 டெஸர்ட்கரண்டி விகிதம் அதை எடுத்துப்போட்டு அதில் கொஞ்சம் ஜிஞ்சர் ஸிரப் ஊற்றி அதன்மேல் வெனிலா ஐஸ் க்றீம் போட்டு மறைத்து, வெனிலாவினாலும் நறுக்கிய வாதுமை முதலிய பருப்புத் துணிக்கைகளாலும் இனிப்பும் மணமும் பெற்ற அடித்த க்றீமைக்கொண்டு அலங்கரித்து வைக்கவும்.

20. க்ரேப் ஃப்ரூட் ஸண்டே

பேருக்கு அரை பழமாகக் கணக்கு செய்து வேண்டிய பழங்களின் சதையை ஒரு டிஷில் போட்டு அதில் சர்க்கரை தூவி, அந்த டிஷை குளிர்ந்த இடத்தில் திரும்பவும் ,வேண்டும்வரை விட்டுவை. ஒரு க்ளாஸில் முதலில் ஐஸ் க்றீமைப் போடு; அதைச் சுற்றி க்ரேப் பழச்சதையை வைத்து அது மறையும்படி அடித்த க்றீமை அதன்மேல் ஊற்றி வாதுமை முதலிய பருப்புத் துணிக்கைகளைத் தூவி உடனே பரிமாறு.

க்ரேப் பழத்துக்குப் பதிலாக வேறெந்த பழத்தையும் உபயோகிக்கலாம்.

21. FROZEN FRUIT PUDDING

1 cup of crystallized mixed fruit cut in small pieces, soak 2 or 3 hours in brandy to prevent freezing. Fill a mould with alternate layers of fruit and ice cream. Pack in salt and ice and let stand 2 hours. A little rum may be added to the ice cream while freezing.

22. FRUIT PUNCH

(Serves about 8)

1 cup tea infusion.	½ cup orange juice.
½ cup sugar.	½ cup grape juice.
½ cup lime juice.	½ cup grated pineapple.

5 cups iced water.

To make the tea infusion pour a cup of boiling water over 2 teaspoons of tea, allow to stand a few minutes and strain, add sugar and cool. Add all the other ingredients and pour over ice cubes and serve.

23. ICED COFFEE

(Serves 4)

2 cups strong iced coffee.	2 cups milk.
4 tablespoons whipped cream.	1 teaspoon cinnamon.

Mix the cold coffee and milk. Pour over cubes of ice. Put whipped cream on top of each glass and sprinkle with cinnamon.

24. SPICED TEA

(Serves 4)

½ cup sugar.	2 cups hot water.
¼ teaspoon nutmeg.	2 tablespoon tea.
¼ teaspoon all spice.	¼ cup orange juice.
¼ teaspoon cinnamon.	¼ cup lime juice.

Mix sugar and spices in the hot water and boil one minute. Pour over the tea leaves and steep for 3 minutes. Strain, add fruit juices and cold water. Chill and pour over ice cubes before serving.

21. ஃப்ரோஸன் ஃப்ரூட் புடிங்

ஒரு க்ரிஸ்டலைஸ்ட் கலப்புப் பழங்களைக் கோப்பைநிறையச் சிறு துண்டுகளாக அரிந்து எடுத்துக்கொண்டு, அது இறுகிக்கொள்ளாதபடி பிருண்டியில் 2 அல்லது 3 மணிநேரம் ஊறவை. ஒரு மோல்டில் பழம் ஒரு வரிசையாகவும் ஐஸ் க்றீம் ஒரு வரிசையாகவும் மோல்ட் நிறையப் பல வரிசை யடுக்கி அந்த மோல்டைச் சுற்றி உப்பும் ஐஸும் போட்டு 2 மணிநேரம் அப்படியே விட்டு வைக்கவும். இறுகு கையில் ஐஸ் க்றீமில் கொஞ்சம் ரம் சேர்க்கலாம்.

22. ஃப்ரூட் பஞ்ச்

1 கோப்பை தே. கஷாயம். ½ கோப்பை ஆரஞ்ச் ரசம்.
½ கோப்பை சர்க்கரை. ½ கோப்பை க்ரேப் ரசம்.
½ கோப்பை எலுமிச்சம்பழ ரசம். ½ கோப்பை துருவிய பைனாப்பில்.
5 கோப்பை ஐஸ்ட் தண்ணீர்.

தே கஷாயம் செய்ய 2 தேக்கரண்டி தேயிலையின்மீது 1 கோப்பை கொதிக்கிற தண்ணீர் விட்டுச் சில நிமிஷநேரம் விட்டுவைத்துப் பிறகு வடிகட்டிச் சர்க்கரை சேர்த்து ஆறவைக்கவேண்டும். அதன்பின் மேலே சொன்ன ரசங்களை யெல்லாம் ஐஸ் க்யூப்களின்மீது ஊற்றிப் பரிமாறவும்.

23. ஐஸ்ட் காஃபி

2 கோப்பை ஸ்ட்ருங் ஐஸ்ட் காஃபி. 2 கோப்பை பால்.
4 மேசைக்கரண்டி அடித்த க்றீம். 1 தேக்கரண்டி லவங்கப்பட்டை.

குளிர்ந்த காஃபியையும் பாலையும் சேர்த்து அதை ஐஸ் க்யூப்களின்மீது ஊற்றி, ஒவ்வொரு க்ளாஸின்மீதும் அடித்த க்றீமை வைத்து லவங்கப்பட்டைத் தூளைத் தெளிக்கவும்.

24. ஸ்பைஸ்ட் டீ

½ கோப்பை சர்க்கரை. 2 கோப்பை வெந்நீர்.
¼ தேக்கரண்டி ஜாதிக்காய். 2 மேசைக்கரண்டி டீ.
¼ தேக்கரண்டி வாசனை சரக்குகள். ¼ கோப்பை ஆரஞ்ச் ரசம்.
¼ தேக்கரண்டி லவங்கப்பட்டைத் தூள். ¼ கோப்பை எலுமிச்சம்பழ ரசம்.

சர்க்கரையும் வாசனை சரக்குகளும் வெந்நீரில் சேர்த்து ஒரு நிமிஷநேரம் கொதிக்கவைத்துத் தேயிலையின்மீது அதை ஊற்றி, 3 நிமிஷநேரம் அப்படியே விட்டுவைத்து, வடிகட்டிப் பழரசங்களும் தண்ணீரும் சேர்த்து ஐஸ்பெட்டியில் வைத்துப் பரிமாறுமுன் ஐஸ் க்யூப்களின்மீது ஊற்றவும்.

CAKES

1. WALNUT CAKE

1 cup brown sugar.
⅓ cup butter.
2 eggs.
1 cup chopped walnuts.
1⅓ cups flour.
2 teaspoons baking powder.
½ cup milk.
1 teaspoon vanilla.
¼ teaspoon salt.

Cream the butter and sugar, add beaten egg yolks and milk, add the sifted flour and baking powder and salt, beat well and add vanilla salt and walnuts, lastly fold in the stiffly beaten whites of eggs, bake in shallow cake tin for 40 minutes and cover with icing.

2. FEATHER CAKE

1½ cups sugar.
½ cup butter.
½ cup milk.
4 egg whites.
3 cups flour.
3 teaspoons baking powder.
¼ teaspoon salt.
½ cup water.
1 teaspoon vanilla.
¼ teaspoon bitter almond essence.

Cream the butter and sugar, add the sifted flour, baking powder and salt alternately with the milk and water, beat until smooth and light. Add flavouring and fold in the stiffly beaten egg whites. Bake in layer tins in a moderate oven for 25 minutes. When cold, put date and nut filling between the layers and cover with icing.

Date and Nut Filling

Boil ¼ lb. of dates with a little sugar and water and lime juice. Mash to a pulp, remove stones. Add ½ a cup of chopped nuts and spread between cake layers.

கேக்ஸ்

1. வால்நட் கேக்

1 கோப்பை ப்ரௌன் சுகர்.
$\frac{1}{3}$ கோப்பை வெண்ணெய்.
2 முட்டை.
1 கோப்பை நறுக்கிய வால்நட்ஸ்.
$1\frac{1}{3}$ கோப்பை மாவு.
2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
$\frac{1}{2}$ கோப்பை பால்.
1 தேக்கரண்டி வெனிலா.
$\frac{1}{4}$ தேக்கரண்டி உப்பு.

வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்ரீம் ஆக்கிக்கொண்டு, அடித்த மஞ்சள் கருவுகளையும் பாலையும் அதில் சேர்த்து, மாவு, பேக்கிங் பவுடர், உப்பு இவைகளைச் சல்லடையில் சலித்து அதில் சேர்த்துக் கலக்கிக்கொண்டு, நன்றாய் அடித்து, வெனிலாவையும், உப்பையும், வால்நட்களையும் சேர்த்துக்கொண்டு, கெட்டியாய் அடித்த வெள்ளைக்கருவால் நன்றாய் மடித்து, ஆழமில்லாத கேக் டின்னில் வைத்து 40 நிமிஷநேரம் பேக் பண்ணி ஐஸிஙால் தடவிவை.

2. ஃபேதர் கேக்

$1\frac{1}{2}$ கோப்பை சர்க்கரை.
$\frac{1}{2}$ கோப்பை வெண்ணெய்.
$\frac{1}{2}$ கோப்பை பால்.
4 முட்டை வெள்ளைக்கரு.
3 கோப்பை மாவு.
3 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
$\frac{1}{4}$ தேக்கரண்டி உப்பு.
$\frac{1}{2}$ கோப்பை தண்ணீர்.
1 தேக்கரண்டி வெனிலா.
$\frac{1}{4}$ தேக்கரண்டி கசப்பு ஆமண்ட் எஸன்ஸ்.

வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்ரீம் ஆக்கிக்கொண்டு, அதில் சலித்த மாவையும், பேக்கிங் பவுடரையும், உப்பையும் சேர்த்து ஒரு தடவையாகவும், பாலும் தண்ணீரும் சேர்த்து ஒரு தடவையாகவும் மாற்றி மாற்றிக் கலந்து கட்டியில்லாமல் லேசாகும்வரை அடித்து, வாசனை சரக்குகள் சேர்த்து, கெட்டியாய் அடித்த வெள்ளைக்கருவுகளில் திரும்பவும் திரும்பவும் மடித்து, இரு பகுதியாக்கிக்கொண்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு ஆழமில்லாத டின்னில் வைத்து, நடுத்தரத் தீயுள்ள அடுப்பில் 25 நிமிஷநேரம் பேக் பண்ணு. ஆறினபின் டேட் பழமும் வாதுமை முதலிய பருப்புகளும் கலந்த பூரணத்தை இரண்டு பகுதிக்கும் இடையே வைத்து ஐஸிங் தடவு.

டேட் அண்ட் நட் ஃபில்லிங்

$\frac{1}{4}$ பவுண்ட் டேட் பழங்களைக் கொஞ்சம் சர்க்கரையோடு தண்ணீரில் போட்டு, கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசம் பிழிந்து கொதிக்கவை. கொட்டை எடுத்துவிட்டு மசித்துக்கொண்டு அரை கோப்பை துருவிய பருப்புகளைச் சேர்த்து, கேக்கின் வரிசைகளுக்கிடையே தடவவும்.

Boiled Icing

2 cups sugar.
$\frac{3}{4}$ cup of water.
2 eggs whites.
Vanilla.
Walnuts.

Boil the sugar and water until it forms a soft ball in water when it has gone off the boil, pour it very slowly on the stiffly beaten whites of eggs and beat well, add vanilla and when thickening, spread over cake and sprinkle with chopped walnuts.

3. GINGER BREAD (I)

1 cup brown sugar.
1 cup treacle.
1 cup sour milk.
3 teaspoons ginger.
1 teaspoon allspice.
1 tablespoon butter.
2 eggs.
1 teaspoon soda.
$2\frac{1}{2}$ cups flour.
A pinch of salt.

Put butter, sugar and treacle in a saucepan and bring to the boil. Remove from fire, add soda, beat vigorously. Then add milk, beaten eggs, and stir in sifted flour and spices. Pour in buttered pan and bake for 30 minutes in a moderate oven.

4. GINGER BREAD (II)

$\frac{1}{2}$ lb. flour.
Pinch of salt.
$\frac{1}{2}$ teaspoon soda bicarb.
1 dessertspoon ginger.
$\frac{1}{4}$ lb. black treacle.
$\frac{1}{4}$ lb. golden syrup.
$\frac{1}{4}$ lb. butter.
$\frac{1}{2}$ teaspoon mixed spice.
$\frac{1}{2}$ teaspoon ground cinnamon.
2 ozs. sugar.
1 egg.
2 tablespoons tepid milk.

Rub the butter into the flour, add all the dry ingredients and then syrup and treacle. Mix well until quite smooth, add egg and lastly the bicarbonate of soda dissolved in the tepid milk. Put in a well greased flat tin and bake in a moderate oven for about $\frac{1}{2}$ hour.

பாயில்ட் ஐசிங்

2 கோப்பை சர்க்கரை.	2 முட்டை வெள்ளைக்கரு.
$\frac{3}{4}$ கோப்பை தண்ணீர்.	வெனிலா, வால்நட்ஸ்.

சர்க்கரையையும் தண்ணீரையும், தண்ணீரில் சொட்டினால் மெதுவான உருண்டையாகும் பதத்துக்குக் கொதிக்கவைத்து, எடுத்து கெட்டியாய் அடித்த வெள்ளைக்கருவில் அதை அதிக மெதுவாய் ஊற்றி, நன்றாய் அடித்து, வெனிலாவைச் சேர்த்துக் கெட்டிப்படும்போது கேக்கின்மேலும் பக்கங்களிலும் தடவி அதன்மேலே அரிந்த வால்நட்களைத் தூவு.

3. ஜின்ஜர் ப்ரெட் (நெ. I)

1 கோப்பை ப்ரௌன் சுகர்.	1 மேசைக்கரண்டி வெண்ணெய்.
1 கோப்பை ற்றீக்கில்.	2 முட்டை.
1 கோப்பை புளித்த பால்.	1 தேக்கரண்டி சோடா உப்பு.
3 தேக்கரண்டி ஜின்ஜர்.	$2\frac{1}{2}$ கோப்பை மாவு.
1 தேக்கரண்டி ஆல்ஸ்பைஸ்.	1 சிட்டிக்கை உப்பு.

வெண்ணெய், சர்க்கரை, ற்றீக்கில் இம்மூன்றையும் ஒரு ஸாஸ்பானில் போட்டு, கொதிக்கவைத்துக் கொதி வருகையில், அடுப்பிலிருந்து எடுத்து, சோடா உப்பு சேர்த்து, வேகமாய் அடித்து, பாலும் அடித்த முட்டைகளும் சேர்த்து, சலித்தெடுத்த மாவில் கிளறிக்கொண்டே ஊற்றிக் கலந்து, ஆல் ஸ்பைஸும் ஜின்ஜரும் சேர்த்து, வெண்ணெய் தடவிய பானில் போட்டு, நடுத்தரத் தீயுள்ள அடுப்பில் 30 நிமிஷ நேரம் பேக் பண்ணு.

4. ஜின்ஜர் ப்ரெட் (நெ. II)

$\frac{1}{2}$ பவு. மாவு.	$\frac{1}{4}$ பவு. வெண்ணெய்.
1 சிட்டிக்கை உப்பு.	$\frac{1}{2}$ தேக்கரண்டி கலந்த ஸ்பைஸ்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி சோடா உப்பு.	$\frac{1}{2}$ தேக்கரண்டி லவங்கப்பட்டைத் தூள்.
1 டெஸர்ட்கரண்டி ஜின்ஜர்.	2 அவு. சர்க்கரை.
$\frac{1}{4}$ பவு. ப்ளாக் ற்றீக்கில்.	1 முட்டை.
$\frac{1}{4}$ பவு. கோல்டன் ஸிரப்.	2 மேசைக்கரண்டி இளஞ்சூடான பால்.

வெண்ணெயை மாவில் நன்றாய்க் கலந்து அதில் உலர்ந்த சரக்குகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அதன்பின் ஸிரப்பையும் ற்றீக்கிலையும் சேர்த்து, கட்டியில்லாமல் எல்லாம் நன்றாய்க் கரையும்படி கலக்கி, முட்டையைச் சேர்த்து, கடைசியில் இளஞ்சூடான பாலில் சோடா உப்பைக் கரைத்துச் சேர்த்து, நன்றாய் வெண்ணெய் தடவின தட்டையான டின்னில் வைத்து நடுத்தரத்தீயுள்ள அடுப்பில் சுமார் $\frac{1}{2}$ மணி நேரம் பேக் பண்ணு.

5. CHERRY CAKE

6 ozs. butter.
4 ozs. flour.
2 ozs. rice flour.
6 ozs. castor sugar.
¼ lb. glacé cherries.
1 teaspoon baking powder.
3 eggs.

Cream the butter and sugar. Separate whites from yolks of eggs. Mix flour and baking powder. Add the egg yolks and flour to the butter and sugar and beat well. Cut the cherries into halves, roll in flour and add these; lastly beat the whites to a stiff froth and fold lightly into mixture. Bake in a moderate oven for 1 hour.

The above proportion of rice flour in a cake helps to keep it moist, and may be used in any recipe.

6. CARAMEL CAKE

1 cup sugar.
½ cup butter.
2 eggs.
Vanilla.
1½ cup flour.
2 teaspoons baking powder.
½ cup caramel syrup.
Pinch of salt.

Sift the flour and baking powder together. Cream the butter and sugar and add the well beaten eggs, half the quantity of flour, then the caramel syrup, vanilla and salt, and lastly the rest of the flour. Beat well and bake for about 40 minutes in a moderate oven. Split almonds may be sprinkled on the top of the cake before baking, or it may be covered with Caramel Icing when cold.

Caramel Syrup

Melt half a cup of sugar in a pan on the fire, stir until brown, add a little water.

Caramel Icing

1 cup brown sugar.
¼ cup water.
1 large egg white.
¼ cup chopped walnuts.

Boil the sugar and water until it forms a firm ball when dropped in cold water, and pour very slowly on the stiffly beaten egg white, beating vigorously. Spread on cake when thick and sprinkle with walnuts.

5. செறி கேக்

6 அவு. வெண்ணெய்.	6 அவு. கஸ்டர் சர்க்கரை.
4 அவு. மாவு.	$\frac{1}{4}$ பவு. க்ளாவஸி செறீஸ்.
2 அவு. அரிசி மாவு.	1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.

3 முட்டை.

வெண்ணெயும் சர்க்கரையும் க்றீம் ஆக்கிக்கொள். முட்டைகளின் மஞ்சள் கருவையும் வெள்ளைக் கருவையும தனித்தனியே எடுத்துக்கொள். மாவும் பேக்கிங் பவுடரும் கலந்துகொள். வெண்ணெயும் சர்க்கரையும் கலந்துள்ள க்றீமில் மஞ்சள்கருவையும் மாவையும் மாற்றிமாற்றிப் போட்டு நன்ருய் அடித்துக்கொள். செறி பழங்களைப் பாதிபாதியாய் அரிந்து, மாவில் புரட்டி, அதில் இவைகளைச் சேர்த்துக்கொள். கடைசியாய் வெள்ளைக்கருவுகளைக் கெட்டியான நுரை கிளம்பும் படி அடித்து, மெதுவாய் கலவையில் மடித்துக்கொண்டு நடுத்தரத்தீயில் 1 மணி நேரம் பேக் பண்ணு.

மேலே கண்ட அரிசிமாவின் விகிதாசாரமானது கேக் கொஞ்சம் கசிவுள்ளதாகவே இருக்க உதவும். அதை எந்த முறைக்கும் உபயோகிக்கலாம்.

6. கரமல் கேக்

1 கோப்பை சர்க்கரை.	$1\frac{1}{2}$ கோப்பை மாவு.
$\frac{1}{2}$ கோப்பை வெண்ணெய்.	2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
2 முட்டை.	$\frac{1}{2}$ கோப்பை கரமல் ஸிரப்.
வெனிலா.	1 சிட்டிக்கை உப்பு.

மாவையும் பேக்கிங் பவுடரையும் சல்லடையில் சலித்து எடுத்துக்கொண்டு, வெண்ணெயையும் சர்க்கரையையும் க்றீம் ஆக்கிக்கொண்டு, நன்ருய் அடித்த முட்டைகளைச் சேர்த்து, அதில் பாதி மாவு போட்டு, கரமல் ஸிரப்பும், வெனிலாவும் உப்பும் போட்டு, அதன்பின் மற்றப் பாதி மாவையும்போட்டு நன்ருய் அடித்து, நடுத்தரத்தீயில் சுமார் 40 நிமிஷம் பேக் பண்ணு. உடைத்த வாதுமைப்பருப்பை கேக்கை பேக் பண்ணும் முன், கேக்கின்மீது தூவிக்கொள்ளலாம், அல்லது கேக் ஆறினபின் அதன்மீது கரமல் ஐஸிங் போட்டு அதை மறைக்கலாம்.

கரமல் ஸிரப்

$\frac{1}{2}$ கோப்பை சர்க்கரையை ஒரு பானில் போட்டு, அடுப்பில் வைத்து, சிவக்கும் வரை கிளறி, அதன்பின் கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக்கொள்.

கரமல் ஐஸிங்

1 கோப்பை ப்ரௌன் சுகர்.	1 பெரிய முட்டை வெள்ளைக்கரு.
$\frac{1}{4}$ கோப்பை தண்ணீர்.	$\frac{1}{4}$ கோப்பை வால்நட் தூள்.

சர்க்கரையும் தண்ணீரும் சேர்த்து, தண்ணீரில் சொட்டினுல் கெட்டி உருண்டையாகும் பதத்திற்குக் கொதிக்க வைத்து, அதைக் கெட்டியாய் அடித்த முட்டை வெள்ளைக் கருவில் நிதானமாய் ஊற்றி, வேகமாய் அடித்துக் கெட்டிப் படும்போது, கேக்கின்மீது தடவி, வால்நட் தூளை அதன்மேல் தூவு.

7. CHOCOLATE CAKE

- 1½ cups sugar
- ½ cup butter.
- ½ cup milk.
- 2 ozs. cocoa or chocolate.
- 4 eggs.
- 1¾ cups flour.
- 2 teaspoons baking powder.
- Vanilla.

Dissolve cocoa in 6 tablespoons of boiling water and let cool. Mix butter and sugar to a cream, add beaten egg yolks, milk, cocoa, and flour in which baking powder has been mixed, vanilla and a pinch of salt. Beat well and lastly fold in lightly the stiffly beaten egg whites. Bake in two layer tins. When cold, put cream filling between layers and cover with icing.

8. SULTANA GINGER CAKE

- 3 ozs. butter.
- 2 tablespoons sugar.
- ½ cup treacle.
- 1½ teaspoons bicarbonate soda.
- 2 eggs (small).
- 2 cups flour.
- 2 teaspoons ginger.
- ½ teaspoon salt.

Cream the butter and sugar, add the beaten eggs. Add hot water to the treacle and make it up to ⅔ of a cup. Mix in the sifted flour, ginger, sultanas and salt and soda diluted in a little water. Mix well and add ⅔ cup of boiling water. Bake in a flat tin.

9. RAISIN CAKE

- 1 cup raisins.
- 2 cups water.
- 1 cup sugar.
- 1 cup butter.
- 2 eggs (small).
- 2 cups flour.
- 1 teaspoon soda.
- 1 teaspoon cinnamon.
- 1 teaspoon cloves.
- ½ teaspoon salt.

Boil the water and raisins until reduced to half. Cream the butter and sugar, add beaten eggs, sifted flour, spices and raisins. Moisten with the raisin water. Mix well and bake in flat tin for half an hour.

7. சாக்கோலத் கேக்

$1\frac{1}{2}$ கோப்பை சர்க்கரை.	4 முட்டை.
$\frac{1}{2}$ கோப்பை வெண்ணெய்.	$1\frac{3}{4}$ கோப்பை மாவு.
$\frac{1}{2}$ கோப்பை பால்.	2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
2 அவு. கோக்கோ அல்லது சாக்கொலத்.	வெனிலா.

6 மேசைக்கரண்டி கொதிக்கிற வெந்நீரில் கோக்கோவைக் கரைத்து ஆறவை. வெண்ணெயையும் சர்க்கரையையும் கலந்து க்றீம் ஆக்கி, அதில் அடித்த முட்டை மஞ்சள் கருவுகளையும், பாலையும் கோக்கோவையும், பேக்கிங் பவுடர் கலந்த மாவையும், வெனிலாவையும், சிட்டிக்கை உப்பையும் சேர்த்துக்கொண்டு நன்றாய் அடித்து, அதில் கடைசியாய் வெள்ளைக்கருவுகளை நன்றாய் அடித்துப்போட்டு, மெதுவாய் மடித்தடித்து ஆழமில்லாத இரண்டு டின்களில் பேக் பண்ணு. ஆறிய பின் அடுக்குகளுக்கிடையே க்றீம் பூரணம் வைத்து ஐஸிஙால் மறை.

8. சல்தானு ஜிஞ்சர் கேக்

3 அவு. வெண்ணெய்.	2 அல்லது 3 அவு. சல்தானுஸ்.
2 மேசைக்கரண்டி சர்க்கரை.	2 (சிறிய) முட்டை.
$\frac{1}{2}$ கோப்பை ட்றீக்கில்.	2 கோப்பை மாவு.
$1\frac{1}{2}$ தேக்கரண்டி சோடாமாவு.	2 தேக்கரண்டி ஜிஞ்சர்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு.	

வெண்ணெயும் சர்க்கரையும் க்றீமாக்கிக்கொண்டு அதில் அடித்த முட்டைகளையும் ஏற்கனவே வெந்நீர் கலந்த ட்றீக்கிலையும் சேர்த்து, கோப்பையில் $\frac{2}{3}$ பாகம் நிறையும்படி செய்துகொண்டு சலித்த மாவையும் ஜிஞ்சரையும் சல்தானுவையும் உப்பையும் தண்ணீரில் கரைத்த சோடாமாவையும் கலந்துகொள். அப்படி நன்றாய்க் கலந்தபின் $\frac{2}{3}$ கோப்பையளவு கொதிக்கிற வெந்நீரை அதில் சேர்த்து ஒரு தட்டையான தகரத்தில் பேக் பண்ணு.

9. ரேஸின் கேக்

1 கோப்பை ரேஸின்ஸ்.	2 கோப்பை மாவு.
2 கோப்பை தண்ணீர்.	1 தேக்கரண்டி சோடாமாவு.
1 கோப்பை சர்க்கரை.	1 தேக்கரண்டி லவங்கப்பட்டை.
1 கோப்பை வெண்ணெய்.	1 தேக்கரண்டி லவங்கம்.
2 முட்டை (சிறியது).	$\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு.

ரேஸின் பழத்தைத் தண்ணீரில் போட்டு தண்ணீர் பாதியாகும்படி கொதிக்க வைத்துக்கொள். வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்றீமாக்கிக்கொண்டு அடித்த முட்டைகளையும், சலித்த மாவையும், வாசனை திரவியங்களையும், ரேஸினையும் அதில் சேர்த்துக்கொள். அக்கலவையில் ரேஸின் கஷாயத்தை ஊற்றி நன்றாய்க் கலந்து தட்டையான டின்னில் $\frac{1}{2}$ மணி நேரம் பேக் பண்ணு.

10. CHOCOLATE ROLL CAKE

2 eggs.
4 ozs. sugar.
1 oz. melted butter.
$2\frac{1}{2}$ ozs. flour.
$1\frac{1}{2}$ ozs. cocoa.
1 teaspoon baking powder.
Pinch of salt.

Beat the eggs with the sugar to a stiff froth with an egg beater or whisk. Mix the flour, cocoa, baking powder and salt, and add to the egg and sugar. Paper and grease well a flat tin. Pour in the mixture and bake in a hot oven for eight minutes. Turn out on to a cloth sprinkled with icing sugar. Trim edges, and roll, using the cloth to hold the roll in position.

When cold carefully unroll and spread with butter and sugar cream filling and reroll.

11. DUNDEE FRUIT CAKE

6 ozs. butter.
10 ozs. flour.
6 ozs. cherries.
3 ozs. mixed peel.
1 dessertspoon treacle.
6 ozs. moist brown sugar.
4 eggs.
8 ozs. currants and sultanas.
$\frac{1}{2}$ teaspoon mixed spice.
1 teaspoon baking powder.
Lemon juice.

Prepare fruit, sieve and mix flour and spice. Cream butter and sugar and add egg and flour alternately, then treacle and prepared fruit. Add the baking powder last. Place in prepared greased tin and bake in a moderate oven for 2 hours.

12. ORANGE CAKE

$1\frac{1}{2}$ cups flour.
1 cup castor sugar.
2 eggs (large).
$\frac{1}{2}$ cup butter.
2 teaspoons baking powder.
1 orange.

Cream butter and sugar, add the beaten eggs and sifted flour and baking powder and $\frac{1}{4}$ cup juice and grated rind of orange. Bake in layer tins for about 20 minutes in a moderate oven.

Filling. 4 ozs. icing sugar mixed with 2 ozs. butter and a little orange juice.

10. சாக்கோலத் ரோல் கேக்

2 முட்டை.	$2\frac{1}{2}$ அவு. மாவு.
4 அவு. சர்க்கரை.	$1\frac{1}{2}$ அவு. கோக்கோ.
1 அவு. உருக்கிய வெண்ணெய்.	1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.

1 சிட்டிகை உப்பு.

முட்டைகளையும் சர்க்கரையையும் சேர்த்துக் கெட்டியாக அடித்துக் கொள். மாவு, கோக்கோ, பேக்கிங் பவுடர், உப்பு இவைகளைக் கலந்து அதோடு சேர்த்துக்கொள். ஒரு தட்டையான டின்னில் காகிதம் வைத்து அதில் வெண்ணெய் தடவி, அதில் அக்கலவையைப் போட்டுத் தீவிரத்தீயுள்ள அடுப்பில் 8 நிமிஷம் பேக் பண்ணி, ஐஸிங் சர்க்கரை தூவியுள்ள ஒரு துணியில் திருப்பிப் போட்டு, ஓரங்களைச் சீராய் அறுத்து, சுருளைச் சரியானபடி பிடித்துக்கொள்ள அத்துணியை உபயோகித்தே சுருட்டு. ஆறினபின் ஜாக்கிரதையாய்ச் சுருளைப் பிரித்து, அதில் வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து செய்த க்றீமைத் தடவிப் பூரணத்தையும் வைத்துத் திரும்பவும் சுருட்டிவிடு.

11. டண்டீ ஃப்ரூட் கேக்

5 அவு. வெண்ணெய்.	6 அவு. மாயிஸ்ட் ப்ரௌன் சுகர்.
10 அவு. மாவு.	4 முட்டை.
6 அவு. செறிப்பழம்.	8 அவு. கரண்ட்ஸும் சல்தானாஸும்.
3 அவு. மிக்ஸ்ட் பீல்.	$\frac{1}{2}$ தேக்கரண்டி மிக்ஸ்ட் ஸ்பைஸ்.
1 டெஸற்ட் கரண்டி ற்றீக்கில்.	1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.

எலுமிச்சம்பழ ரசம்.

செறி, கரண்ட், பீல் இவைகளை ஆயத்தம்செய்துகொள். மாவையும் மிக்ஸ்ட் ஸ்பைஸையும் சலித்துக் கலந்துக்கொள். வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்றீம் ஆக்கி, அதில் முட்டையும் மாவும் மாற்றி மாற்றிச் சேர்த்து, அதன்பின் ற்றீக்கிலும் ஆயத்தம்செய்த பழங்களும் அதில் சேர்த்துக்கொள். கடைசியாய் பேக்கிங் பவுடரையும் சேர்த்து, வெண்ணெய் தடவிய டின்னில் வைத்து நடுத்தரத் தீயில் 2 மணிநேரம் பேக் பண்ணு.

12. ஆரஞ்ச் கேக்

$1\frac{1}{2}$ கோப்பை மாவு.	$\frac{1}{2}$ கோப்பை வெண்ணெய்.
1 கோப்பை கஸ்டர் சர்க்கரை.	2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
2 முட்டை (பெரியது).	1 ஆரஞ்ச்.

வெண்ணெயும் சர்க்கரையும் க்றீம் ஆக்கி, அதில் அடித்த முட்டைகளையும், சலித்தெடுத்த மாவையும், பேக்கிங் பவுடரையும், $\frac{1}{4}$ கோப்பை ஆரஞ்ச் பழ ரசமும், துருவிய தோலும் சேர்த்து, ஆழமற்ற இரண்டு டின்களில் வைத்து நடுத்தரத் தீயுள்ள அடுப்பில் சுமார் 20 நிமிஷநேரம் பேக் பண்ணவும்.

ஃபில்லிங்:—

4 அவு. ஐஸிங் சர்க்கரையும், 2 அவு. வெண்ணெயும், ஆரஞ்ச் பழ ரசம் கொஞ்சமும் சேர்த்துக் கலந்துகொள்.

13. GENOA CAKE

½ lb. castor sugar.
½ lb. fresh butter.
3 ozs. mixed candied peel.
2 ozs. almonds.
¾ lb. flour.
½ lb. cleaned sultanas.
5 eggs.
Grated rind of 1 lemon.

Blanch and split the almonds into 3 or 4 pieces and finely shred the candied peel and lay them aside. Cream the butter and add sugar. Separate yolks from whites of eggs, add the yolks to the butter and sugar, and beat well for 10 minutes, then add the flour, lemon rind, sultanas and peel, and lastly fold in the stiffly beaten whites of eggs. Turn into a flat tin lined with buttered paper. Scatter split almonds over the top and bake in a moderate oven for 1½ hours.

14. SPONGE CAKE

4 eggs.
Their weight in flour and sugar.
1 oz. butter.
1 teaspoon baking powder.
Vanilla.
Pinch of salt.

Sift the flour, baking powder and salt; whisk the eggs with the sugar until light and frothy for about 15 minutes. Add the vanilla and lightly mix in the flour and add the melted butter. Spread evenly on greased layer tins on which a little sugar and flour has been sifted and bake in a moderate oven for about 10 minutes. When cold, put layers together with lemon cheese, whipped cream or jam. Sift icing sugar over the top.

15. LEMON CHEESE

(Half this quantity for one cake)

4 ozs. butter.
8 ozs. sugar.
3 lemons.
4 yolks of eggs.

Mix the butter and sugar together, add the egg yolks, lemon juice and grated rind. Cook in a double boiler until thick. In place of a double boiler, a bowl may be stood in a saucepan of water.

13. ஜெனேவா கேக்

$\frac{1}{2}$ பவு. கஸ்டர் சர்க்கரை.
$\frac{1}{2}$ பவு. உப்பில்லாத வெண்ணெய்.
3 அவு. மிக்ஸ்ட் கண்டீட் பீல்.
2 அவு. வாதுமைப் பருப்பு.
$\frac{3}{4}$ பவு. மாவு.
$\frac{1}{2}$ பவு. சுல்தானுஸ்.
5 முட்டை.
1 எலுமிச்சம்பழத் தோல் துருவியது.

வாதுமைப் பருப்பை வெந்நீரில் போட்டுத் தோலுரித்து 3 அல்லது 4 துண்டுகளாக அறிந்து, கண்டீட் பீலை மெல்லிய சீவல்களாக்கிக்கொண்டு, தனியாய் வைத்துக்கொள். வெண்ணெயை க்றீம் ஆக்கிச் சர்க்கரை சேர்த்துக்கொள். முட்டைகளை உடைத்து மஞ்சள் கருவையும் வெள்ளைக் கருவையும் தனித்தனியாக்கிக்கொள். மஞ்சள் கருவை வெண்ணெயும் சர்க்கரையும் கலந்துள்ளதில் போட்டு 10 நிமிஷம் நன்றாய் அடித்துக்கொள். அதில் மாவையும், எலுமிச்சம்பழத் தோலையும், சுல்தானுவையும், பீலையும் சேர்த்து, கெட்டியாய் அடித்த வெள்ளைக்கருவை அதில் போட்டுத் திருப்பித் திருப்பி மடித்து, வெண்ணெய் தடவிய காகிதம் வைத்துள்ள ஒரு தட்டையான டின்னில் போட்டு, மேலே வாதுமைப் பருப்புகளைத் தூவி, நடுத்தரத்தீயுள்ள அடுப்பில் $1\frac{1}{2}$ மணி நேரம் பேக் பண்ணு.

14. ஸ்பஞ்ச் கேக்

4 முட்டை.
அந்த 4 முட்டை கனமுள்ள மாவும்,
அந்த 4 முட்டை கனமுள்ள சர்க்கரையும்.
1 அவு. வெண்ணெய்.
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
வெனிலா.
1 சிட்டிக்கை உப்பு.

மாவும் பேக்கிங் பவுடரும் உப்பும் கலந்து சலித்து எடுத்துக்கொள். முட்டைகளில் சர்க்கரை கலந்து 15 நிமிஷம் வரை இலேசாகி நுரையுண்டாகும்படி அடித்து அதில் வெனிலா சேர்த்து, அதை அந்த மாவில் நீர்க்கக் கலந்து, உருக்கிய வெண்ணெயை அதில் சேர்த்துக்கொள். வெண்ணெய் தடவிய ஆழமற்ற இரண்டு டின்களில் கொஞ்சம் மாவும் சர்க்கரையும் சலித்து அவைகளின்மீது அக்கலவையைப் பரப்பி நடுத்தரத்தீயுள்ள அடுப்பில் சுமார் 10 நிமிஷம் பேக் பண்ணு. ஆறிய பின் அவைகளுக்கிடையே பூரணம் வை. அது லெமன் சீஸ், அல்லது அடித்த க்றீம், அல்லது ஜாமாக இருக்கலாம். கேக்கின்மேல் ஐஸிங் சர்க்கரையைச் சலித்துக்கொள்.

15. லெமன் சீஸ்

(அடியிற்கண்டதின் பாதியளவு ஒரு கேக்குக்கு)

4 அவு. வெண்ணெய்.
8 அவு. சர்க்கரை.
3 எலுமிச்சம்பழம்.
4 முட்டை மஞ்சள் கரு.

வெண்ணெயும் சர்க்கரையும் கலந்துகொண்டு, அதில் முட்டை மஞ்சள் கருவுகளையும் எலுமிச்சம்பழ ரசமும், துருவிய தோலும் சேர்த்து இரட்டை பாய்லரில் தடிப்பாகும்வரை வேகவை. இரட்டை பாய்லருக்குப் பதிலாக, தண்ணீருள்ள ஒரு ஸாஸ்பானில் ஒரு போலை நிறுத்தி வைக்கலாம்.

16. CHRISTMAS CAKE

(About 7 lbs. in weight when cooked)

1½ lbs. flour.
1 lb. brown sugar.
1 lb. butter.
1 lb. dates.
1 lb. raisins
1 lb. sultanas.
¼ lb. currants.
¼ lb. almonds.
¼ lb. mixed peel.
½ lb. preserved cherries and ginger.
2 teaspoons mixed spice.
1 teaspoon salt.
½ teaspoon bicarbonate of soda.
10 eggs.
1 gill brandy.
1 dessertspoon milk.

Dry the flour and sieve it with the salt and spice. Wash and dry the fruit, removing all stalks and seeds. Blanch and chop the almonds, shred the peel and cut up the cherries and ginger. Cream the butter and sugar, add eggs two at a time with a little flour. Mix 2 tablespoons of flour with all the prepared fruit and stir it in gradually, beating well, lastly mix in the soda dissolved in the milk and the remainder of the flour and brandy. Do not beat the mixture after the flour has been well mixed in.

Grease one large and one smaller cake tin, line them with 3 or 4 layers of greased brown paper. Place the tins on pans of sand, put into a moderate oven and bake from 3 to 4 hours, the smaller cake being taken out first. The oven should be hot enough to keep the fruit from sinking to the bottom of the cake, but after the first 20 minutes the heat should be lowered and a steady heat maintained. When the cakes begin to brown, cover them with a double piece of wet paper.

For the last hour the heat of the oven may be reduced considerably for the cakes to finish cooking through. When cooked turn on to a sieve to cool, remove paper. When quite cold the cakes may be wrapped in paper or cloth and kept in a closely covered tin box for a month or more to mellow. Cover with almond paste and royal icing before using.

16. கிறிஸ்மஸ் கேக்

(சமைத்த கேக் சுமார் 7 பவுண்டு கனமுள்ளது)

1½ பவு. மாவு.
1 பவு. ப்ரௌன் சர்க்கரை.
1 பவு. வெண்ணெய்.
1 பவு. டேட்ஸ்.
1 பவு. ரேஸின்ஸ்.
1 பவு. சல்தானுஸ்.
¼ பவு. கறன்ஸ்.
¼ பவு. வாதுமை.
¼ பவு. மிக்ஸ்டு பீல்.
½ பவு. ப்ரிஸர்வ்ட் செறிஸூம் இஞ்சும் கலந்தது.
2 தேக்கரண்டி கலந்த வாசனை திரவியங்கள்.
1 தேக்கரண்டி உப்பு.
½ தேக்கரண்டி சோடாமாவு.
10 முட்டைகள்.
1 ஜில் பிருண்டி.
1 டெசற்ட்கரண்டி பால்.

மாவை உலர்த்தி அதில் உப்பும் வாசனைத் திரவியங்களும் கலந்து சலித்து எடுத்துக்கொள். பழங்களிலிருந்து காம்புகளையும் விதைகளையும் எடுத்துவிட்டுப் பழங்களைக் கழுவி உலர்த்தி எடுத்துக்கொள். வாதுமைப் பருப்பை வெண்மையாகத் தோலுரித்துத் துண்டரித்துக்கொள். செறிப் பழங்களையும் இஞ்சையும் தோலுரித்து அரிந்துகொள். வெண்ணெயும் சர்க்கரையும் க்றீமாக்கிக்கொண்டு அதில் தடவைக்கு கொஞ்சம் மாவோடு 2 முட்டைகளைச் சேர்த்துக்கொள். அதில் தயாரித்த பழங்கள் எல்லாவற்றோடும் 2 மேசைக்கரண்டி மாவைக் கலந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் கிளறிச் சேர்த்து நன்றாய் அடித்து, கடைசியாகப் பாலில் கரைத்த சோடாமாவையும் சேர்த்து அதில் மீதியாயுள்ள மாவும் பிருண்டியும் சேர்த்துக் கலக்கிக்கொள். மாவை நன்றாய்க் கலந்தானபின் அக்கலவையை அடிக்காதே.

ஒரு பெரிய கேக் டின்னிலும் ஒரு சிறிய கேக் டின்னிலும் வெண்ணெய் தடவிக்கொண்டு, வெண்ணெய் தடவிய ப்ரௌன் காகிதத்தை 3 அல்லது 4 மடிப்பு அதில் அஸ்திரியாகப் போட்டு மணலுள்ள பான்களில் அந்த டின்களை வைத்து அவைகளை நடுத்தரத் தீயில் வைத்து 3 முதல் 4 மணி வரை பேக் பண்ணு. முதலில் சிறிய கேக்கை எடுத்துக்கொள். கேக்கின் அடியில் பழம் அமிழ்ந்துபோகாதபடி தீயானது ஆனமட்டும் சூடுள்ளதாயிருக்கவேண்டும். ஆனால் முதல் 20 நிமிஷத்துக்குப்பின் சூட்டைக் கொஞ்சம் குறைத்து, ஒரே சீரான சூடுள்ளதாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். கேக்குகள் சிவக்க ஆரம்பிக்கும்போது அவைகளை இரட்டை மடிப்புள்ள ஈரக் காகிதத்தைக்கொண்டு மூடி வைக்கவேண்டும்.

கேக்குகள் பூர்த்தியாக வெந்தாகும்படி கடைசி மணி நேரத்தில் தீயின் சூட்டை அதிகமாய்க் குறைத்து விடவேண்டும். நன்றாய் வெந்தானதும் அந்தக் கேக்குகளை ஆறும்படி ஒரு சல்லடையில் திருப்பிப்போட்டுக் காகிதத்தை எடுத்துவிட்டுக் கேக்குகளை நன்றாய் ஆறியபின் ஒரு காகிதம் அல்லது துணியில் சுற்றி, இறுக்கமாய் மூடப்பட்டுள்ள ஒரு தகரப்பெட்டியில் மிருதுவாகும்படி ஒரு மாதம் அல்லது அதற்கும் அதிகமான காலம்வரை வைக்கவேண்டும். அந்தக் கேக்கை உபயோகிக்கும் முன் அதன்மேல் ஆமண்டு பேஸ்டும் ராயல் ஐஸிங்கும் முற்றிலும் தடவவேண்டும்.

17. MERINGUES (Standard Recipe)

To each white of egg, allow 2 ozs. castor sugar. Break the egg whites into a cold bowl, and let stand in ice box until chilled. Whisk them slowly at first, and then faster until they are stiff enough to stand in a mass. Fold in the sugar lightly, and quickly shape with spoons dipped in cold water and slide on to an oiled board. Dredge lightly with castor sugar, and place in cool oven, and bake *very slowly* from 2 to 3 hours.

A meringue board should be 1 inch thick. When meringues are firmly set, lift off carefully with a sharp knife, and gently crack the undersides to allow the steam to escape. Place cracked side uppermost, and replace in cool oven to dry off insides.

To Fill Meringues

Whip, sweeten and flavour a little thick cream, put a spoonful in the flat side of one meringue, and press another on top of the cream.

Coffee Meringues

To Standard Recipe add half teaspoon of pure coffee essence. Flavour the cream with the same essence.

18. BRANDY SNAPS

1 oz. butter.	1 oz. brown sugar.
1 oz. flour.	1 tablespoon ginger.
1 oz. treacle.	Vanilla and salt.

Put all but the flour in a saucepan, heat until melted, and add flour. Mix well and put in small spoonfuls on a well greased tin, and bake in a moderate oven until firm, and well set, then immediately roll round a greased stick. Keep them hot by standing the tin on the top of the oven until rolled.

17. மெருங்ஸ் (பொதுவான முறை)

ஒவ்வொரு முட்டை வெள்ளைக் கருவுக்கும் 2 அவுன்ஸ் கஸ்டர் சர்க்கரை வேண்டும். முட்டையை உடைத்து வெள்ளைக்கருவை ஒரு போலில் ஊற்றி சில் விடும் வரை ஐஸ் பெட்டியில் வை. அதன்பின் அதை எடுத்து முதலில் மெது வாய் அடிக்க ஆரம்பித்து வரவர வேகமாய் அடித்து, கெட்டியான ஒரே கட்டி போல் நிற்கும்வரை அடித்து, மெதுவாய்ச் சர்க்கரையில் அதை மடித்தடித்து, தண்ணீரில் தோய்த்த கரண்டிகளால் வேகமாய் எடுத்து, வெண்ணெய் தடவிய பலகையில் போட்டுக்கொண்டு, கொஞ்சமாய் கஸ்டர் சர்க்கரைத் தூவி நிதானமான தீயுள்ள அடுப்பில் வைத்து 2 அல்லது 3 மணி நேரம் வெகு நிதானமாய் பேக் பண்ணு.

ஒரு மெருங் பலகையானது ஒரு அங்குல கனமுள்ளதாய் இருக்கவேண்டும். மெருங் அப்பலகையில் ஒட்டிக்கொண்டிருந்தால் அதை ஜாக்கிரதையாய் ஒரு கூரான கத்தியைக்கொண்டு பெயர்த்து ஆவி வெளியாகும்படி அடிப்பக்கத்தில் மெதுவாய் விரிசல் உண்டாக்கிவிடவேண்டும். விரிசல் பக்கத்தை மேலாக வைத்து மறுபடியும் நிதானமான அடுப்பில் வைத்து உள்பக்கம் காயும்படி செய்துகொள்ள வேண்டும்.

மெறங்ஸில் பூரணம் வைத்தல்

தடிப்பான க்ரீமில் கொஞ்சம் எடுத்து, சர்க்கரையும் ஸ்பைஸ்களும் சேர்த்து அடித்து, அதில் ஒரு கரண்டி எடுத்து ஒரு மெருங்கின் தட்டையான பக்கத்தில் போட்டு, அதன்மேல் ஒரு மெருங்கை வைத்து அழுத்தவும்.

காஃபி மெறங்ஸ்

மெருங்கின் பொதுவான முறையில் கலப்பற்ற காஃபி எஸன்ஸ் $\frac{1}{2}$ தேக் கரண்டி சேர்த்துக்கொள். க்ரீமையும் அதே எஸன்ஸால் மணமாக்கிக்கொள்.

18. ப்ராண்டி ஸ்நாப்ஸ்

1 அவு. வெண்ணெய்.	1 அவு. ப்ரௌன் சுகர்.
1 அவு. மாவு.	1 மேசைக்கரண்டி ஜின்ஜர்.
1 அவு. ற்றீக்கில்.	வெனிலா, உப்பு.

மாவு தவிர மற்றதை எல்லாம் ஒரு ஸாஸ்பானில் போட்டு, உருகும்மட்டும் காய்ச்சி மாவைச் சேர்த்து நன்றாய்க் கலக்கிக்கொண்டு, சிறு கரண்டியால் எடுத்து, நன்றாய் வெண்ணெய் தடவிய டின்னில் போட்டு உறுதியாகிக் கெட்டிப்படும் வரை நடுத்தரத்தீயுள்ள அடுப்பில் பேக் பண்ணி, உடனே வெண்ணெய் தடவிய கோலில் சுற்றிக்கொள். எல்லாம் சுற்றியாகும்வரை சூடாயிருக்கும்பொருட்டு அந்த டின்னை அடுப்பின்மீது வைத்துக்கொண்டே அவ்வாறு சுற்று.

19. ECLAIRS

½ cup butter.
1 cup boiling water.
4 eggs.
1 cup flour.

Put butter and water in a saucepan and slowly bring to boiling point. Add flour all at once and stir vigorously until the mixture leaves the sides of the pan. Remove from fire cool slightly and add unbeaten eggs, one at a time, beating until thoroughly mixed. The mixture should be stiff enough to hold its shape. If too stiff it does not rise well and the yolk of another egg should be added. Drop by spoonfuls on a buttered sheet. Form into oblongs and bake 30 minutes, in a moderate oven. With a sharp knife split and carefully scrape out any soft dough. When cold fill with coffee or chocolate cream filling. Spread coffee or chocolate icing on top.

20. DATE BREAD

¾ cup sugar.
3 cups flour.
3 teaspoons baking powder.
1 cup chopped dates.
½ cup chopped nuts.
1½ cups milk.
1 egg.
2 tablespoons treacle or golden syrup.
Pinch of salt.

Sift the flour and baking powder, add salt and sugar, beat the egg and mix it with the milk and treacle, and add slowly to the flour. Mix well and bake in one or two loaf tins in a moderate oven for about 30 minutes.

This bread may be steamed instead of baked. For steaming, half fill two or three greased tins (1 lb. baking powder or Cerebos salt tins will do). Cover with lids and stand in a pan of boiling water and steam for 2 or 3 hours. The pans must be covered too.

Slice and butter before serving.

21. NUT BREAD

½ cup chopped walnuts.
¼ cup sugar.
1 cup milk.
1 egg.
2 cups of flour.
2 teaspoons baking powder.
½ teaspoon of salt.

Mix dry ingredients. Add nuts, beaten egg and milk. Put in cake tin and let stand for 20 minutes, then bake in oven till cooked (about 30 or 40 minutes). When cold cut in slices and spread with butter.

19. எக்லேர்ஸ்

$\frac{1}{2}$ கோப்பை வெண்ணெய். 4 முட்டை.
1 கோப்பை கொதிக்கிற வெந்நீர். 1 கோப்பை மாவு.

வெண்ணெயும் கொதிக்கிற வெந்நீரும் ஒரு ஸாஸ்பானில் போட்டுக் காய்ச்சிக் கொதிவர ஆரம்பிக்கையில் மாவை எல்லாம் ஒரே தடவையாய்க் கொட்டி, கலவை பானில் ஒட்டிக்கொள்ளாதவரை வேகமாய்க் கிளறித் தீயிலிருந்து எடுத்து கொஞ்சம் ஆறவைத்து அடிக்காத முட்டைகளைத் தடவைக்கொன்றாய்ச் சேர்த்து நன்றாய்க் கலக்க அடி. கலவை உருகலையாத கெட்டியாய் இருக்கட்டும். ரொம்ப கெட்டியாய் இருந்தால் நன்றாய் உப்பாது. அதற்காகப் பின்னும் ஒரு முட்டை மஞ்சள்கரு சேர்த்துக்கொள். அதிலிருந்து ஒவ்வொரு கரண்டியாய் எடுத்து வெண்ணெய் தடவிய காகிதத்தில் போட்டு, நீளவாட்டில் நாலு மூலைச் சௌக்கங்களாய்ச் செய்து, நடுத்தரத்தீயில் 30 நிமிஷம் பேக் பண்ணி கூரான கத்தியால் பிளந்து மெதுவாயுள்ள மாவை சுறண்டி எடுத்துவிடு. ஆறினபின் காஃபி அல்லது சாக்கொலத் பூரணத்தால் நிரப்பி, காஃபி அல்லது சாக்கொலத் ஐஸிங்கை மேலே தடவு.

20. டேட் ப்ரெட்

$\frac{3}{4}$ கோப்பை சர்க்கரை. $1\frac{1}{2}$ கோப்பை பால்.
3 கோப்பை மாவு. 1 முட்டை.
3 தேக்கரண்டி பேக்கிங் பவுடர். 2 மேசைக்கரண்டி ற்றீக்கில் அல்லது கோல்டன் ஸிரப்.
1 கோப்பை நறுக்கிய டேட்ஸ்.
$\frac{1}{2}$ கோப்பை நறுக்கிய நட்ஸ். 1 சிட்டிக்கை உப்பு.

மாவையும் பேக்கிங் பவுடரையும் சலித்து, அதில் உப்பும் சர்க்கரையும் சேர். முட்டையை அடித்துப் பாலும் ற்றீக்கிலும் சேர்த்துள்ளதில் சேர்த்து, அதையெல்லாம் நிதானமாய் மாவில் சேர்த்து நன்றாய்க் கலந்து இரண்டொரு லோஃப் டின்னில் வைத்து, நடுத்தரத்தீயில் 30 நிமிஷம் பேக் பண்ணு. அல்லது ஆவியில் ஆக்கிக்கொள். அதற்காக வெண்ணெய் தடவிய இரண்டு மூன்று டின்களைப் பாதி பாகம் கலவையால் நிரப்பி (ஒரு பவுண்டு பேக்கிங் பவுடர் அல்லது செரிபஸ் சால்ட் டின் போதும்) மூடியால் மூடி கொதிக்கும் தண்ணீருள்ள பானில் வைத்து 2, 3 மணிநேரம் வேகவை. அந்த பானையும் மூடி வைக்கவேண்டும். அப்படி வெந்த ரொட்டியை எடுத்து பில்லைத் துண்டுகளாக அறுத்து வெண்ணெய் தடவிப் பரிமாறு.

21. நட் ப்ரெட்

$\frac{1}{2}$ கோப்பை நறுக்கிய வால்நட்கள். 1 முட்டை.
$\frac{1}{4}$ கோப்பை சர்க்கரை. 2 கோப்பை மாவு.
1 கோப்பை பால். 2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு.

உலர்ந்த சாக்குகளை சேர்த்து, அதில் வால்நட்டும் அடித்த முட்டையும் பாலும் கலந்து கேக் டின்னில் வைத்து, 20 நிமிஷநேரம் விட்டு வைத்து, அதன்பின் வேகும்மட்டும் (சுமார் 30 அல்லது 40 நிமிஷம்) அடுப்பில் வைத்து பேக் பண்ணு. ஆறினபின் துண்டுகளாக அரிந்து வெண்ணெய் தடவிப் பரிமாறு.

22. AMERICAN DOUGHNUTS

4 cups flour.
2 eggs.
1 cup sour milk.
1 cup sugar.
1 tablespoon butter.
½ teaspoon cinnamon.
½ teaspoon grated nutmeg.
1 teaspoon salt.
1 teaspoon soda.
1 teaspoon baking powder.

Mix the flour, salt, spices and baking powder, work in the butter with the fingers, add sugar and well beaten eggs and sour milk in which the soda has been dissolved. Mix lightly to a dough, and roll out on a floured board to a ¼ inch thickness, and cut with a doughnut cutter (a tumbler and a small wineglass for the centre hole may be used). Fry in very hot fat and drain on white paper. Sieve icing sugar over while hot.

To test if the fat is hot enough, drop a small cube of soft bread into it, and if it browns in 1 minute, it is ready.

23. MACAROONS

3 ozs. ground almonds.
White of one egg.
3 ozs. castor sugar.
½ teaspoon almond essence.
Almonds.

Mix ground almonds and sugar together in a basin, moisten with white of egg and almond essence. Form into biscuit shapes and put a whole almond on top of each. Bake on a greased and floured tin in a moderate oven until a golden brown.

24. DROP COOKIES

½ cup butter.
1 cup brown sugar.
2 eggs.
½ cup flour.
1 teaspoon soda.
1 cup chopped raisins.
1 cup chopped walnuts.
1 teaspoon mixed spice.

Cream the butter and sugar, add the beaten eggs, flour, soda dissolved in a little milk, raisins, walnuts and spice. Drop in small heaps on a buttered tin 2 inches apart and bake for about 20 minutes.

22. அமெரிக்கன் டோநட்ஸ்

4 கோப்பை மாவு.	½ தேக்கரண்டி லவங்கப்பட்டை.
2 முட்டை.	½ தேக்கரண்டி துருவிய ஜாதிக்காய்.
1 கோப்பை புளித்தபால்.	1 தேக்கரண்டி உப்பு.
1 கோப்பை சர்க்கரை.	1 தேக்கரண்டி சோடா.
1 மேசைக்கரண்டி வெண்ணெய்.	1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.

மாவு, உப்பு, ஸ்பைஸஸ், பேக்கிங் பவுடர் இவைகளைச் சேர்த்துக் கலந்துகொண்டு, அதில் வெண்ணெயை விரல்களால் கலந்து நன்றாய்ப் பிசைந்து அதில் சர்க்கரையும், நன்றாய் அடித்த முட்டைகளையும், சோடா கரைத்துள்ள புளித்த பாலையும் சேர்த்து மெதுவாய்ப் பிசைந்த மாவு ஆக்கி, மாவு தூவிய மணை ஒன்றில் ¼ அங்குல கனத்துக்கு அப்பளம்போலிட்டுக்கொண்டு, ஒரு டோநட் கட்டரால் (ஒரு டம்ளரும் சின்ன ஒய்ன் க்ளாஸும் நடு தொளைக்கு உபயோகிக்கலாம்.) துண்டுகளாக்கிக்கொண்டு அதிக சூடாயுள்ள கொழுப்பில் பொரித்தெடுத்து, ஒரு வெள்ளை காகிதத்தில் வடிகட்டி, சூடாய் இருக்கையிலேயே ஐஸிங் சர்க்கரையை அவற்றின்மேல் சலித்துக்கொள்.

கொழுப்பு போதுமான சூடுள்ளதாய் இருக்கிறதா என்று அறிவதற்கு ஒரு சிறு துண்டு ரொட்டியை எடுத்து அதில் போடு; அந்த ரொட்டி 1 நிமிஷத்தில் சிவக்குமானால் சூடு சரியாயிருக்கிறதென்று அறி.

23. மக்கரூன்ஸ்

3 அவு. துருவிய வாதுமைப்பருப்பு.	3 அவு. கஸ்டர் சர்க்கரை.
1 முட்டை வெள்ளைக்கரு.	½ தேக்கரண்டி ஆமண்ட் எஸென்ஸ்.

வாதுமைப் பருப்பு

துருவிய வாதுமைப் பருப்பையும் சர்க்கரையையும் ஒரு பேஸினில் கலந்துகொண்டு, முட்டையின் வெள்ளைக்கருவும், ஆமண்ட் எஸென்ஸும் போட்டுக் கசிவாக்கிக்கொண்டு, பிஸ்கட்களைப்போல் செய்து, ஒவ்வொன்றின்மீதும் ஒரு முழு வாதுமைப்பருப்பை வைத்து, வெண்ணெய் தடவி மாவு தூவியுள்ள டின்னில் வைத்து நடுத்தரத்தீயுள்ள அடுப்பில் பொன்நிறம் ஆகும்வரை பேக் பண்ணு.

24. ட்ராப் குக்கீஸ்

½ கோப்பை வெண்ணெய்.	1 தேக்கரண்டி சோடா.
1 கோப்பை ப்ரௌன் சுகர்.	1 கோப்பை அரிந்த ரேஸின்.
2 முட்டை.	1 கோப்பை நறுக்கிய வால்நட்.
½ கோப்பை மாவு.	1 தேக்கரண்டி மிக்ஸ்ட் ஸ்பைஸஸ்.

வெண்ணெயும் சர்க்கரையும் க்றீம் ஆக்கிக்கொண்டு, அடித்த முட்டைகளும் மாவும், பாலில் கரைத்த சோடாவும், ரேசினும், வால்நட்டும், வாசனை சரக்குகளும் அதில் சேர்த்துக்கொண்டு, வெண்ணெய் தடவிய டின்னில் 2 அங்குல தூரத்துக்கு ஒவ்வொரு சிறு குப்பலாகப் போட்டு, சுமார் 20 நிமிஷம் பேக் பண்ணு.

25. BRAZILIAN FINGERS

3 ozs. butter.
2 eggs (small).
$\frac{1}{3}$ cup milk.
1 cup sugar.
2 ozs. unsweetened chocolate.
1 teaspoon baking powder.
$\frac{1}{2}$ teaspoon vanilla.
$\frac{1}{2}$ cup chopped nuts.
Pinch of salt.

Melt the butter in a saucepan, stir in sugar and unbeaten egg, mix well. Add melted chocolate, milk, sifted flour, baking powder, salt and essence. Spread thinly on a buttered tin and bake in a slow oven 20 or 30 minutes. Cut in fingers before removing from tin. Spread a little chocolate icing on each finger, or sandwich together with coffee cream.

To melt the chocolate—place it in a cup with a teaspoon of hot water and stand it in a pan of boiling water until melted.

26. ALMOND SHORTBREAD

6 ozs. flour
2 ozs. rice flour.
1 oz. castor sugar.
1 oz. ground almonds.
1 egg yolk.
3 ozs. butter.

Sift flour, add almonds and rub in butter, add sugar. Mix to stiff dough with yolk of egg. Knead and roll out thin, cut in rounds or fingers. Bake in a moderate oven 15 to 20 minutes. If desired spread with jam and put together. Dust over with icing sugar.

27. PARKIN

6 ozs. flour.
6 ozs. medium oatmeal.
5 ozs. syrup and treacle.
5 ozs. sugar.
1 egg.
5 ozs. butter or margarine.
$\frac{1}{2}$ teaspoon ground ginger.
$\frac{1}{2}$ teaspoon cinnamon.
$\frac{3}{4}$ level teaspoon bicarbonate soda.

Heat syrup, treacle and butter. Mix dry ingredients and add to syrup. Then add beaten egg. Mix to stiff consistency, turn into flat greased tin and bake in slow oven 30 to 40 minutes. Cut in squares or fingers.

25. ப்ரஸிலியன் ஃபிங்கர்ஸ்

3 அவு. வெண்ணெய்.
2 சிறு முட்டை.
$\frac{1}{3}$ கோப்பை பால்.
1 கோப்பை சர்க்கரை.
2 அவு. சர்க்கரை சேர்க்காத சாக்கொலத்.
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி வெனிலா.
$\frac{1}{2}$ கோப்பை நறுக்கிய வாதுமை முதலிய பருப்புகள்.
1 சிட்டிக்கை உப்பு.

வெண்ணெயை நெய்யாகாமல் மெதுவுபடும்வரை உருக்கு. அதில் சர்க்கரையும் அடிக்காத முட்டையையும் கலக்கிக்கொண்டே சேர்த்து நன்ருய்க் கலந்துகொள். அதில் உருக்கிய சாக்கொலத்தும் பாலும் சலித்த மாவும் பேக்கிங் பவுடரும் உப்பும் எஸன்ஸூம் சேர்த்துக்கொள். அதை வெண்ணெய் தடவிய ஒரு டின்னில் மெல்லியதாய்ப் பரப்பி நிதானமான தீயில் 20 அல்லது 30 நிமிஷம்வரை பேக் பண்ணி தகரத்திலிருந்து எடுக்கும்முன் விரலைப்போல் நீளமாயிருக்கும்படி அறுத்து ஒவ்வொரு துண்டின்மீதும் கொஞ்சம் சாக்கொலத் ஐஸிங் தடவிப் பரிமாறு அல்லது காஃபி க்றீம் வைத்து ஸாண்ட்விச் செய்து பரிமாறு.

சாக்கொலத்தை உருக்குவதற்கு:—ஒரு தேக்கரண்டி வெந்நீருள்ள கோப்பையில் சாக்கொலத்தைப்போட்டு அது உருகும் மட்டும் அந்தக் கோப்பையை கொதிக்கும் தண்ணீருள்ள பானில் வைத்திரு.

26. ஆமண்ட் ஷார்ட்ட்ரேட்

6 அவு. மாவு.
2 அவு. அரிசி மாவு.
1 அவு. கஸ்டர் சர்க்கரை.
1 அவு. துருவிய வாதுமைப்பருப்பு.
1 முட்டை மஞ்சள் கரு.
3 அவு. வெண்ணெய்.

மாவை சல்லடையில் சலித்துக்கொண்டு, அதில் வாதுமைப்பருப்பு சேர்த்து வெண்ணெயோடு பிசைந்து, சர்க்கரை சேர்த்து, முட்டைமஞ்சள் கருவைப் போட்டுக் கெட்டியாய்ப் பிசைந்துகொண்டு, பிறகு விரல்களால் பிசைந்து மெல்லியதாய் அப்பளம்போல் இட்டுக்கொண்டு, நடுத்தரத் தீயில் 15 முதல் 20 நிமிஷம்வரை பேக் பண்ணு. இஷ்டமானல் ஜாம் தடவி ஒன்ருய் வைத்து ஐஸிங் சர்க்கரை தூவவும்.

27. பார்க்கின்

6 அவு. மாவு.
6 அவு. நடுத்தர ஓட்மீல்.
5 அவு. சிரப்பும், ட்றீக்கிலும்.
5 அவு. சர்க்கரை.
1 முட்டை.
5 அவு. வெண்ணெய் அல்லது மார்ஜரீன்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி துருவிய ஜிஞ்சர்.
$\frac{1}{2}$ தேக்கரண்டி லவங்கப்பட்டை.
$\frac{3}{4}$ தேக்கரண்டி சோடாமாவு.

சிரப்பையும் ட்றீக்கிலையும் வெண்ணெயையும் சூடாக்கிக்கொள். உலர்ந்த சரக்குகளைக் கலந்து சிரப்பில் சேர்த்து அதன்பின் அடித்த முட்டையையும் அதில் சேர்த்து மொத்தையாகும்படி கலந்து வெண்ணெய் தடவிய தட்டைட்டின்னில் போட்டு நிதானமான தீயில் 30 முதல் 40 நிமிஷம்வரை பேக் பண்ணு. அதன்பின் சதுரத்துண்டுகளாகவோ நீட்டுத்துண்டுகளாக அரிந்துகொள்.

28. DURHAM CHEESE CAKES

3 ozs. butter.
2 ozs. sugar.
2 eggs.
2 dessertspoons flour.
½ teaspoon baking powder.
Pinch of salt.
Jam and short pastry.

Cream the butter and sugar, add one egg and one dessertspoon flour. Beat well, then add second egg, second, dessertspoon flour and baking powder. Mix well. Line patty pans with short pastry, drop a little jam in each. Cover with a spoonful of the above mixture and bake.

29. SHORTBREAD BISCUITS

6 ozs. flour.
2 ozs. rice flour.
4 ozs. butter.
Pinch of salt.
2 ozs. castor sugar.

Beat sugar and butter together, add flour gradually. Roll out and cut into shapes, and bake in a moderate oven for 15 minutes.

30. OATMEAL BISCUITS

4 tablespoons flour.
1 tablespoon castor sugar.
2 ozs. butter.
2 tablespoons medium oatmeal.
1 teaspoonful baking powder.
Pinch of salt.
Milk to mix.

Sieve flour and salt together, rub in the butter. Add sugar and baking powder and oatmeal and mix with a little milk. Roll out to about ¼ inch thickness, cut into shapes and bake in a moderate oven. To eat with cheese omit the sugar.

28. டரம் சீஸ் கேக்ஸ்

3 அவு. வெண்ணெய்.
2 அவு. சர்க்கரை.
2 முட்டை.
2 டெசற்ட்கரண்டி மாவு.
½ தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
1 சிட்டிக்கை உப்பு.
ஜாமும் ஷாற்ட் பேஸ்ட்றியும்.

வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்றீமாக்கிக்கொண்டு அதில் ஒரு முட்டையும் ஒரு டெசற்ட்கரண்டி மாவும் சேர்த்துக்கொண்டு நன்றாய் அடித்து அப்புறம் 2-வது முட்டையும் ஒரு டெசற்ட்கரண்டி மாவும் பேக்கிங் பவுடரும் சேர்த்து நன்றாய்க் கலந்துகொள். பட்டீபான்களில் ஷாற்ட் பேஸ்ட்றி அஸ்திரி கொடுத்து ஒவ்வொன்றிலும் கொஞ்சம் ஜாம் சொட்டவிட்டு மேலே சொன்ன கலவையில் ஒரு தேக்கரண்டி அதன்மேல் போட்டு பேக் பண்ணு.

29. ஷாற்ட் ப்ரெட் பிஸ்கட்ஸ்

6 அவு. மாவு.
2 அவு. அரிசி மாவு.
4 அவு. வெண்ணெய்.
1 சிட்டிக்கை உப்பு.
2 அவு. கஸ்டர் சர்க்கரை.

சர்க்கரையும் வெண்ணெயும் ஒன்றாயடித்து, மாவைக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்த்துக்கொண்டு, அப்பளம்போல் இட்டு, வேண்டிய மாதிரி அறுத்து, நடுத்தரத்தீயில் 15 நிமிஷம் பேக் பண்ணு.

30. ஓட்மீல் பிஸ்கட்ஸ்

4 மேசைக்கரண்டி மாவு.
1 மேசைக்கரண்டி கஸ்டர் சர்க்கரை.
2 அவு. வெண்ணெய்.
2 மேசைக்கரண்டி நடுத்தர ஓட்மீல்.
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
1 சிட்டிக்கை உப்பு.
கலப்பதற்குப் பால்.

மாவையும் உப்பையும் சேர்த்துச் சலித்துக்கொண்டு, அதில் வெண்ணெய் சேர்த்துப் பிசைந்து, சர்க்கரையும், பேக்கிங் பவுடரையும், ஓட்மீலையும் அதில் சேர்த்துக் கொஞ்சம் பாலூற்றிக் கலந்து ¼ அங்குல கனத்துக்கு அப்பளம் போலிட்டு, வேண்டிய மாதிரி அறுத்து நடுத்தரத்தீயில் பேக் பண்ணு. சீஸோடு சாப்பிடுவதானால் மேலே சொன்ன கலவையில் சர்க்கரை சேர்க்கவேண்டாம்.

31. APPLE CHEESE CAKES

6 large apples.
1 lemon or lime.
1 gill of water.
4 ozs. butter.
Yolks of 2 eggs.
3 ozs. castor sugar.
1 lb. puff or flaky pastry.

Peel, core and quarter the apples and boil in the water until quite soft. Mash them well until quite smooth, then add the grated rind and juice of lime. Beat the butter to a cream with the sugar, add the egg yolks one by one, beating well, and slowly stir in the apple mixture. Line about a dozen patty pans with pastry, prick the bottoms and three-parts fill with the mixture. Bake in a fairly hot oven for about 12 or 20 minutes. Serve hot or cold.

32. LEMON CHEESE CAKES

4 ozs. butter.
4 ozs. sugar.
2 limes or lemons.
A few almonds.
1 lb. of short or puff of flaky pastry.
2 eggs.

Beat the butter and sugar to a cream, add the eggs one by one beating well, then the grated peel of two lemons and the juice of one. Stir over a low heat until the mixture thickens. Cool and put into patty pans lined with pastry, blanch and slice the almonds and arrange them on the top of each cheese cake. Bake in a fairly hot oven 15 or 20 minutes.

33. OATMEAL WAFERS

3 ozs. brown sugar.
4 heaped tablespoons Quaker Oats.
2 ozs. butter.
½ teaspoon salt.
½ teaspoon baking powder.

Cream the butter and sugar, add the Quaker Oats, salt and baking powder, mix to a stiff paste and drop in teaspoonfuls, a good space apart on a buttered tin and bake in a moderate oven for 15 minutes.

31. ஆப்பில் சீஸ் கேக்ஸ்

6 பெரிய ஆப்பில் பழங்கள்.
1 லெமன் அல்லது எலுமிச்சம்பழம்.
1 ஜில் தண்ணீர்.
4 அவு. வெண்ணெய்.
2 முட்டை மஞ்சள் கரு.
3 அவு. கஸ்டர் சர்க்கரை.
1 பவு. பஃப் அல்லது ஃப்ளேக்கி பேஸ்ட்றி.

ஆப்பில் பழங்களைத் தோலுரித்து, விதை பாகங்களை எடுத்துவிட்டு, பல பாகங்களாக அரிந்து, தண்ணீரில் மெதுவுபடும்வரை வேகவைத்து, எடுத்து, நன்றாய்ப் பிசைந்துகொண்டு எலுமிச்சம்பழ ரசத்தையும் துருவிய தோலையும் சேர்த்துக்கொள். வெண்ணெயில் சர்க்கரை கலந்து க்ரீம் ஆகும்வரை அடித்து, அதில் முட்டை மஞ்சள் கருவை ஒவ்வொன்றாய் அடித்துச் சேர்த்து, அதில் ஆப்பில் கலவையை மெதுவாய்க் கலக்கிக்கொண்டே சேர்க்கவும். சுமார் ஒரு டஜன் பட்டீபான்களில் பேஸ்ட்றியை அஸ்திரியாகப் போட்டு, அடிகளில் கீறி விட்டு, மேலே சொன்ன கலவையை அதில் முக்கால் பாகம் நிரப்பி ஆனமட்டும் சூடான அடுப்பில் 12 அல்லது 20 நிமிஷம்வரை பேக் பண்ணி சூடானதாகவோ அல்லது ஆறினதாகவோ பரிமாறு.

32. லெமன் சீஸ் கேக்ஸ்

4 அவு. வெண்ணெய்.
4 அவு. சர்க்கரை.
2 எலுமிச்சம்பழம் அல்லது லெமன்.
கொஞ்சம் வாதுமை.
1 பவு. ஷார்ட் அல்லது பஃப் அல்லது ஃப்ளேக்கி பேஸ்ட்றி.
2 முட்டைகள்.

வெண்ணெயும் சர்க்கரையும் கலந்து அடித்து க்ரீமாக்கிக்கொண்டு, அதில் முட்டைகளை ஒவ்வொன்றாய் நன்றாய் அடித்துச் சேர்த்துக்கொண்டு, அதன்பின் ஒரு எலுமிச்சம்பழ ரசமும் 2 எலுமிச்சம்பழத்தின் துருவிய தோலையும் சேர்த்துக் கொண்டு, அக்கலவை தடிப்பாகும்வரை நிதானமான தீயில் கிளறிக்கொண்டே யிரு. அதன்பின் அக்கலவையை ஆறவைத்து பேஸ்ட்றி அஸ்திரியுள்ள பட்டீ பான்களில் போடு. வாதுமைப்பருப்பைத் தோலுரித்துத் துண்டரித்து ஒவ்வொரு சீஸ் கேக்கின்மீதும் அலங்கரித்து வைத்து ஆனமட்டும் சூடாயுள்ள அடுப்பில் 15 முதல் 20 நிமிஷம்வரை பேக் பண்ணு.

33. ஓட்மீல் வேஃபர்ஸ்

3 அவு. ப்ரௌன் சுகர்.
4 மேசைக்கரண்டி க்வேக்கர் ஓட்ஸ் (கூச்சாயளந்தது).
2 அவு. வெண்ணெய்.
½ தேக்கரண்டி உப்பு.
½ தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.

வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து க்ரீமாக்கிக்கொண்டு, க்வேக்கர் ஓட்ஸும், உப்பும், பேக்கிங் பவுடரும் சேர்த்துக் கெட்டியாய்ப் பிசைந்து, தேக்கரண்டியால் எடுத்து, வெண்ணெய் தடவியதொரு டின்னில் ஆனமட்டும் தூர தூரமாய்ப் போட்டு, நடுத்தரத் தீயுள்ள அடுப்பில் 15 நிமிஷ நேரம் பேக் பண்ணு.

34. SEMOLINA CHEESE CAKES

½ pint milk.
1 oz. semolina.
1 tablespoon currants.
2 tablespoons sugar.
1 lime or lemon.
1 egg.

Peel the rind of the lemon very thinly and put it with the milk, into a saucepan; bring to the boil, then remove the rind, and while the milk is still boiling, shake in the semolina and the sugar. Cook the mixture, stirring all the time, until it thickens. Take the pan from the fire and add the strained juice of the lemon and the whisked egg; beat the mixture well and leave it to cool. Meanwhile line some small patty pans with pastry and in each put a teaspoonful of raspberry jam; cover each completely with the semolina mixture and bake in a moderate oven.

35. OATMEAL FRUIT SCONES

¼ lb. fine oatmeal.
2 ozs. butter or lard.
¼ level teaspoon salt.
1½ ozs. sugar.
2 ozs. sultanas.
½ lb. flour.
2 teaspoons baking powder.
½ cup milk.

Sift flour into a basin with salt, oatmeal, and baking powder. Rub in the butter or lard, then add the clean and picked fruit, add the sugar. Mix the dry ingredients well together, add sufficient milk to make a soft dough. Roll out the dough to about ½ inch thickness, cut into rounds, place on a lightly greased and floured baking sheet, and bake in a hot oven for 15 minutes.

36. POTATO SCONES

¼ lb. flour.
1 teaspoon baking powder.
1 small saltspoon salt.
1 teaspoon sugar.
¼ lb. cooked potatoes.
1 oz. butter.
1 egg.
Milk for mixing.

Rub the potatoes through a sieve, add flour, and rub in the butter. Sift in the other dry ingredients, beat up egg and put into mixture. Mix to a soft dough with milk. Roll out to ½ inch thickness. Prick over with fork to make scones rise easily. Bake in a hot oven for 15 minutes. Serve with butter.

34. செமோலினா சீஸ் கேக்ஸ்

$\frac{1}{2}$ பைண்ட் பால்.
1 அவு. செமோலினா.
1 மேசைக்கரண்டி கரன்ஸ்.
2 மேசைக்கரண்டி சர்க்கரை.
1 எலுமிச்சம்பழம்.
1 முட்டை.

எலுமிச்சம்பழத்தின் தோலை மெல்லியதாயுரித்து ஒரு ஸாஸ்பானில் பாலோடு கலந்து போட்டு கொதிவரும்வரை கொதிக்க வைத்துத் தோலை எடுத்து விட்டுப் பால் இன்னும் கொதித்துக்கொண்டிருக்கையில் செமோலினாவும் சர்க்கரையும் போட்டு நன்ருய்க் குலுக்கி அக்கலவையைக் கிளறிக்கொண்டே தடிப்பாகும்வரை வேகவைத்து ஸாஸ்பானை அடுப்பிலிருந்து எடுத்து, வடிக்கட்டிய எலுமிச்சம்பழ ரசத்தையும் நன்ருய் அடித்த முட்டையையும் அதில் சேர்த்து அக்கலவை எல்லாவற்றையும் நன்ருய் அடித்தானபின் ஆறவை. அதற்குள் சில சிறு டட்டி பான்களில் பேஸ்ட்றி அஸ்திரிபோட்டு ஒவ்வொரு பானிலும் ஒரு தேக்கரண்டி ரர்ஸ்பறி ஜாம் போட்டு அந்த ஜாமை செமோலினா கலவையால் நன்ருய் மூடி நடுத்தரத் தீயில் பேக் பண்ணு.

35. ஓட்மீல் ஃப்ரூட் ஸ்கோன்ஸ்

$\frac{1}{4}$ பவு. மெல்லிய ஓட்மீல்.
2 அவு. வெண்ணெய் அல்லது லார்ட்.
$\frac{1}{4}$ தேக்கரண்டி உட்பு.
$1\frac{1}{2}$ அவு. சர்க்கரை.
2 அவு. சுல்டானஸ்.
$\frac{1}{2}$ பவு. மாவு.
2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
$\frac{1}{2}$ கோப்பை பால்.

ஒரு பேசினில் உப்பும், ஓட்மீலும், பேக்கிங் பவுடரும் போட்டு, அதில் மாவைச் சலித்துக்கொண்டு, அதை வெண்ணெய் அல்லது லார்டைக்கொண்டு பிசைந்துகொண்டு, அதில் சுத்தமான நல்ல பழத்தைச் சேர்த்து, சர்க்கரையும் போட்டுச் சேர்த்து நன்ருய்க் கலந்துகொண்டு, போதுமான பாலைச் சேர்த்து நன்ருய்ப் பிசைந்து $\frac{1}{2}$ அங்குல கனமுள்ள அப்பளம்போலிட்டு வட்டங்களாகச் செய்து, கொஞ்சமாய் வெண்ணெய் தடவி மாவு தூவிய பேக்கிங் காகிதத்தில் வைத்துத் தீவிரமான தீயுள்ள அடுப்பில் 15 நிமிஷம் பேக் பண்ணு.

36. பொட்டேட்டோ ஸ்கோன்ஸ்

$\frac{1}{4}$ பவு. மாவு.
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
1 சிறு உப்புக்கரண்டி உப்பு.
1 தேக்கரண்டி சர்க்கரை.
$\frac{1}{4}$ பவு. வெந்த உருளைக் கிழங்கு.
1 அவு. வெண்ணெய்.
1 முட்டை.
கலப்பதற்குக் கொஞ்சம் பால்.

உருளைக்கிழங்கைச் சல்லடையில் தேய்த்துக்கொண்டு, அதில் மாவு சேர்த்து வெண்ணெயால் பிசைந்துகொள். மற்றச் சாக்குகளையும் அதில் சலித்துக்கொள். முட்டையை அடித்து அதில் சேர்த்துக்கொள். அதில் பாலைச் சேர்த்துப் பிசைந்து மெதுவாக்கிக்கொள். அந்த மாவை $\frac{1}{2}$ அங்கல கனமுள்ள அப்பளம்போலிட்டுக் கொள். ஸ்கோன்ஸ் சுளுவாய் உப்பும்படி முள்ளைக்கொண்டு மேலே குத்திவிட்டுத் தீவிரத்தீயுள்ள அடுப்பில் 15 நிமிஷம் பேக் பண்ணி வெண்ணெயோடு பரிமாறு.

37. WELSH SCONES

½ lb. flour.
2 ozs. butter.
2 ozs. sugar.
2 ozs. lard.
2 ozs. currants.
2 ozs. sultanas.
1 teaspoon baking powder.
1 egg and a little milk.

Sift the flour and baking powder, rub in butter and lard, add egg and milk to form a dough. Add fruit. Roll out to ¼ inch thickness, and cut in rounds. Cook on hot greased girdle. Brown each side, and then move to a cooler part of girdle to finish.

38. SCOTCH PANCAKES

6 ozs. flour.
¾ teaspoon bicarb. soda.
3 teaspoons castor sugar.
1 teaspoon cream of tartar.
1 teacup of milk.
1 egg.
Pinch of salt.

Sift the flour into a basin with the salt, soda, and cream of tartar, add the sugar. Beat up the egg and add the milk and stir it into the ingredients, beat this well. Let mixture stand for half an hour. Heat a girdle and grease it. Drop the mixture in spoonfuls on to the hot girdle and cook gently till the pancakes are brown underneath, then turn over and brown the other side. These may be served with butter or jam.

39. PLAIN TEA SCONES

2 cups flour.
2 tablespoons butter (or mixed lard and butter).
4 teaspoons baking powder.
1 teaspoon sugar.
⅔ cup milk.
½ teaspoon salt.

Sift together the flour, baking powder, and salt. Add the sugar cut in the shortening with a knife, add milk and turn on to floured board. Pat and roll out to ½ inch thickness. Cut in rounds and bake 12 or 15 minutes in a hot oven. If sour milk is used instead of sweet add ⅓ teaspoon of soda to it and omit the baking powder.

In cutting the scones, do not turn the cutter after pressing, or the edges will be pressed together, and they will not rise so well.

37. வெல்ஷ் ஸ்கோன்ஸ்

½ பவு. மாவு.
2 அவு. சர்க்கரை.
2 அவு. கறண்ட்ஸ்.
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
2 அவு. வெண்ணெய்.
2 அவு. லார்ட்.
2 அவு. சுல்டானஸ்.
1 முட்டை, கொஞ்சம் பால்.

மாவையும் பேக்கிங் பவுடரையும் சலித்து, வெண்ணெயும் லார்டும் கொண்டு பிசைந்து, முட்டையும் பாலும் சேர்த்துப் பிசைந்து, அதில் பழத்தையும் சேர்த்து கலந்துகொண்டு $\frac{1}{4}$ அங்குல கனத்துக்கு அப்பளம்போலிட்டுக்கொண்டு வட்டத் துண்டுகளாக அறுத்து, வெண்ணெய் தடவி உஷ்ணமாயுள்ள கர்ட்லில் வேக வைத்து, ஒவ்வொரு பக்கமும் சிவந்ததும் கர்ட்லின் ஆறியுள்ள பாகத்தில் வைத்துப் பதம் ஆகும்வரை பேக் பண்ணு.

38. ஸ்காட்ச் பான்கேக்ஸ்

6 அவு. மாவு.
3 தேக்கரண்டி கஸ்டர் சர்க்கரை.
1 தேக்கோப்பை பால்.
$\frac{3}{4}$ தேக்கரண்டி சோடா உப்பு.
1 தேக்கரண்டி க்றீம் அஃப் டார்டர்.
1 முட்டை.
1 சிட்டிக்கை உப்பு.

ஒரு பேஸினில் உப்பும், சோடாவும், க்றீமும் போட்டுக்கொண்டு, அதில் மாவைச் சலித்துக்கொண்டு சர்க்கரை சேர்த்துக்கொள். முட்டையை அடித்துப் பால் சேர்த்து அந்த மாவில் விட்டு நன்றாய்க் கலந்து அடித்து $\frac{1}{2}$ மணி நேரம் அப்படியே விட்டுவை. ஒரு கர்ட்லைச் சூடாக்கி வெண்ணெய் தடவி, அதில் அந்தக் கலவையில் ஒரு கரண்டி எடுத்துப்போட்டு, அடிப்பக்கம் சிவக்கும்வரை நிதானமான தீயில் வேகவைத்துத் திருப்பிப்போட்டு மறுபக்கமும் சிவக்கும்வரை வைத்து எடு; அப்படியே கலவை முழுவதையும் செய்துகொள். அதன்பின் அவைகளை வெண்ணெய் அல்லது ஜாமோடு பரிமாறலாம்.

39. ப்ளேய்ன் டீ ஸ்கோன்ஸ்

2 கோப்பை மாவு.
4 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
$\frac{2}{3}$ கோப்பை பால்.
2 மேசைக்கரண்டி வெண்ணெய் அல்லது லார்டும் வெண்ணெயும் கலந்தது.
1 தேக்கரண்டி சர்க்கரை.
$\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு.

மாவும், பேக்கிங் பவுடரும், உப்பும் சேர்த்துச் சலித்துக்கொண்டு, அதில் சர்க்கரை சேர்த்து, கத்தியால் வெண்ணெய் துண்டுகளைச் சேர்த்து, பால் சேர்த்து, மாவு பலகையில் போட்டுக்கொண்டு தட்டி $\frac{1}{2}$ அங்குல கனத்துக்கு அப்பளம் போலிட்டு வட்டங்களாக அறுத்துத் தீவிரத்தீயில் 12 முதல் 15 நிமிஷம் வரை பேக் பண்ணு. நல்ல பாலுக்குப் பதிலாய்ப் புளித்த பால் உபயோகித்தால் பேக்கிங் பவுடருக்குப் பதிலாய் $\frac{1}{3}$ தேக்கரண்டி சோடா உப்பு சேர்க்கவும்.

ஸ்கோன்ஸாக வெட்டும்போது கட்டரை அழுத்தியபின் திருப்பாதே; திருப்பினால் ஓரங்கள் ஒன்றாய் அழுந்திபோம். அப்போது அவைகள் அவ்வளவு நன்றாய் எழும்பாது.

40. ROCK SCONES

½ lb. flour.
¼ teaspoon salt.
3 ozs. butter.
2 teaspoons castor sugar.
2 teaspoons baking powder.
1 egg.
½ gill of milk.

Sift the flour, salt and baking powder together. Add sugar. Beat egg and milk and stir into dry mixture. Put in heaps on greased baking sheet, and bake in a quick oven about 20 minutes.

41. CREAM SCONES

2 cups flour.
4 teaspoons baking powder.
2 teaspoons sugar.
4 tablespoons butter.
2 eggs.
⅓ cup cream.
½ teaspoon salt.

Mix and sift the flour, baking powder and salt, add the sugar. Rub in the butter and add the well beaten eggs and cream. Toss on to a floured board, pat and roll to ¾ inch thickness, cut in rounds and brush with a little beaten egg and bake in a hot oven 15 minutes.

42. OAT CAKE

1 breakfast cup oatmeal.
1 teacup flour.
1 tablespoon beef dripping.
1 saltspoon salt.
1 saltspoon sugar.
1 saltspoon soda.
1 teacup cold water.

Mix the dry ingredients and rub in the dripping. Mix to a dough with the water, turn on to a floured board, sprinkled with oatmeal and roll out thinly, cut in rounds and bake in a moderate oven for 10 minutes.

43. TEA CAKE

4 ozs. flour.
2 ozs. sugar.
1 oz. butter.
2 eggs.
1 teaspoon baking powder.
Pinch of salt.
A little milk to moisten.

Mix flour, sugar, salt and baking powder, and rub in the butter. Add yolks well beaten, whipped whites, and enough milk to make to a cake consistency. Bake on a flat tin for about 20 minutes. Serve hot with butter.

40. ராக் ஸ்கோன்ஸ்

½ பவு. மாவு. 2 தேக்கரண்டி கஸ்டர் சர்க்கரை.
¼ தேக்கரண்டி உப்பு. 2 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
3 அவு. வெண்ணெய். 1 முட்டை.
½ ஜில் பால்.

மாவு, உப்பு, பேக்கிங் பவுடர் இம்மூன்றையும் சேர்த்துச் சலித்துக்கொண்டு, சர்க்கரை சேர்த்து, முட்டையும் பாலும் சேர்த்து அடித்து அதை அந்த மாவில் கிளறிக்கொண்டே சேர்த்து, நன்ருய்க் கலந்து வெண்ணெய் தடவிய பேக்கிங் காகிதத்தில் சிறு குவியல்களாக வைத்துத் தீவிரத்தீயுள்ள அடுப்பில் சுமார் 20 நிமிஷநேரம் பேக் பண்ணு.

41. க்றீம் ஸ்கோன்ஸ்

2 கோப்பை மாவு. 4 மேசைக்கரண்டி வெண்ணெய்.
4 தேக்கரண்டி பேக்கிங் பவுடர். 2 முட்டை.
2 தேக்கரண்டி சர்க்கரை. ⅓ கோப்பை க்றீம்.
½ தேக்கரண்டி உப்பு.

மாவும், பேக்கிங் பவுடரும், உப்பும் சேர்த்துச் சலித்துக்கொண்டு, சர்க்கரை சேர்த்தபின் வெண்ணெயைக்கொண்டு பிசைந்து, நன்ருய் அடித்த முட்டைகளை யும், க்றீமையும் அதில் சேர்த்துக் கலந்து, மாவு பலகையில் தூக்கிப்போட்டுத் தட்டி ¾ அங்குல கனத்துக்கு அப்பளம்போலிட்டுக்கொண்டு, வட்டங்களாக அறுத்து அடித்த முட்டையில் கொஞ்சம் அவைகளின்மீது தடவித் தீவிரத்தீயில் 15 நிமிஷம் பேக் பண்ணு.

42. ஓட் கேக்

1 பெரிய கோப்பை ஓட் மீல். 1 உப்புக்கரண்டி உப்பு.
1 தேக்கோப்பை மாவு. 1 உப்புக்கரண்டி சர்க்கரை.
1 மேசைக்கரண்டி ட்றிப்பிங். 1 உப்புக்கரண்டி சோடா.
1 தேக்கோப்பை தண்ணீர்.

உலர்ந்த சரக்குகளைக் கலந்து அதை ட்றிப்பிங் கொண்டு பிசைந்து, தண்ணீர் சேர்த்துக் கலந்து, ஓட்மீல் தூவியுள்ள மாவு பலகையில் போட்டு, மெல் லிய அப்பளம்போலிட்டுக்கொண்டு வட்டங்களாக அறுத்து நடுத்தரத்தீயில் 10 நிமிஷம் பேக் பண்ணு.

43. டீ கேக்

4 அவு. மாவு. 2 முட்டை.
2 அவு. சர்க்கரை. 1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்.
1 அவு. வெண்ணெய். 1 சிட்டிக்கை உப்பு.
ஈரமாக்கிக்கொள்ளக் கொஞ்சம் பால்.

மாவு, சர்க்கரை, உப்பு, பேக்கிங் பவுடர் இவைகளைக் கலந்துகொண்டு, அதில் வெண்ணெயைப்போட்டு நன்ருய்க் கலந்து, நன்ருய் அடித்த மஞ்சள் கருவை அதில் சேர்த்து அதன்பின் நன்ருய் அடித்த வெள்ளைக் கருவையும் அதில் சேர்த்து அதில் கேக் செய்வதற்குத் தக்கபடி மொத்தையாயிருப்பதற்கு வேண்டிய அளவு பாலைச் சேர்த்துக்கொண்டு ஒரு தட்டையான டின்னில் வைத்து சுமார் 20 நிமிஷம் பேக் பண்ணி வெண்ணெயோடு சூடாகவே பரிமாறு.

44. RAGI BREAD

2 cups sour milk.
½ cup molasses.
3 cups ragi flour.
1 teaspoon salt.
2 teaspoons soda.
1 cup raisins.

Put soda in after other ingredients are mixed. If sweet milk is used instead of sour, use a small teaspoon of soda. Steam three hours or more if possible.

(*Ragi flour is obtainable at 4 annas a lb. from The F.I.N.S. Home, 3, Poonamallee High Road, Madras.*)

45. CAKE ICINGS

(*a*) Almond Paste

½ lb. ground almonds.
¾ lb. icing sugar and castor sugar mixed.
A little lime juice and egg to bind.

Put the ground almonds into a basin and sieve in the two kinds of sugar. Add the lime juice and enough beaten egg to form a soft dough. Knead it well by hand, roll out and use as required.

Colouring and different flavours may be added.

(*b*) Glace Icing

To half a pound icing sugar allow from 2 to 3 tablespoonfuls water, flavouring to taste.

Sieve the sugar and put it into a small saucepan with a little lemon juice or other flavouring. Add the water gradually, stirring with a wooden spoon over a gentle heat until lukewarm. It is of the right consistency when it will coat the back of the spoon. Care must be taken not to overheat the icing, or it will have a cloudy appearance. Pour it over the cake at once letting it run smoothly.

(*c*) Orange Glace Icing

Moisten the sugar with strained orange juice instead of water and add a little orange colouring.

44. ராகி ப்ரேட்

2 கோப்பை புளித்த பால்.	1 தேக்கரண்டி உப்பு.
$\frac{1}{2}$ கோப்பை மொலாஸஸ்.	2 தேக்கரண்டி சோடா.
3 கோப்பை ராகி மாவு.	1 கோப்பை ரேஸின்ஸ்.

எல்லாச் சரக்குகளையும் சேர்த்தபின் சோடாவைச் சேர்த்துக்கொள். புளித்த பாலுக்குப் பதிலாய் நல்ல பால் உபயோகிப்பதானுல் 2 தேக்கரண்டி சோடாவுக்குப் பதிலாய் 1 சிறு கரண்டி சோடா உபயோகிக்கவேண்டும்; 3 மணி நேரத்துக்கதிக மாகவே ஆவியில் வேகவேண்டும்.

[மதராஸ் பூனமல்லி ஹைரோட் 3-ம் நெ. வீட்டில் ஃப்ரண்ட் இன் நீட் சொஸைட்டியில் பவுண்ட் 4 அணு வீதம் ராகி மாவு கிடைக்கிறது.]

45. கேக் ஐஸிங்ஸ்

(a) ஆமண்ட் பேஸ்ட்

$\frac{1}{2}$ பவு. துருவிய வாதுமை.
$\frac{3}{4}$ பவு. ஐஸிங் சர்க்கரையும், கஸ்டர் சர்க்கரையும்.
கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசமும், முட்டையும்.

துருவிய வாதுமையை ஒரு பேஸினில் போட்டுக்கொண்டு அதில் இருவித சர்க்கரையையும் சலித்துச் சேர்த்துக்கொண்டு அது பிசைந்த மாவைப்போலா வதற்கு வேண்டிய அளவு எலுமிச்சம்பழ ரசத்தையும் அடித்த முட்டையையும் அதில் சேர்த்துக் கையினுல் நன்ருய்ப் பிசைந்து அப்பளம்போலிட்டு வேண்டிய படி உபயோகித்துக்கொள்.

அதில் நிறந்தரும் வஸ்துக்களும் பலவித மணம்தரும் வஸ்துக்களும் சேர்த் துக்கொள்ளலாம்.

(b) க்ளாஸி ஐஸிங்

$\frac{1}{2}$ பவுண்டு ஐஸிங் சுகருக்கு 2 முதல் 3 மேசைக்கரண்டி தண்ணீரும் ருசிக்கு வேண்டிய மணந்தரும் வஸ்துக்களும் சேர்த்துக்கொள்.

சர்க்கரையைச் சலித்து ஒரு சிறு ஸாஸ்பானில் கொஞ்சம் லெமன் ஜூஸ் அல்லது வேறு மணந்தரும் வஸ்துவோடு கலந்துபோட்டு ஒரு நிதானமான தீயில் கொஞ்சம் சூடாகும்வரை மரக்கரண்டியால் கலக்கிக்கொண்டே கொஞ்சம் கொஞ்சமாய்த் தண்ணீர் சேர்த்துக்கொள். அக்கலவையானது கரண்டியின் பின் புறம் ஒட்டிக்கொள்ளும்போது அது சரியான பக்குவம் ஆயிற்றென்று அறி. ஐஸிங்கை அதிகமாய்க் காய்ச்சாதபடி பார்த்துக்கொள். அப்படிப் பார்த்துக் கொள்ளாவிட்டால் ஐஸிங் புகைநிறமாகிவிடும். அதை எடுத்து உடனே கேக்கின்மீது நாலாபக்கமும் சரியாய் வழியும்படி ஊற்று.

(c) ஆரஞ்சு க்ளாஸி ஐஸிங்

சர்க்கரையில் வடிகட்டிய ஆரஞ்சுப்பழ ரசத்தைத் தண்ணீருக்குப் பதிலாக ஊற்றி கொஞ்சம் ஆரஞ்சு கலரிங்கும் சேர்த்துக்கொள்.

(*d*) Tea or Coffee Glace Icing

Mix with tea or coffee instead of water and add 2 or 3 drops of essence of vanilla.

(*e*) Strawberry and Raspberry Glace Icing

Mix with the fruit juice or syrup and add 2 or 3 drops of carmine.

(*f*) Chocolate Glace Icing

Shred 2 or 3 ozs. chocolate and dissolve it with as little water as possible. Add it to glace icing flavoured with vanilla and beat until smooth.

(*g*) Butter Icing or Filling

4 ozs. butter. 8 ozs. icing sugar.
Flavouring.

If the butter is salted it should be washed well and all the moisture pressed out in a cloth.

Beat it well with a wooden spoon and mix in sifted sugar gradually. Any flavouring or colouring may be added.

(*h*) Mocha Icing

Make as above and flavour with coffee essence or very strong black coffee.

(*i*) Chocolate Icing

Dissolve 2 ozs. of grated chocolate in 1 tablespoon of boiling water or milk. When cool mix with the butter icing.

(*d*) டீ அல்லது காஃபி க்ளாஸி ஐஸிங்

தண்ணீருக்குப் பதிலாய் டீ அல்லது காஃபியை ஊற்றிக் கலந்து அதில் 2 அல்லது 3 துளி வெனிலா எஸன்ஸ் சேர்த்துக்கொள்ளவும்.

(*e*) ஸ்ட்றபறி அண்ட் ராஸ்பறி க்ளாஸி ஐஸிங்

பழரசம் அல்லது சிரப்பை ஊற்றிக் கலந்து 2 அல்லது 3 துளி கார்மைன் சேர்த்துக்கொள்.

(*f*) சாக்கோலத் க்ளாஸி ஐஸிங்

2 அல்லது 3 அவுன்ஸ் சாக்கொலத்தைத் தூளாக்கி எவ்வளவு கொஞ்சமாயிருக்கலாமோ அவ்வளவு கொஞ்சம் வெந்நீரில் அதைக் கரைத்துக்கொண்டு வெனிலாவால் மணம் கொடுக்கப்பட்ட க்ளாஸி ஐஸிங்கில் சேர்த்து மெதுவுபடும் வரை அடித்துக்கொள்.

(*g*) வெண்ணெய் ஐஸிங் அல்லது பூரணம்

4 அவு. வெண்ணெய். 8 அவு. ஐஸிங் சுகர்.

மணம்தரும் வஸ்து.

வெண்ணெய் உப்பு கலந்ததாயிருந்தால் அதை நன்ருய்க் கழுவி ஒரு துணியில் போட்டு ஈரத்தையெல்லாம் போக்கிவிடவேண்டும்.

அந்த வெண்ணெயை ஒரு மரக்கரண்டியால் நன்ருய் அடித்து அதில் சலித்த சர்க்கரையைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதில் எந்த மணம் அல்லது நிறம்தரும் வஸ்துவையும் சேர்த்துக்கொள்ளலாம்.

(*h*) மோக்கா ஐஸிங்

மேலே சொன்னபடி செய்துகொண்டு அதில் காஃபி எஸன்ஸை மணம் தரும்படி சேர்க்கவேண்டும். அந்த எஸன்ஸானது கருங் காஃபிக் கஷாயமாயும் இருக்கலாம்.

(*i*) சாக்கோலத் ஐஸிங்

2 அவுன்ஸ் துருவிய சாக்கொலத்தை ஒரு மேசைக்கரண்டி கொதிக்கிற வெந்நீர் அல்லது பாலில் கரைத்து ஆறியபின் அதை பட்டர் ஐஸிங்கோடு கலந்துகொள்.

NOTES

SWEETS

To test when Fudges are sufficiently cooked

Drop a few drops in cold water, and if it forms a firm soft ball, it is done.

Alternative Test—Place a few drops in a clean teaspoon and stir vigorously with a match. It should get thick and creamy in a few seconds and clearly show signs of setting.

After fudge is sufficiently cooked allow it to cool slightly before commencing to beat it.

A pinch of cream of tartar added to fudge just before it is done helps to make it creamy.

1. MARZIPAN DATES

3 ozs. icing sugar. 3 ozs. castor sugar.
6 ozs. ground almonds. Almond and vanilla essence.
White of an egg to mix.

Remove stones from dates and insert a roll of marzipan paste made as follows :—

Sieve icing sugar, mix well with the ground almonds to a stiff consistency with the white of an egg. Divide into portions and colour pink and green. To finish, roll dates in castor sugar.

Cherries and prunes may be stuffed in the same way. Almonds may be inserted instead of the paste.

2. COCOANUT FUDGE

1 cup grated cocoanut. 1 cup brown sugar.
1 cup white sugar. 1 cup milk or cocoanut milk.
Butter size of an egg.

Boil all the ingredients together until a drop sets in water. Beat well and pour on buttered tin, when set cut in squares.

ஸ்வீத்ஸ்

ஃபட்ஜஸ் பதமாயிற்று என்று அறிய

அதில் சில துளிகளை எடுத்துத் தண்ணீரில் சொட்டவிடு; பதமாயிருந்தால் அது ஒரு கெட்டியான மழமழப்புள்ள உருண்டையாகும்.

ஒரு சுத்தமான தேக்கரண்டியில் சில துளிகள் விட்டுக் குச்சியால் வேகமாய்க் கிளறினால், பதமாயிருந்தால் சில விநாடிக்குள் அது தடிப்பாகி க்றீமைப் போலிருக்கும்; கெட்டிப்படும் குறிகள் தெளிவாய்த் தெரியும்.

அல்லது

ஃபட்ஜானது பதமாக வெந்தபின், மறுபடியும் அதைத் தீயில் வைக்கும்முன் அதைக் கொஞ்சம் ஆறவை.

அது பூர்த்தியாகும்முன் அதில் ஒரு சிட்டிக்கை க்றீம் அஃப் டார்டர் சேர்த்தால் அது சுலபமாய் க்றீமைப்போலாகும்.

1. மார்சிபன் டேட்ஸ்

3 அவு. ஐஸிங் சர்க்கரை.
3 அவு. கஸ்டர் சர்க்கரை.
6 அவு. தூளாக்கின வாதுமைப்பருப்பு.
ஆமெண்ட் எஸன்ஸ் வெனிலா எஸன்ஸ்.
கலப்பதற்கு ஒரு முட்டை வெள்ளைக்கரு.

டேட்ஸ் பழங்களின் கொட்டைகளை எடுத்துவிட்டு, அடியில் கண்டபடி செய்த மார்சிபன் பேஸ்டில் கொஞ்சம் ஒவ்வொரு பழத்திற்குள்ளும் வை:—

ஐஸிங் சர்க்கரையைச் சலித்துக்கொண்டு தூளாக்கிய வாதுமைப்பருப்பையும் முட்டையின் வெள்ளைக்கருவையும் அதில் போட்டுக் கெட்டியாகக் கலந்து பல பாகங்களாக்கிச் சிலவற்றைச் சிவப்பாகவும் சிலவற்றைப் பச்சையாகவும் சாயமேற்றி வைத்துக்கொள். கடைசியில் டேட்ஸை கஸ்டர் சர்க்கரையில் புரட்டி எடு.

அதே பேஸ்டைச் செறீஸ், ப்ரூன்ஸ் என்னும் பழங்களிலும் வைக்கலாம். அந்தப் பேஸ்டுக்குப் பதிலாக வாதுமைப் பருப்பை அப்பழங்களுக்குள் வைக்கலாம்.

2. கோக்கோனட் ஃபட்ஜ்

1 கோப்பை துருவிய தேங்காய்.
1 கோப்பை ப்ரௌன் சுகர்.
1 கோப்பை வெள்ளைச் சர்க்கரை.
1 கோப்பை பால் அல்லது தேங்காய்ப்பால்.
முட்டையளவு வெண்ணெய்.

மேலே கண்ட சரக்குகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கொதிக்கவை. கொதிப்பதில் ஒரு துளியைத் தண்ணீரில் சொட்டுவிட்டுப்பார். அது கெட்டிப்படுமானால் கொதித்தது போதுமென்று அறி. அப்படிப் பதமாய்க் கொதித்ததை நன்றாய் அடித்து வெண்ணெய் தடவிய டின்னில் ஊற்று. அது கெட்டிப்பட்டதும் சதுர பில்லைகளாக்கிக்கொள்.

3. PEPPERMINT CREAM

Whites of two eggs and as much icing sugar as will form a stiff paste. A few drops peppermint essence.

Mix well and roll out ¼ inch thick, cut into rounds and place on paper to set.

4. BUTTER BALLS

1 lb. ground almonds.	1 oz. butter.
¼ lb. icing sugar.	Coffee essence.
¼ lb. loaf sugar.	1 tablespoon water.

Mix the ground almonds with the icing sugar, add the butter and mix all together till a smooth paste is formed, add enough coffee essence to make the mixture the desired colour, and form into balls. Make a syrup of the loaf sugar and a tablespoonful of water, and boil for 5 to 10 minutes, or until syrup forms a hair when dropped off a spoon. Pick the balls up one at a time on the point of a hat pin, and dip into the boiling syrup. Let the superfluous syrup run off, then put on a sieve to drain. These sweets may be flavoured with melted chocolate instead of the coffee essence. Walnuts, almonds or Brazil nuts may be dipped in the syrup.

These sweets soon melt and become sticky in humid weather.

5. TURKISH DELIGHT

1 lb. white sugar.	1 lime.
½ large cup milk.	½ orange.
5 leaves gelatine.	Rose essence.

(1 tablespoon mixed rum and whisky—optional.)

Soak the gelatine in a little cold water. Mix the sugar and milk in saucepan with the juice and rind of the lime and orange, bring to the boil, add gelatine and cook until well mixed stirring constantly. Remove from fire and add flavouring. Pour on to buttered or wet tins to a depth of about an inch. Set in cool place, cut in squares and roll in icing sugar.

Different flavourings and colourings may be used.

3. பெப்பர்மின்ட் க்றீம்

2 முட்டைகளின் வெள்ளைக்கரு.
ஐஸிங் சர்க்கரை, (கெட்டி பேஸ்ட் ஆவதற்கு).
பெப்பர்மின்ட் எஸன்ஸ் (சில துளிகள்).

அவற்றையெல்லாம் நன்ருய்க் கலந்து $\frac{1}{4}$ அங்குல கனத்துக்கு அடையாக்கிக் கொண்டு, அதைச் சிறு வட்டங்களாகத் துண்டரித்து, கெட்டிப்படும்படி காகிதத்தின் மேல் வை.

4. பட்டர் பால்ஸ்

1 பவு. தூளாக்கின வாதுமை.	1 அவு. வெண்ணெய்.
$\frac{1}{4}$ பவு. ஐஸிங் சர்க்கரை	காஃபி எஸன்ஸ்.
$\frac{1}{4}$ பவு. லோஃப் சர்க்கரை.	1 மேசைக்கரண்டி தண்ணீர்.

தூளாக்கின வாதுமையையும், ஐஸிங் சர்க்கரையையும் கலந்துகொண்டு அதில் வெண்ணெயைச் சேர்த்து எல்லாவற்றையும் இளகிய பேஸ்டாகப் பிசைந்து கொள். கலவை விரும்பிய நிறம் ஆவதற்கு வேண்டிய காஃபி எஸன்ஸ் சேர்த்துக்கொண்டு உருண்டைகள் ஆக்கிக்கொள். லோஃப் சுகரையும் ஒரு மேசைக் கரண்டி தண்ணீரையும் சேர்த்து ஸிரப் ஆக்கி 5 முதல் 10 நிமிஷநேரம் வரை அல்லது ஸிரப்பை ஒரு கரண்டியில் எடுத்து ஊற்றினல் கம்பிபோல் விழுகிற வரை கொதிக்க வை. அவ்வுருண்டைகளைத் தடவைக்கு ஒன்ருகக் கோணி யூசி முனையால் குத்தி எடுத்து, கொதிக்கிற ஸிரப்பில் தோய்த்து எடுத்து அதிகமாய் ஒட்டிக்கொண்டிருக்கும் ஸிரப்பை மொத்த ஸிரப்பிலேயே விழவிட்டு, பிறகு ஒரு சல்லடையில் வைத்து மற்றுமுள்ள ஸிரப்பை இறுத்துவிடு. இந்த ஸ்வீத்களுக்கு, காஃபி எஸன்ஸுக்குப் பதிலாய் உருக்கின சாக்கொலத் உபயோகித்து மணமாக்கலாம். வால்நட்ஸ் அல்லது வாதுமை அல்லது ப்ரசில் நட்ஸ் உபயோகிக்கலாம்.

இந்த ஸ்வீட்கள் மழைகாலத்தில் சீக்கிரமாய் உருகி பசையுள்ளதாகிக் கையில் ஒட்டிக்கொள்ளும்.

5. தற்கிஷ் டிலேட்

1 பவு. வெள்ளைச் சர்க்கரை.	1 எலுமிச்சம் பழம்.
$\frac{1}{2}$ பெரிய கோப்பை பால்.	$\frac{1}{2}$ ஆரஞ்சு பழம்.
5 துண்டு ஜெலட்டின்.	ரோஸ் எஸன்ஸ்.

இஷ்டமானல் (விஸ்கியும், ரம்மும் கலந்தது 1 மேசைக்கரண்டி)

ஜெலட்டினைக் கொஞ்சம் தண்ணீரில் ஊறவை. ஒரு ஸாஸ்பானில் பாலும் சர்க்கரையும் கலந்து அதில் எலுமிச்சம் பழம் ஆரஞ்சு பழம் இவைகளின் ரசத்தையும் தோலையும் சேர்த்துக் கொதிக்கவைத்துக் கொதிவருகையில் ஜெலட்டினைச் சேர்த்து எல்லாம் நன்ருய்க் கலக்கும்வரை விடாமல் கிளறிக்கொண்டே வேகவை. பிறகு அடுப்பிலிருந்து எடுத்து மணத்துக்கு வேண்டியவைகளைச் சேர்த்துக்கொள். அதன்பின் வெண்ணெய் தடவிய அல்லது தண்ணீரில் நனைத்த டின்னில் சுமார் ஒரு அங்குல கனத்துக்கு ஊற்றி, குளிர்ச்சியாயுள்ள இடத்தில் கெட்டிப்படவைத்து, சதுர பில்லைகளாக அறுத்து, ஐஸிங் சர்க்கரையில் புரட்டி எடுத்துக்கொள்.

வெவ்வேறு மணமும் நிறமும் தரும் சரக்குகளையும் உபயோகிக்கலாம்.

6. SWISS MILK TOFFEE

2 lbs. brown sugar.	1 tin Swiss milk.
1 cup cocoanut milk.	4 ozs. butter.

Mix butter, Swiss milk and cocoanut milk in pan. When melted, add sugar. Stir all the time for 25 minutes. When it sets in cold water, flavour and pour into buttered tin.

7. TUTTI FRUTTI

2½ cups brown sugar.	1 cup chopped nuts.
1 cup milk.	1 tablespoon butter.
½ cup chopped dates.	½ cup chopped figs.

1 teaspoon vanilla.

Boil 5 to 8 minutes, or until it sets in cold water, stir until creamy, add nuts and fruit and pour on buttered tins.

8. CHOCOLATE FUDGE (Plain)

2 cups sugar.	1 cup milk.
1 oz. butter.	2 ozs. chocolate.

Pinch of salt.

Mix sugar and chocolate, add milk and butter and salt and boil until it sets in cold water. Beat to a thick cream and pour into buttered tins. Nuts may be added.

9. DIVINITY FUDGE

2 cups white sugar.	1 cup nuts.
½ cup golden syrup.	1 teaspoon vanilla.
½ cup water.	Whites of 2 eggs.

Mix syrup and water, and pour over sugar. Boil slowly without stirring until it sets in water, then pour very slowly over the egg whites which must be beaten very stiff. Beat vigorously until thick. Add nuts and flavouring. Drop or spread on buttered paper and cut.

6. ஸ்விஸ் மில்க் டாஃபி

2 பவு. ப்ரௌன் சுகர். 1 டின் ஸ்விஸ் மில்க்.
1 கோப்பை தேங்காய்ப்பால். 4 அவு. வெண்ணெய்.

ஒரு பானில் வெண்ணெயும், ஸ்விஸ் மில்க்கும், தேங்காய்ப்பாலும் சேர்த்துக் கலக்கிக் காய்ச்சு. அந்த வெண்ணெய் உருகினதும் சர்க்கரை சேர்த்து, 25 நிமிஷ நேரம் விடாமல் கிளறிக்கொண்டிரு. குளிர்ச்சியாயுள்ள தண்ணீரில் அது கெட்டிப்படும்போது வாசனை சரக்குகள் சேர்த்து அதன் பிறகு வெண்ணெய் தடவிய டின்னில் ஊற்று.

7. துட்டி ஃப்ருட்டி

$2\frac{1}{2}$ கோப்பை ப்ரௌன் சுகர். 1 கோப்பை துண்டரித்த வாதுமை முதலிய பருப்புகள்.
1 கோப்பை பால்.
